இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுடர் 32 | கதிர் 146 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 08 வெள்ளிக்கிழமை 21.04.2017


## ரயிலுடன் மோதுண்டு குடும்பத்தலைவர் பரிதாப உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 21
மோட்டார் சைக்கிளில், தொடருந்துப் பாதையைக் கடந்தபோது தொடருந்து மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் வவுனியா கொக்குவெளிப் பகுதியில் >> 24

## பாவனைக்கு உதவாத ரி56 துப்பாக்கிகள் 82 முகமாலையில் மீட்பு

கண்ணிவெடி அகற்றும் பணியின்போது

கிளிநொச்சி. ஏப். 21
கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் பாவனைக்குதவாத நிலையில் 82 துப்பாக்கிகளின் பாகங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. இந்தத் துப்பாக்கிப் பாகங்கள் ரி56 இரகத்தைச் >> 24





## இராணுவத்திடம் என் தென்னைகள் நான் தண்ணீரிலேயே கறிசமைக்கின்றேன்

தன் அவல நிலையை எடுத்து விளக்குகிறார் கேப்பாபிலவு மூதாட்டி



முல்லைத்தீவு, ஏப். 21
எனது தோட்டத்தில் தேங்காய் குவியலாகக் கிடப்பதாக நேற்று முன்தினம் கிராமத்துக்குள் சென்று வந்தவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இங்கு தண்ணீரில் கறி வைத்தே நானும் கணவரும் சாப்பிட்டு உயிர் வாழ்கிறோம் எனக் கேப்பாபிலவில் இராணுவத்திடம் தனது 3 ஏக்கர் தென்னம் காணியைப் >> 24

## வவுனியா சிறையில் கைதி சாவு

வவுனியா, ஏப். 21
வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சுகவீனம் >> 04

## யாழ். பண்ணையிலுள்ள 2 முகாம்களை நகர்த்த இராணுவம் தீர்மானம்

யாழ்ப்பாணம் ஏப் 21
யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள 2 இராணுவ முகாம்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக அந்த இடங்களிலிருந்து இராணுவம் நகர்த்தவுள்ளதாக >> 23

## 5,000 ஏக்கர் தனியார் காணிகள் குடாநாட்டில் படையினர் வசம்

யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும், முப்படையினர் வசம் 5 ஆயிரம் ஏக்கர் தனியார் காணி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. >> 23

# வடக்கு மீள்குடியமர்வு 3 மாதங்களுள் முழுமை

### அரச தலைவர் மைத்திரிபால நேற்று அறிவிப்பு
### மக்கள் போராட்டங்களையும் கவனத்தில் கொள்வதாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 21
வடக்கில் மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ள 40 வீதமான மக்கள் இன்னும் 3 மாதங்களில் மீள்குடியேற்றப்பட்டுவிடு வர். அத்துடன் வடக்கில் தற்போது நடைபெற்றுவரும் போராட்டங்கள் தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தியுள்ளது.
இவ்வாறு தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். >> 24



## காக்கைவன்னியன் போல இப்போதும் எம்முள் சிலர்

பண்டாரவன்னியன் சிலை திறப்பு விழாவில் முதலமைச்சர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 21
காக்கைவன்னியன் போன்று சுயநலச் சிந்தனையுடன் சதி வேலைகளில் எம்முள் சிலர் ஈடுபடுவது முழுத் தமிழர் சமுதாயத்தையும் அழித்து விடும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். >> 24

## 20,000 பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் நியமனம்

அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21
அரச சேவைக்கு 20 ஆயிரம் பட்டதாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை சுதந்திரப் பட்டதாரிகளின் சங்கத் தலைவரும் அமைச்சருமான ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். >> 24

## காணாமற்போனோர்; அரசு கரிசனையாம்

கொழும்பு, ஏப். 21
வடக்கில் காணாமற்போனோர் முன்னெடுக்கும் போராட்டம் தொடர்பில் கரிசனை எடுத்துள்ளதாகவும், இதற்குத் தீர்வை வழங்குவதற்குச் சிறப்புச் செயற்றிட்டத்தைத் தயாரிக்க எதிர்பார்ப்பதாகவும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். >> 24

## நிறைவேற்றதிகாரம் ஒழிக்கப்பட்டே தீரும்

மைத்திரி நேற்றுத் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 21
நிறைவேற்று அரச தலைவர் முறைமை ஒழிக்கப்படும். நான் வழங்கிய வாக்குறுதியை மறக்கமாட்டேன்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். >> 24

## இரு வாரங்களில் இடைக்கால அறிக்கை வரும்

மைத்திரி நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 21
அரசியல் நிர்ணய சபையின் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நான் பணிப்புரை விடுத்துள்ளேன். இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்று நம்புகிறேன். >> 24

## குடாரப்புவில் சிக்கிய கஞ்சா



கிளிநொச்சி, ஏப் 21
கடற்படை வழங்கிய தகவலை அடுத்து வடமராட்சி கிழக்குக் குடாரப்புப் பகுதியில் விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்ட 6 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகப் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டார தெரிவித்தார். >> 24

## அம்பன்–குடத்தனையில் மணல் அகழ்வுக்கான பேச்சில் முடிவு இல்லை

இன்றும் தொடரும் என்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21
வடமராட்சி கிழக்கு – அம்பன் குடத்தனைப் பகுதிகளிலிருந்து குடாநாட்டுக்குத் தேவையான மணலை அகழ்வதற்கு அந்தப் பகுதி மக்களுடன் நேற்று நடத்திய பேச்சுக்களில் சாதகமான முடிவுகள் எட்டப்படவில்லை. இன்றைய தினமும் இரண்டாவது >> 23

## கிளிநொச்சியில் 27ஆம் திகதி முழு அடைப்பு

கிளிநொச்சி, ஏப்.21
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுவிப்பையும் வலியுறுத்தி எதிர்வரும் வியாழக்கிழமை 27ஆம் திகதி கிளிநொச்சியில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கம் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. விரிவு: பக். 12

## குப்பைகளை அகற்றுவது அத்தியாவசிய சேவை

நள்ளிரவில் இருந்து நடைமுறைக்கு சிறப்பு வர்த்தமானி மூலம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 21
நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சிசபைகளும் குப்பைகளை அகற்றுவதை அத்தியாவசிய சேவையாக >> 04

## கிளிநொச்சியில் தனியார் காணிகளை விடுவிக்க ராணுவம் நேற்று இணக்கம்


கிளிநொச்சி, ஏப். 21
கிளிநொச்சி மாவட்டத்தின் காணி விடுவிப்புக்கள் தொடர்பில் பாதுகாப்புத் தரப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அரச அதிகாரிகள் ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை ஆரம்பத்தில் சமர்பித்தனர். இருப்பினும் இறுதியில், அவை சீர்செய்யப்பட்டன. இதனடிப் படையில் மாவட்டத்தில் உள்ள தனியார் >> 04

## சிங்கள மருத்துவ நிபுணர்களே வடக்கில் அதிகம் கடமையில்

வடக்கு சுகாதாரத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 21
வடக்கு மாகாணத்தில் தமிழ் மருத்துவ நிபுணர்களை விட, சிங்கள மருத்துவ நிபுணர்களே அதிகம் பணியாற்றுகின்றனர். ஆனாலும் 47 மருத்துவ வெற்றிடங்கள் இன்னமும் நிரப்படாத நிலைமையே >> 24



# காத்திருப்பு

கொழும்பு, ஏப். 21
மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிந்த இடத்தில், புதைந்துபோன வீட்டின் சிதைவுகளின் மீது கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் நாய் ஒன்று படுத்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.
மீதொட்டமுல்லவில் உள்ள 300 அடி உயரமுள்ள குப்பைமேடு அருகில் இருந்த வீடுகளுக்கு மேல் சரிந்து விழுந்தது. இதுவரை 33 பேர் சாவடைந்துள்ளனர். மேலும் 50 பேரை தேடும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.
புதைந்துபோன வீட்டின் சிதைவுகளின் மீது கடந்த 14ஆம் திகதி தொடக்கம் நாய் ஒன்று படுத்திருக்கின்றது. பல நாள்களாக உணவு, நீரின்றி இந்த நாய் அங்கு அமர்ந்திருக்கின்றது. தனது எஜமானை காணாமல் இந்த நாய் தவித்து வருகிறது. தனது எஜமான் உயிரோடு மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையில் இந்த நாய் காத்திருப்பதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். (த-10)

# ஐ.நா. தீர்மானத்துக்கு இரு வருடங்களின் பின்னரே அரசு பதில்

## இப்போது எதுவும் கூறமுடியாது என்கிறார் அரச தலைவர் மைத்திரி

கொழும்பு, ஏப். 21
இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்துக்கு இரண்டு வருடங்களின் பின்னர்தான் பதிலளிப்போம். இப்போது எதுவும் கூற மாட்டோம்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அரச தலைவர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்துக்குப் பதிலளிப்பதற்கு எமக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்குப் பின்புதான் நாம் பதிலளிக்கப் போகிறோம். அதற்கு முதல் நாம் எதுவும் கூறவேண்டியதில்லை. அதற்கான அவசியமும் இல்லை.



இந்த விவகாரத்தில் நாட்டின் இறைமை, நீதிபரிபாலனம், பாதுகாப்பு ஆகியவற்றுக்குக் குந்தகம் ஏற்படாதவாறு அரசு செயற்படும். நாட்டைப் பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு - என்றார். (த-4)

# கடும் மழை பெய்தால் குப்பைமேடு மேலும் சரியும்

பல உயிர்களைக் காவுகொண்டு ஏராளமான உடமைகளுக்குப் பெரும் சேதம் விளைவித்த மீதொட்டமுல்ல குப்பைமேட்டின் மற்றொரு பகுதி, கடும் மழை பெய்தால் சரியக்கூடிய அபாயத்தில் உள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா எச்சரிக்கை விடுத்துள்ளார்.
இந்த இடத்தில் கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட தீவிர பரிசோதனையின் பின்னரே அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அபாய வலயங்கள் ஏற்கனவே அடையாளம் இடப்பட்டிருக்கின்றன. மழை தொடர்ந்து பெய்தால் அபாய வலயங்களிலுள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் மேலும் கூறினார். (த-4)

## மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவு;

# எச்சரிக்கையை அரசு உதாசீனம்

கொழும்பு, ஏப். 21
மீதொட்டமுல்ல குப்பைமேடு தாழிறங்குவது பற்றி ஒரு வருடத்துக்கு முன்பே தாங்கள் விடுத்த எச்சரிக்கை முற்றாக உதாசீனம் செய்யப்பட்டதாலேயே இந்த இடர் நடந்திருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்சரிவு மற்றும் அபாய வலயப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ்.பண்டார குற்றஞ்சாட்டியிருக்கிறார்.
கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மட்டுமன்றி, கோட்டே மாநகர சபை பிரதேசத்திலும், தெஹிவளை கல்கிஸை மாநகர சபை பிரதேசத்திலுமிருந்து நாளாந்தம் கொண்டு வரப்படும் ஆயிரத்து 100 தொடக்கம் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் குப்பைகள் மீதொட்டமுல்லயில் குவிக்கப்பட்டு வந்தன. மலையெனக் குவிந்துவந்த இந்தக் குப்பையை உரிய முறையில் அகற்றச் சரியான திட்டங்கள் வகுக்கப்படாமல் அசட்டை செய்யப்பட்டு வந்ததே இந்தப் பெரும் இடருக்குக் காரணம் என்று அவர் மேலும் கூறினார். (த-4)

# 2ஆவது உலக சைவ மாநாடு பல்கலையில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையின் ஏற்பாட்டில் இரண்டாவது உலக சைவ மாநாடு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 2 நாள்கள் நடைபெறவுள்ளது.
முதலாம்நாள்நிகழ்வின் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து சிறப்பிப்பார். (த-ரி)

# கழிவகற்றல் முகாமைத்துவ திட்டம் தயாரிப்பதற்கு குழு

## நியமித்தார் தலைமை அமைச்சர்

கொழும்பு, ஏப். 21
கொழும்பில் கழிவகற்றல் முகாமைத்துவம் செய்வதற்கான யோசனைகளை முன்வைப்பதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சுகளுக்கு இடையிலான குழுவொன்றை நியமித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தக் குழுவில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், சுற்றாடல், இடர் முகாமைத்துவம், மேல் மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களின் செயலாளர்கள் அடங்கியுள்ளனர்.
30 நாள்களுக்குள் கழிவகற்றல் முகாமைத்துவத்துக்கான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தலைமை அமைச்சர் இந்தக் குழுவுக்கு அறிவித்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்தார்.
இதற்கமையக் குப்பைகளை வகைப்படுத்தல், மீள்சுழற்சி, கொழும்பில் குப்பைகள் சேருவதால் கழிவுகள் நிலத்தில் படிவதைத் தடுப்பதற்கான முறைமை உள்ளிட்ட பல்வேறு யோசனைகளை இந்தக் குழு, தலைமை அமைச்சரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.
அறிக்கை தலைமை அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் பத்மசிறி குறிப்பிட்டார். (த-4)

# மாவா வைத்திருந்தனரென நான்கு இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 21
தடை செய்யப்பட்ட போதைப்பொருளான மாவா வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்கள் வெவ்வேறு இடங்களில் வைத்து யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
கொட்டடி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் 31 கிராம் 190 மில்லி கிராம் மாவாவுடன் மானிப்பாய்ச் சந்தியில் வைத்தும், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் 59 கிராம் 340 மில்லி கிராம் மாவாவுடன் ஓட்டுமடத்தில் வைத்தும், கொட்டடிப் பகுதியை சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் 59 கிராம் 349 மில்லி கிராம் மாவாவுடன் மனோகராச் சந்தியில் வைத்தும், யாழ்ப்பாண நகரப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் 30 கிராம் 830 மில்லி கிராம் மாவாவுடன் யாழ்.. ஐந்து சந்தியில் வைத்தும் கைதுசெய்யப்பட்டனர். (த-ரி1)

# காணாமற்போனோர் குறித்து மே 17 மைத்திரியுடன் பேச்சு

## போராட்டத்தில் ஈடுபடும் உறவுகளிடம் வடக்கு முதலமைச்சர் நேற்றுத் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 21
காணாமற்போனோர் குறித்து மே மாதம் 17 ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்துப் பேசவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் 44ஆவது நாளாக அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள காணாமற் போனோரின் உறவினர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
காணாமற்போனோர் விடயத்துக்கு உரிய தீர்வு கோரி முல்லைத்தீவு மாவட்டக் காணாமற்போனோரின் உறவினர்கள் மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று 44ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.
முல்லைத்தீவில் பண்டாரவன்னியனின் சிலையைத் திறந்துவைக்க வந்த வடக்கு முதலமைச்சர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.



"எங்கள் பிள்ளைகளை இராணுவத்தின் கைகளில் கொடுத்தோம். அதற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும். நாங்கள் அலையாத இடம் இல்லை. எங்களுக்கு விரைவாகத் தீர்வை பெற்றுத் தாருங்கள்' என பாதிக்கப்பட்ட மக்கள் முதலமைச்சரிடம் கோரினர்.
இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசுக்குத் தொடர் அழுத்தங்கள் வழங்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி அரச தலைவருடன் சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது. அடுத்த நாள் மே 18 இறுதிப் போரில் உயிர் நீத்த மக்களுக்கு அஞ்சலி செய்யவேண்டி உள்ளதால் அன்றைய தினம் சந்திப்பது பொருத்தமாக அமையாது. எனவே உங்கள் விடயம் தொடர்பாக அரச தலைவரைச் சந்திக்கும்போது வலியுறுத்துவேன் - என்றார். (த-7)

# கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்கு யாழ்ப்பாணத்துக்கு ரூபா 20 மில்லியன்

## *கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தகவல்*

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த வருடம் 20.98 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்த ஆடு,மாடு, வழங்கல், கால்நடைகளுக்கான கொட்டில்களை அமைத்துக் கொடுத்தல், மாட்டுக்கான புல் வளர்ப்பு ஆகியவற்றுக்கான உதவிகளை வழங்கவுள்ளோம்.

தலா 40 கோழிக் குஞ்சுகள் 31 பேருக்கும், தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் 20 பேருக்கும் வழங்கப்படவுள்ளன. 25 பேருக்கு ஆட்டுக் கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. 150 பேருக்கு மாட்டுக் கொட்டில்கள் அமைக்க உதவி வழங்கப்படும். 5 பேருக்கு மாட்டுக்குத் தேவையான புல் வளர்க்க உதவி வழங்கப்படும். இந்தத் திட்டங்களை அடுத்த மாதம் முதல் செயற்படுத்தவுள்ளோம்.

இவ்வாறான உதவிகள் மக்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் மக்களின் அதிக பங்களிப்பையும்; ஆர்வத்தையும் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (து-ரி)

# மீதொட்டமுல்ல இடருக்கு மகிந்தவே முழுப் பொறுப்பு

## *ஜே.வி.பி. குற்றச்சாட்டு*



மீதொட்டமுல்லயில் இடம்பெற்ற இடருக்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவே பொறுப்புக் கூற வேண்டும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பரப்புரைச் செலாளருமான விஜித ஹேரத் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீதொட்டமுல்ல இடரானது தற்போது தேசியப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. எனினும், இந்தப் பிரச்சினையின் பாராதூரத்தை இன்னும் இந்த அரசு உணர்ந்ததாகத் தெரியவில்லை.

நீண்ட காலமாக நிலவிவரும் இந்தப் பிரச்சினைக்கு இதுவரையிலும் ஆட்சிசெய்த அரசுகள் தற்காலிகத் தீர்வுகளை முன்வைத்துவந்தனவே ஒழிய, நிரந்தரத் தீர்வொன்று முன்வைக்கப்படாதமையே இந்த இடர் இடம்பெறக் காரணமாக அமைந்திருந்தது.

புளுமெண்டல் குப்பைகளை மீதொட்டமுல்லயில் கொட்டும்போதே மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து, ஆர்ப்பாட்டங்களையும் உணவுஒறுப்புப்போராட்டங்களையும் நடத்தினார்கள். எனினும், அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய பொலிஸாரையும் இராணுவத்தையும் பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தி, 2008 ஆம் ஆண்டில் அங்கு குப்பைகளைக் கொட்டுவித்தார்.


உண்மையில், இதன் பின்னணியில் பெரிய மாபியாவே இருக்கின்றது. அரசியல்வாதிகளும் பணம் சம்பாதிக்கும் குழுவினரும் தான் இங்குள்ள குப்பைகளை அகற்றுவதற்குத் தடையாக இருந்துள்ளனர்.

அப்போதே இங்குள்ள குப்பைகளை அகற்ற 180 தனியார் நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதனால் ஏற்படும் இலாபத்தில் அரசுக்கும் ஒரு பங்கு தருவதாக அவை தெரிவித்துள்ளன. அப்போதே இதனை செய்திருந்தால் இன்று இந்நிலைமை ஏற்பட்டிருக்காது என்றார். (த-4)

# வடக்கில் படுத்துக்கொண்ட பழைய இரும்பு வியாபாரம்

## *இந்தியாவில் இருந்து உருக்கப்பட்ட இரும்பு இலங்கைக்கு இறக்குமதியாவதே காரணம்*







யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாணத்தில் பழைய இரும்பு வியாபாரம் வீழ்ச்சி கண்டு வருவதாகவும், இதனால் பழைய இரும்புப் பொருள்கள் தேங்கிக் கிடப்பதாகவும் பழைய இரும்பு வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கு முழுவதும் இந்த நிலைமையே ஏற்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் கூறினர்.

கொழும்பில் உள்ள இரும்பு உற்பத்தி ஆலைகள் இந்தியாவில் இருந்து உருக்கப்பட்ட இரும்புக் குற்றிகளைக் கொள்வனவு செய்வதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பழைய இரும்பு வியாபாரிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கடந்த இரண்டு வருடங்களாக இரும்பு ஏற்றுமதியில் ஈடுபடும் ஆர்.எம். அயாஸ் (சிந்து) தெரிவித்ததாவது:

ஆரம்பத்தில்சில்லறைவியாபாரிகள் பழைய இரும்புகளைப் பல்வேறு இடங்களில் இருந்தும் சேமித்து எமக்குத் தருவார்கள். அவர்கள் ஒரு கிலோ பழைய இரும்பை 40 முதல் 50 ரூபாவுக்குக் கொள்வனவு செய்வார்கள். எமக்கு ஒரு கிலோ இரும்பை 60 ரூபாவுக்குத் தருவார்கள்.

கொழும்பில் இருந்து வரும் பாரவூர்த்திகள் எம்மிடம் உள்ள இரும்பை ஒரு கிலோ 68 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து ஏற்றிச் செல்லும். இது எமக்கு இலாபம் தரக் கூடிய வியாபாரமாக இருந்தது.

ஆனால் இப்போது இந்தியாவில் இருந்து இரும்பு உருக்கப்பட்டுக் குற்றி வடிவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்த உருக்கிய இரும்புக் குற்றிகள் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதனால் இங்குள்ள பழைய இரும்பை ஏற்றிச் செல்வதற்குக் கொழும்பில் இருந்து பாரவூர்திகள் வருவது மிகவும் குறைந்துள்ளது. குறைந்த விலையில் இரும்பு கொள்வனவு செய்வதையே அவர்கள் விரும்புகின்றார்கள்.

முன்னர் ஒரு மாதத்தில் 2 அல்லது 3 தடவைகள் பழைய இரும்பை ஏற்றுவதற்காகப் பாரவூர்திகள் யாழ்ப்பாணம் வரும். இப்போது அது வெகுவாகக் குறைவடைந்துள்ளது. இங்கு பழைய இரும்புகளை ஒரு கிலோ 60 ரூபா விலையில் நாம் கொள்வனவு செய்து வைத்துள்ளோம். ஆயினும் கொழும்பில் இருந்து வரும் பாரவூர்திகள் பழைய இரும்பை ஒரு கிலோ 30 ரூவாவுக்குத் தருமாறு கேட்கின்றனர். அப்படிக் கொடுத்தால் எங்களுக்குப் பெரும் நட்டம் ஏற்படும். அவ்வாறு நட்டப்பட்டு இப்போது 10 முதல் 15 பழைய இரும்புக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

மீதமுள்ள கடைகள் மூடப்படாமல் இருக்கவேண்டுமானால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உருக்கிய இரும்பை நிறுத்த வேண்டும். இப்போது பாரவூர்தி இரும்புகளை ஏற்ற எப்போது வரும் என்பது கூடத் தெரியாமல் உள்ளது. பழைய இரும்பு சேகரிப்பவர்கள் விலை குறைத்துச் சேகரித்தால் அந்த லாபம் அவர்களுக்குப் போதுமானதாக இருக்காது - என்றார். (து-ரி)

# யாழ். மாநகரில் பொலித்தீனுக்குத் தடா

## *பூமி தினமான நாளை முதல் நடைமுறைக்கு*

யாழ்ப்பாணம், ஏப். 21

பூமி தினமான நாளை சனிக்கிழமை முதல் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையை முற்றாகத் தடை செய்யவேண்டும், உணவுச்சாலைகளிலும், திருமண மண்டபங்களிலும் இவற்றின் பாவனையை இல்லாதொழிக்கவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையினால் அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாண சபை எடுத்துக் கொண்ட தீர்மானத்துக்கு அமையவும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சூழல்நேய நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்க்கவும் இந்த நடவடிக்கையில் சகலரும் இணைந்து கொள்ளவேண்டும்.

நாளாந்த பாவனையின் பின்னர் கழிவாக வீசப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் ஆகியவையே பெருமளவில் திரண்டு மாநகர கழிவகற்றலில் சவால்களையும் சூழலுக்குப் பெரும் தீங்கையும் ஏற்படுத்துவனவாயுள்ளன. குடிதண்ணீர் விற்பனையாகும் பிளாஸ்ரின் போத்தல்கள், ஒருநாள் பாவனை பிளாஸ்ரிக் குவளைகள், மதிய உணவு பொதியிடும் பொலித்தீன்கள், பொருள்கள் வாங்கும் இலகு பொலித்தீன் பைகள் போன்றவை இதில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

உணவுச்சாலைகள் மற்றும் திருமண மண்டபங்கள் தங்கள் வியாபார நடவடிக்கையின்போது சாப்பாட்டுத் தட்டங்களைக் கொதிநீரில் கழுவி, சுத்தமான தட்டங்களில் வாழை இலைகளை இட்டுச் சுத்தமான கண்ணாடி அல்லது சில்வர் குவளைகளைப் பாவித்துக் குடிதண்ணீரை வழங்கலாம். உணவுப் பொதியிடுகையில் வாழை இலைகளைப் பாவித்து குளிர்களியையும் பழங்களின் கலவையையும் சுத்தமான சில்வர் ஏந்திகளில் வழங்கி இந்த முயற்சிக்கு வலுச் சேர்க்க முடியும்.

பூமி தினத்தில் தடை செய்யப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் தங்கள் இடங்களில் சேரும் திண்மக் கழிவுகளில் காணப்படுமாயின் யாழ்ப்பாண மாநகர பொதுச் சுகாதார பொறியியற் பிரிவினரால் குறித்த இடத்துக்கான கழிவகற்றல் சேவை நிறுத்தப்படும். இவற்றை எரிப்பதால் உண்டாகும் விளைவுகள் மனிதருக்குத் தீங்கை ஏற்படுத்தும். மாநகர எல்லையினுள் குப்பைகளுக்கு எரியூட்டுதல் தவிர்க்கப்படல் வேண்டும் - என்றுள்ளது. (த-10)

# ரயில் கடவையில் மோதி கழிவுநீர் வாய்க்காலுக்குள் பாய்ந்தது மோ. சைக்கிள்

## அதில் பயணித்த பெண் படுகாயம்



யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் பருத்தித்துறை சாலையில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையாகவுள்ள தொடருந்துக் கடவை மூடப்பட்டிருந்த நிலையில் அதில் மோதுண்ட மோட்டார் சைக்கிள் அருகிலிருந்த கழிவுநீர் வாய்காலுக்குள் பாய்ந்தது. அதனை செலுத்திவந்த பெண் காயங்களுடன் தப்பித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது.

"கொழும்பிலிருந்து புறப்பட்டு வந்த குளிரூட்டப்பட்ட கடுகதி தொடருந்து யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தது. இதனால் யாழ்ப்பாணம் பருத்தித்துறை சாலையில் தொடருந்து நிலையத்துக்கு அடுத்தாக உள்ள பாதுகாப்பு கடவை மூடப்பட்டிருந்தது.

வேம்படிச் சந்தியிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண், எதிரே தொடருந்துக்கடவை மூடப்பட்டிருந்ததை திடீரென்று பார்த்தவுடன் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் கடவையுடன் மோதுண்டுள்ளார். அதனால் அவர் சாலையில் தூக்கி வீசப்பட்டார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் கழிவுநீர் வாய்க்காலுக்குள் பாய்ந்தது. படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்" என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

(வ-ரி-101)

# 70 ஆரம்பப் பாடசாலைகள் வடக்கில் தரமுயர்த்தப்படும்

## மாகாண கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

"வடக்கு மாகாணத்தின் ஆரம்பக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் 35 கல்விக் கோட்டங்களிலும் தலா 2 பாடசாலைகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு மாதிரி ஆரம்பப் பாடசாலைகளாக தரம் உயர்த்துவதற்கான செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது"

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தின் ஆரம்பக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் சகல கல்விக் கோட்டங்களிலும் தலா 2 பாடசாலைகள் வீதம் மாதிரி ஆரம்பப் பாடசாலைகளாக தரம் உயர்த்தப்படவுள்ளன. அந்தப் பாடசாலைகளுக்கு அன்னைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும். இதற்கான முன்னோடிக் கலந்துரையாடல் அண்மையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சில் இடம்பெற்றது.

இதற்காக வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களின் கீழ் உள்ள 35 கல்விக் கோட்டங்களிலும் இருந்து தலா 2 பாடசாலைகள் வீதம் மொத்தம் 70 ஆரம்பப் பாடசாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பாடசாலைகளில் சிறப்பு விளையாட்டு மைதானம் , பொழுது போக்கு கூடம் உள்ளிட்ட சகல வாய்ப்புக்களும் ஏற்படுத்தப்படுவதோடு இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும் புதிதாக அமைக்கப்படும்.

இவ்வாறு தேர்வு செய்த 70 பாடசாலைகளில் 29 பாடசாலைகளில் ஏற்கனவே 2 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இந்த ஆண்டில் 25 பாடசலைகளுக்கு 2 மாடிக் கட்டடத்தை அமைக்கும் நிதி கிடைக்கும் என உறுதி வழங்கப்பட்டதற்கு இணங்க 12 பாடசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுவிட்டன. மேலும் 13 பாடசாலைகளுக்கான கட்டடங்கள் அமைக்கும் பணிகள் ஜீன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ்வாறு தரம் உயர்த்தப்படும் ஆரம்பப் பாடசாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் மட்டுமே இணைத்துக் கொள்ளப்படுவார்கள். குறித்த திட்டம் வடக்கு மாகாணத்தின் 35 கல்விக் கோட்டங்களிலும் ஒரே தடவையில் முன்னெடுப்பதற்கான அணைத்து நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. கல்வியை மேம்பட வைக்கும் நோக்கில் ஆரம்பக் கல்வியில் இருந்தே மேம்படுத்துவதே குறித்த திட்டத்தின் நோக்கமாகும் என்றார்.

(வ-101)

# மலையக மக்களை இழிவுபடுத்திய கரைச்சிப் பிரதேச செயலகம் உடன் பொதுமன்னிப்புக் கோரவேண்டும்

கிளிநொச்சி, ஏப். 21

கிளிநொச்சி வாழ் மலையக மக்களை இழிவுபடுத்தி வெளியிடப்பட்ட கட்டுரை தொடர்பாக, கட்டுரையாளரும், கரைச்சிப் பிரதேச செயலகமும் பகிரங்க மன்னிப்பு கோரவேண்டும்.

இவ்வாறு கரைச்சி கிராம மாதர் அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் கருப்பையா ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்படி கருத்தை முன்வைத்துள்ளார்.

எமது சமூகத்தினை இழிவுபடுத்தியும், ஒவ்வாத சொற்பிரயோகங்களையும் பயன்படுத்தியும் நூலில் பதிப்பு செய்து வெளியிட்டுள்ளார்கள். இது தொடர்பாக எமது சமூகம் சார்ந்து தொடர்ச்சியான எதிர்ப்புக்களையும், கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றோம். கிளிநொச்சி மலையக மக்கள் சமூகம் கொந்தளித்து நிற்கின்றது.

திட்டமிட்டு எமது சமூகத்தை இழிவுபடுத்தும் நோக்குடன் இந்தக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இன ஒற்றுமையுடன் வாழும் எம்மை திட்டமிட்டு சிதைக்கும் நோக்குடனும், அதன் ஊடாகத் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம் என்ற நோக்குடனும் கரை எழில் நூல் வெளியிடப்பட்டுள்ளது. போருக்குப் பின்னரான காலப் பகுதியில் மாவட்டத்தில் ஒற்றுமையாக உள்ள சமூகத்திற்கிடையில் பிரதேசவாதத்தினை ஏற்படுத்தி, அதன்மூலம் பிரிவினையை உருவாக்கவே திட்டமிட்ட வாறு நூல் எழுதப்பட்டுள்ளது. நூல் வெளியீடு தொடர்பில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச கலாசாரப் பேரவை தகுந்த பதில் வழங்கவேண்டும்.

எமது சமூகத்தினை இழிவு படுத்தும் கரை எழில் நூல் வெளியீட்டிற்கு பெருமளவிலான அரச நிதி செலவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறாயின் அரசு திட்டமிட்டவாறு பிரிவினை வாதத்தினை இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக முன்னெடுக்கின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது. கட்டுரையாளரும், அதை வெளியிட்ட கரைச்சி பிரதேச செயலக கலாசாரப் பேரவையும் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும். அதனை விடுத்து முகநூல் ஊடாக வருத்தம் தெரிவிப்பது கண்டிக்க தக்கது - என்றார்.

**பின்னணி**

கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் கலாசார விழாவில் கரை எழில் நூல் வெளியிடப்பட்டது. தமிழ்கவி என்பவரால் அதில் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரையில், 'மலையகத்தில் இருந்தது போலத்தான் இப்பவும் இருக்கின்றோம். என்ன அங்க குளிர். இங்க வெயில். அவ்வளவுதான் என்றார் முதியவர். இவர்களது பெண்கள் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தந்தை பெயர் தெரியாத குழந்தைகளும் உள்ளனர். இவர்களுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்கள் அதிகம்' என்று குறிப்பிடப்பட் டிருந்தது. வேறு ஒரு பகுதியில் 'எம்மிடையேவாழ்ந்துகொண்டிருக்கும் குடும்பங்களிலிருந்து போராடப் போனவர்களும் அதிகம். காரணம் தேசப்பற்றல்ல. அவர்களுக்கும் ஒரு சமூக அந்தஸ்து தேவைப்பட்டதுதான்' என்றும் எழுதியிருந்தார்.

இந்த நூல் வெளியாகிய பின்னர், மேற்படி கட்டுரைக்கு சமூக வலைத் தளத்தில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. இதனையடுத்து கரைச்சிப் பிரதேச செயலகம், கரைஎழில் நூலைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தது. 'கிளிநொச்சியும் மலையகத் தமிழரும் என்ற கட்டுரை, குறிப்பிட்ட சமூகம் சார்ந்த கருத்துக்கள் அந்தச் சமூகம் கவலையுறும் விதத்தில் இடம்பெற்றுவிட்டது. இதனையிட்டு கலாசார பேரவை வருத்தமடைகின்றது. இதற்கான பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்கின்றது' என்று குறிப்பிட்டிருந்தது. இதன் பின்னர் கட்டுரையாளர் இந்தக் கட்டுரைக்கு தனது மனவருத்தத்தை தெரிவித்து, கட்டுரையை மீளப் பெறுவதாக, கரைச்சிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவைக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

(த-5.6.34)

முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்...

## கிளிநொச்சியில்...

காணிகளை வெகுவிரைவில் விடுவிப்பதற்கும், அரச காணிகளை மாற்று ஏற்பாடுகளுடன் விடுவிப்பதற்கும் படைத் தரப்பினர் இணங்கியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் முப்படைத் தளபதிகளுக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்ட கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்டச் செயலர், பாதுகாப்புத் தரப்பினர், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் ஆகியோரும், மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையும் கூட்டத்தில் பங்கேற்றனர். விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பான விவரங்கள், பாதுகாப்புத்தரப்பினர், தமிழ்தேசியக்கூட்டமைப்பினர், பிரதேச செயலர்களால் சமர்பிக்கப்பட்டன. இந்தப் புள்ளி விவரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகவில்லை. பிரதேச செயலர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே தமது புள்ளி விவரங்களை முன்வைத்தாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் குறிப்பிட்டனர். வேறுபாடு ஏன் ஏற்பட்டது என்பது தொடர்பில் ஆராயப்பட்டது.

பாதுகாப்புத் தரப்பினர் நிலைகொண்டுள்ள தனியார் காணிகளைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சுவீகரிப்புக்கு அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை, பிரதேச செயலர்கள் அரச காணிகளாக தமது பதிவுகளில் மாற்றம் செய்துள்ளனர். இதனாலேயே புள்ளி விவரங் களில் முரணானநிலை காணப்பட்டமை அறியப்பட்டது. சுவீகரிப்பு நடவடிக்கை முற்றுப் பெறவில்லை என்பதால், அதனை அரச காணியாக அடையாளப்படுத்த வேண்டிய தேவையில்லை என்று கூறப்பட்டது.

பாதுகாப்புத் தரப்பினர், தனியார் காணிகளையும், அரசால் மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளையும் முழுமையாக விடுவிப் பதற்கு இணக்கம் தெரிவித்தனர். தனியார் காணிகளை முதலிலும், அரசால் வழங்கப்பட்ட காணிகளை அடுத்தும் விடுவிக்க சம்மதித்தனர். கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 667 ஏக்கரும், கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 185 ஏக்கரும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 715 ஏக்கருமாக, ஆயிரத்து 567 ஏக்கரை இராணுவத்தினர் விடுவிக் கவுள்ளனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவு சிவில் நிர்வாக ரீதியாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளடங்கினாலும்,ட் இராணுவத்தின் நிர்வாகத்தில் யாழ்ப்பாண கட்டளைத் தளபதியின் எல்லைக்குள்ளே வருவதால், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெறும் கூட்டத்தில் அது தொடர்பில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இரணைமடுவைச் சுற்றியுள்ள 2 ஆயிரத்து 439 ஏக்கர் நிலத்தை இராணுவத்தினர் விடுவிப்பதாக இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளனர். இரணைமடுவைச் சுற்றியுள்ள பிரதேசம், முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக எல்லை என்பதால், முல்லைத்தீவு மாவட்டத்தில் இதனைப் பற்றிப் பேசுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

தமது முகாம்களை இடமாற்றுவதற்கு பெரும் செலவு ஏற்படுவதாகவும் அதனை அரசு வழங்கினால் உடனடியாகவே தமது முகாம்களை இடமாற்றக் கூடியதாக இருக்கும் என்றும் இந்தச் சந்திப்பில் இராணுவத்தினர் குறிப்பிட்டனர். (வ-5,101)

## குப்பை...

மாற்றும் சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் நள்ளிரவு 12 மணி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைவாக இந்தச் சிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டதாக, அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 17ஆவது உறுப்புரையின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

"குப்பை சேகரிப்பு, குப்பைகளை எடுத்துச் செல்லல், தற்காலிகமாக குப்பைகளை களஞ்சியப்படுத்தி வைத்தல், வீதிகளில் உள்ள கழிவுகள், வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் மற்றும் அதற்கு சமமான கருமங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் உள்ளிட்ட நடவடிக்கைகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல், தாமதப்படுத்தல், இடைஞ்சலாக இருத்தல் என்பன குற்றமாக கருதப்படும்.

இதுபோன்ற செயற்பாடுகளால் அச்சுறுத்தல் விடுத்தல், பொது மக்களைக் கோபமூட்டுதல் போன்றனவற்றின் மூலம் குப்பை சேகரிப்பு நடவடிக்கைக்கு இடைஞ்சல் ஏற்படுத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். இதுபோன்ற குற்றங்களை செய்யும் எந்தவொரு நபரும் பிடியாணை இன்றி கைது செய்யப்படுவதற்கு பொலிஸாருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது" என்று சிறப்பு வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## வவுனியா...

காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் அவர் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

யு. நிசாந்த் (வயது - 45) என்ற கைதியே உயிரிழந்தவராவார். தை மதுபோதையில் செயற்பட்ட குற்றத் துக்காகச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர் என்று சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன. (த-4)

# அவசர அமர்வுகள் நடத்த ரணிலின் அனுமதி அவசியம்

## சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 21
மீதொட்டமுல்ல குப்பை மேட்டு இடர் தொடர்பில் விவாதிப்பதற்கு நாடாளுமன்றை அவசரமாகக் கூட்டவேண்டுமானால் அதற்குத் தலைமை அமைச்சரின் சிறப்பு அனுமதி தேவை என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.
நாடாளுமன்ற நிலையில் சட்டங்களின் படி ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்ற அமர்வை முன்கூட்டியே கூட்டுவதற்குத் எனக்கு அதிகாரமில்லை. அவ்வாறான அவசரஅமர்வுக்குதலைமை அமைச்சரின் அனுமதி அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.
மீதொட்டமுல்ல அசம்பாவிதம் குறித்து நாடாளுமன்றில் விவாதமொன்றை நடத்துவதற்காக நாடளுமன்றை அவசரமாகக் கூட்டவேண்டுமென்று பொது எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்தன கடந்த செவ்வாய்க்கிழமை வேண்டுகோள் விடுத்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார். நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு மே மாதம் மூன்றாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ஐ - 4)

# மக்களின் வாழ்வை முடக்கும் தேசிய பாதுகாப்பு தேவையா?

## வட்டுவாகல் மக்கள் ஆவேசம்







முல்லைத்தீவு, ஏப். 21
மக்களின் வாழ்வாதாரத்தை முடக்கி, அதில் தான் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றால் அத்தகைய ஒரு பாதுகாப்பு எமக்கும் தேவையில்லை.
இவ்வாறு வட்டுவாகலில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள மக்கள் தெரிவித்தனர்.
வட்டுவாகலில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரித்து முகாம் அமைத்துள்ள கடற்படையினர், வெளியேற வேண்டும் என வலியுறுத்தி நேற்று முன்தினம் கவனயீர்ப்புத் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நாளை அரச தலைவர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சித்தலைவர், மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அனைவருக்கும் மாவட்டச் செயலார் ஊடாக கடிதங்கள் அனுப்பி வைக்கவுள்ளனர்.
14 நாள்களுக்குள் ஆக்கபூர்வமான பதில் கிடைக்காவிடின் தொடர் அமைதிவழிப் போராட்டமாக முன்னெடுப்போம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
"இராணுவம் சுவீகரித்த இந்தப் பகுதியில் 5 கரைவலைப்பாடுகள் உள்ளன. இந்த கரைவலை பாட்டில் மட்டும் 150 குடும்ப ங்களுக்கு மேல் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். 150 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கெடுத்து, இந்த முகாம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் எமக்குப் புரியவே இல்லை. மக்களைப் பொருளாதாரத்தில் நலிந்தவர்களாக வைத்துக் கொண்டு எதைச் சாதிக்கப் போகின்றார்கள். மக்களைத் துன்பத்தில் வாழ்வதற்கு காரணாமாக அமைந்துள்ள முகாமை அதற்றுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்றால் அத்தகைய பாதுகாப்புத் தேவைதானா? இதுவரை காலமும் பட்ட துன்பங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்த எமக்கு இந்த அரசின் செயற்பாடும் அவநம்பிக்கையையே ஏற்படுத்துகின்றது." என வட்டுவாகல் காணி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.
(ஐ - 7)

# இலங்கையின் மிக உயர்ந்த மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

கொழும்பு, ஏப். 21
75 மாடிகளுடன் இலங்கையின் மிக உயர்ந்த மாடிக் குடியிருப்பாக அமையவுள்ள கட்டடத்துக்கான அடிக்கல் அண்மையில் மாநகரங்கள் மற்றும் மேல் மாகாணஅபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவால் நடப்பட்டது.
கொழும்பு 7, ஹோர்ட்டன் பிளேஸ், இலக்கம் 37இல் அமையவுள்ள இந்தக் கட்டடம் மாநகரங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளது.
ஹோர்ட்டன் ஸ்க்வெயார் எனும் தனியார் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கட்டடம் 2020ஆம் ஆண்டில் பூர்த்தியாகவுள்ளது. மாநகரங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேலும் மூன்று பிரமாண்டமான குடியிருப்புகளின் நிர்மாணப்பணிகள் ஏற்கனவேஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
இந்த அடிக்கல் நடும் வைபவத்தில் பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன, ஹோர்ட்டன் ஸ்க்வெயார் நிறுவனத்தின்முதன்மை நிறைவேற்று அதிகாரி போல்கெலி, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் சுமேத ரத்னாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.
(ஐ -4)

# நுரைச்சோலையின் ஒரு மின்பிறப்பாக்கி மீண்டும் இயக்கம்

கொழும்பு, ஏப். 21
நுரைச்சோலை நிலக்கரி அனல்மின் நிலையத்தில் பழுதடைந்திருந்த ஒரு மின்பிறப்பாக்கி திருத்தப்பட்டு நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது என்று மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சு தெரிவித்துள்ளது.
தேசிய மின்கட்டமைப்புக்கு ஏற்பட்டிருந்த தடையில் 300 மெகா வோற் மின்சாரம் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளன என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.
அதேவேளை, ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இதுவரை 37 தடவைகள் பழுதாகிப்போயிருக்கும் முதலாம் இலக்க மின்பிறப்பாக்கியைத் திருத்தியமைக்க மேலும் சில நாள்கள் எடுக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.
(ஐ - 4)

**அறிவித்தல்**
19.04.2017 அன்று பொருளியல் துறை மண்டபத்தில் பி.ப 2.00 மணிக்கு நடைபெற இருந்த இளம் பொருளியலாளர் மன்றத்தின் அபிவிருத்தி பொருளியல் இதழ்-06 வெளியீட்டிற்கான நிதி சேகரித்தல் தொடர்பான அதிஸ்டலாபச்சீட்டு குலுக்குதல் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை. பிற்போடப்பட்டுள்ளது. எனவே குலுக்கும் திகதி தொடர்பான விவரங்கள் பின்னர் அறியத்தரப்படும்
தலைவர்
இளம் பொருளியலாளர் மன்றம், யாழ்/பல்கலைக்கழகம்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**
திரு.அ.ஸ்ரீரஞ்சன் B.A (ஸ்ரீ மாஸ்டர்)
க.பொ.த.(சா/த 2016) பரீட்சையில் சிக்கலான சிங்கள பாடத்தினை மிகவும் கட்சிதமாக கற்றுத்தந்து எம்மை சித்தியடையச் செய்தமைக்காக எமது அன்பான ஆசான் அ.ஸ்ரீரஞ்சன் அவர்களுக்கு பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
வாழ்த்துவோர் :- ஜெயம், வசந்தன், பிரபா

**வேலையாள் தேவை**
கொழும்பு, தெகிவளையிலுள்ள பிரபல சலூனிற்கு சிறந்த அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை. தங்குமிட வசதியுடன் 50.000 சம்பளம் நிபந்தனைகளுக்குட்பட்டது.
077 676 3436, 076 767 3111

**ஊர் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
விறாத்து பருவமுடைய 2½ மாத குஞ்சுகள் விற்பனைக்கு.
பலாலி வீதி, திருநெல்வேலி.
075 017 6630

**விற்பனைக்குண்டு**
புதிய இந்தியன் சாறிகள் விற்பனைக்குண்டு.
FB: Pleats
077 196 6773

**காணி தேவை**
தெல்லிப்பளைச் சந்திக்கும் மல்லாகத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் கே.கே.எஸ் வீதியில் இருந்து 150 மீற்றரிற்குள் வீடு கட்டக்கூடிய 3-6 பரப்புக்காணி தேவை.
mpiraveenan@yahoo.com
077 960 6133

**பணியாளர்கள் தேவை**
கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் எமது New Sun Ceramic (pvt)Ltd நிறுவனமானது புதிய கிளையினை கிளிநொச்சி நகரில் ஆரம்பிக்கவுள்ளது. எனவே நிறுவனத்தில் பணியாற்ற தகுதியான ஆண் / பெண் இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கிளிநொச்சி நகருக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக
021 228 3872, 071 792 3721

**நாய்க்குட்டி விற்பனைக்குண்டு**
Labrador இன நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
077 314 4627 - திருநெல்வேலி.

உ
சக்தியம்
ஏழாலையம்பதி அருள்மிகு
புங்கடி புவனேஸ்வரி அம்பிகை ஆலயம்
புனராவர்த்தன சம்புரோக்ஷண
**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**



**கர்மாரம்பம்**
இன்று (21.04.2017 ) வெள்ளிக்கிழமை
அதிகாலை 5.00 மணிமுதல்

**எண்ணெய்க்காப்பு**
22.04.2017 சனிக்கிழமை
முற்பகல் 11 மணிமுதல்
23.04.2017 ஞாயிற்றுக்கிழமை
நண்பகல் 12 மணிவரை

**மஹா கும்பாபிஷேகம்**
24.04.2017 திங்கட்கிழமை
காலை 09 . 01 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள
மிதுன லக்ன சுபவேளையில்
ப்ரதிஷ்டா பிரதமகுரு
சிவஸ்ரீ வரத உமாசுதக் குருக்கள்
(பிரதம குரு மயிலணி கந்தசுவாமி கோயில்)

**விஷேட நிகழ்வுகள்**
(நேரம் மாற்றம்)
தமிழகத்தில் இருந்து வருகைதரும்
சீர்காழி சிவசிதம்பரம், சூர்யபிரகாஷ்
குழுவினரின் கர்நாடக பக்தி, இன்னிசை கானங்கள்
நாளை (22.04.2017) சனிக்கிழமை மாலை 7.30 மணிமுதல் இடம்பெறும். தொடர்ந்து 23. 04. 2017 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிமுதல் இடம்பெறும்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்"
ஏழாலை.
இறைபணியில் உள்ள
புவனேஸ்வரி தேவஸ்தான நிர்வாகம்.

## அதிபர்களுக்கு திங்களன்று கூட்டம்

தென்மராட்சி, ஏப்.21

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு கல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்தார். (வ - 9)

## மின்னிணைப்பு, தோல் உற்பத்தி பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

தென்மராட்சி, ஏப். 21

தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் வீட்டு மின்னிணைப்பு மற்றும் தோல் பொருள்கள் உற்பத்தி ஆகிய பயிற்சி நெறிகளுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டது.

"பயிற்சி வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளையோர் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையில் நடைபெறும் வீட்டு மின்னிணைப்பு பயிற்சி நெறியிலும் சாவகச்சேரி வடக்கு டச்சு வீதியில் அமைந்துள்ள விடிவெள்ளி சமூக மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெறும் தோற்பொருள்கள் பயிற்சி நெறியிலும் இணைந்து பயிற்சிகளைப் பெறலாம்" என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (வ - 9)

## வெடிகுண்டின் வெற்றுக் கோதுதான் நுணாவிலில் மீட்பு

தென்மராட்சி, ஏப். 21

கைதடி நுணாவிலில் ஏ-9 சாலையை அண்மித்ததாகவுள்ள குடியிருப்புக்கு அருகே காணப்பட்ட வெடிகுண்டை நேற்றுச் செயலிழக்கச் செய்ய மீட்டபோது அது வெடிகுண்டின் வெற்றுக்கோது எனத் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"குடியிருப்பாளர் காணியைத் துப்பரவு செய்தபோது வெடிகுண்டின் அடிப்பகுதி தென்பட்டதையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்குச் சென்று பாதுகாப்பை ஏற்படுத்திய பொலிஸார், வெடிகுண்டை செயலிழக்க வைப்பதற்கான அனுதியைக் கோரி சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாண சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன் வெடிகுண்டை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்ய பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை அனுமதி வழங்கினார். சிறப்பு அதிரடிப் படையினர் வெடிகுண்டை மீட்டபோது, அது வெற்றுக் கோது எனக் கண்டறியப்பட்டது" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-9)

## சிறுவர் கழகங்களின் மகிழ்கள நிகழ்வுகள்

தென்மராட்சி பிரதேச சிறுவர் கழகங்களின் அங்கத்தவர்களுக்கான மகிழ்கள நிகழ்வுகள் எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வேள்ட்விசன் லங்கா நிறுவன அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள சிறுவர் மகிழ்கள நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், வேள்ட்விசன் லங்கா நிறுவன சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி முகாமையாளர் ஆகியோர் கலந்துகொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## குடும்பத்தலைவருக்கு உயிராபத்தை ஏற்படுத்த முயன்ற குற்றச்சாட்டுக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஏப். 21

குப்பைவாரியால் தாக்கி குடும்பத்தலைவருக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாவற்குழி வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

கைதடி, கோவிலாக்கண்டியைச் சேர்ந்த குழந்தைவேலு விக்னேஸ்வரன் ( வயது 47 ) என்ற குடும்பத்தலைவர் குப்பைவாரியால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார் எனத் தெரிவித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலைப் பொலிஸார் காயமடைந்தவரிடம் முறைப்பாடு பெற்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சமர்ப்பித்திருந்தனர். குடும்பத்தலைவரை குப்பைவாரியால் தாக்கி அவருக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில் நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் சந்தேகநபரை நேற்றுமுன்தினம் பொலிஸார் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

## அனைத்து மாணவர்களுக்கும் ஒரே விதமான கற்பித்தல் பயனற்றது

### திறந்த பல்கலைக்கழக பீடாதிபதி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 21

வகுப்பறைகளில் ஒரே விதமான கற்பித்தலை முன்னெடுப்பதன் மூலமாக நாம் எதிர்பார்க்கும் விதத்தில் மாணவர்களை உருவாக்க முடியாது. மாணவர்களும் கற்க மாட்டார்கள்.

இவ்வாறு திறந்த பல்கலைக் கழக பீடாதிபதி கலாநிதி பக்கீர் ஜெவ்பர் தெரிவித்தார்.

மாவனல்லையில் தனியார் நிறுவனத்தால் நடத்தப்பட்ட, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா சில நாள்களுக்கு முன்னர் மாவனல்லை ஜாமிஆ ஆயிஷா சித்தீகா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"சில மாணவர்கள் காதால் கேட்டுப் படிப்பவர்கள். இன்னும் சிலர் பார்த்துப் படிப்பவர்கள். அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரியல்லர். இன்னும் சிலர் குழுக்களாகச் சேர்ந்து படித்தால் படிப்பார்கள். கற்பித்தல் என்பது முதல் நாள் வீட்டில் பாடமாக்கிவி ட்டு மறுநாள் வகுப்பில் கூறுவதல்ல. கற்பிக்கும் ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் கற்றலையும் வீட்டுச் சுற்றாடலையும் அதுபோன்று மாணவரின் பின்புலங்கள் - கடின நிலைகள் தொடர்பில் அறிந்து செயற்பட வேண்டும். ஒரே விதமான கற்றலை வைத்து நாம் கற்பிக்கின்ற போது நாம் நினைத்தவாறு கற்பிக்க முடியாது. மாணவர்கள் கற்கவும் முடியாது-என்றார். (ஐ-4)

## கல்விச் சமூகத்தால் கௌரவிக்கப்படுகிறார் ஆய்வுகூட உதவியாளர்

தென்மராட்சி, ஏப். 21

பாடசாலைகளில் விஞ்ஞான பாடத் திட்டத்துக்கான உபகரணங்களைத் தயாரித்து மாணவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கவுள்ள நாவற்குழி மகா வித்தியாலய ஆய்வுகூட உதவியாளர் தென்மராட்சி வலயக் கல்வி வலயத்தால் கௌரவிக்கப்படவுள்ளார்.

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் ஆய்வுகூட உதவியாளராகக் கடமையாற்றும் சின்னத்துரை இராசேந்திரன், ஆய்வுகூடத்தில் மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய விஞ்ஞான பாட உபகரணங்களை தாமே உருவாக்கி மகா வித்தியாலய மாணவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கியுள்ளார். அத்துடன் அவர் சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ளதால் அவரால் உருவாக்கப்பட்ட விஞ்ஞான பாட ஆய்வுகூட உபகரணங்கள் சிலவற்றை தென்மராட்சி கல்வி வலய மாணவர்களின் பயன்பாட்டுக்கு அவர் வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரால் உருவாக்கப்பட்ட விஞ்ஞான பாட உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு வலய கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த உபகரணங்கள் நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலையில் உள்ள கணித மேம்பாட்டு நிலையத்தில் வைக்கப்பட்டு அனைத்துப் பாடசாலைகளின் மாணவர்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (வ - 9)


**NORTH LANKA IIT**

இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்.

**Master of Education (M.Ed.)**

- ✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
- ✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
- ✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்

Duration: 1 Year Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

**B.Sc. in Physical Education And Sports**

- ✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 1 Year

Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

**Master of Business Administration (MBA)**

- ✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 18 Months Entry Qualification: Any Degree

**Master of Public Administration (MPA)**

- ✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 18 Months Entry Qualification: Any Degree

Contact Persons:
Mr.Kanthaiya Sivaraja, Program Co-ordinator, NLIIT, Ph: 0775532402
Dr.Sithambaram Mohan, Human Resource Head, NLIIT, Ph: 0776030507

**B.Sc. in Computer Science**

✓ UGC Approved ■ Duration: 3 Years ■ Entry Qualification: O/L or A/L

**B.Sc. in Computer Science (Top Up)**

✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: 2 Years Diploma / HND

**M.Sc. in Computer Science**

✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: Any Degree

விண்ணப்ப கட்டணம்: Rs. 1000/-
நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி: 23 / 04 / 2017 நேரம்: 10 AM

விண்ணப்பக் கட்டணத்தை 22-4-2017 ஆம் திகதிக்குள் செலுத்தி 23-4-2017 அன்று நேர்முகத்தேர்வுக்கு கீழ்கண்ட முகவரியில் சமுகமளிக்கவும். மேலும் விவரங்களை பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்.

North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna. Ph: 0767504535 / 0214927088



## திருத்தம்

### விண்ணப்ப முடிவுதிகதியினை நீடிப்புச் செய்தல்

*மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு*

**வடக்கு மாகாணம்**

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பு - 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு விஞ்ஞான பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்தபோட்டிப் பரீட்சை (தமிழ்மொழி மூலம்) - 2017 (II)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட **விளம்பரத்தின் முடிவு திகதியானது** 2017.05.05 ஆம் திகதி வரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கோரப்பட்ட விளம்பரத்தின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் www.np.gov.lk → **Recruitment and Exam → Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் மாத்திரம் அம்மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*ரு.வரதலிங்கம்.*
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்.

## நல்லூர் பிரதேச கலை, இலக்கிய போட்டிகள்

நல்லூர், ஏப். 21

நல்லூர் பிரதேச செயலக கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடப்பு வருடத்துக்கான பிரதேச மட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

"பாடசாலை மட்டம், திறந்த பிரிவு என போட்டிகள் நடத்தப்படுகின்றன. போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் நல்லூர் பிரதேச கலாசார பிரிவில் விண்ணப்படிவங்களைப் பெற்று ஆக்கங்களை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும்" என்று பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார். (வ-12)

## யாழ்ப்பாணக் குடாக் கடலில் மீன்களின் பிடிபாடு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணக் குடாக் கடற்பரப்பில் மீன்களின் பிடிபாடு கடந்த இரு நாள்களாக அதிகரித்துக் காணப்பட்டன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

"பாஷையூர், குருநகர் மற்றும் தீவகக் கடற்பகுதியில் மீன்களின் பிடிபாடு அதிகரித்துக் காணப்பட்டன. தற்போது பருவ பெயர்ச்சிக் காற்று ஆரம்பித்தமையால் கடல் நீரோட்டம் அதிரித்துக் காணப்பட்டது. அத்துடன் மீன்களின் பெருக்கமும் கூடுதலாகக் காணப்பட்டது.

மீனவர்களின் வலையில் அதிகளவிலான விளை மீன், சூடை, பாறை போன்ற மீன்கள் சிக்கி கொண்டன" என்று மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, மீன்களின் பிடிபாடு அதிகரித்ததை அடுத்து நகரை அண்டிய பாஷையூர், கொட்டடி, குருநகர், நாவாந்துறை மீன் சந்தைகளில் மீன்களின் விலைவீழ்ச்சியடைந்தும் காணப்பட்டன. (வ-17)

## நூதனமான முறையில் பணம் பறிக்கும் கும்பல்

திருமலை,ஏப்.21

இளம் பெண்களைப் பேருந்துத் தரிப்பிடங்களில் நிறுத்தி பேருந்துக்கு காத்திருப்போரிடம் பணத்தைப் பறிக்கும் நூதன முறையை சிலர் கையாள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை - ஹொரவ்பொத்தான முதன்மை வீதியிலேயே இவ்வாறான சம்பவங்கள் நடக்கின்றன எனக் கூறப்படுகிறது. இளம் பெண்களைப் பேருந்துத் தரிப்பிடங்களில் நிறுத்தி, பேருந்துக்காகக் காத்திருக்கும் அரச ஊழியர்களிடம் பணம் பறிக்க அவர்கள் முயற்சிக்கின்றனர். பெண்ணின் கையைப் பிடித்ததாகவும், ஆபாசப் படங்களைக் காட்டியதாகவும் அச்சுறுத்தி அவர்களிடம் பணத்தைப் பறிக்கும் சம்பவங்கள் நடக்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். முச்சக்கர வண்டிகளின் சாரதிகள் சிலர் இந்த நடவடிக்கைக்கு உதவி வழங்கி வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பேருந்துத் தரிப்பிடத்துக்கருகில் இளம் பெண்களை நிறுத்தி விட்டு, அவருடன் வருவோர் முச்சக்கர வண்டிச் சாரதியுடன் பேசிக்கொண்டிருப்பர். தனிமையாக நிற்கும் இளம் பெண்ணிடம் யாராவது பேசும் போது, விரைவாக அங்கு வந்து பெண்ணுக்கு ஆபாசப் படம் காட்டியதாகப் பயமுறுத்துவதுடன், பொலிஸ் நிலையத்துக்குச் செல்லப் போகின்றேன் எனக்கூறி பணத்தை கேட்பர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பயணிகள் மிகவும் அக்கறையுடன் செயற்படுமாறும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ஐ-45)

## திண்மக் கழிவுப் பசளை அடுத்த வாரம் விற்பனை

சாவகச்சேரி, ஏப். 21

சாவகச்சேரி நகரசபையால் கடந்த வருடம் உருவாக்கப்பட்ட திண்மக் கழிவுப்பொருள்களிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பிரிவில் உற்பத்தி செய்யப்பட்ட பசளை எதிர்வரும் 25ஆம் திகதி விற்பனை செய்யப்படவுள்ளது என்று நகர சபைச் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்தார்

உழவு இயந்திப் பெட்டிகளில் லோட் ஆக விற்பனை செய்யப்படவுள்ளதால் இயற்கைப் பசளையை கொள்வனவு செய்ய விரும்பும் விவசாயிகள் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டியில் உள்ள திண்மக் கழிவுப் பசளை உற்பத்தி நிலையத்துக்கு வருகை தருமாறு அவர் கேட்டுள்ளார். (வ - 9)

## சாலை விபத்தில் வயோதிபப் பெண் படுகாயம்

தென்மராட்சி, ஏப். 21

மிருசுவிலில் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளால் மோதுண்டு வயோதிபப் பெண் படுகாயமடைந்தார். மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த சதாசிவம் நந்தினி ( வயது65 ) என்னும் பெண்ணே விபத்தில் படுகாயமடைந்தவராவார்

"தோட்டத்தில் விளைந்த மரக்கறிகளை பறித்து சந்தைக்கு கொண்டு செல்வதற்காக நேற்று அதிகாலை அவர் தோட்டத்துக்குச் சென்றார். அதன் போதே சாலையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு அவர் படுகாயமடைந்தார்" என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அதிகாலை 4.40 மணியளவில் வயோதிபப் பெண் சேர்க்கப்பட்டார். எனினும் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 9)

## நீர்வைக் கந்தனின் கொடியேற்றம் நாளை

யாழ்ப்பாணம், ஏப்.21

நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 21 நாள்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

மே மாதம் 1ஆம் திகதி திருமஞ்ச திருவிழாவும் 8 ஆம் திகதி சப்பைரதத் திருவிழாவும் 9ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 11ஆம் திகதி திருக்கல்யாண வைபவமும் 12 ஆம் திக்தி சண்டேசுவரர் திருவிழாவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.21


யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் சனசமூக நிலையம் நடத்தும் இலவச மருத்துவமுகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு குருசோ வீதி, கிறீன் பீல்ட் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நீரிழிவு, குருதி அழுத்தம், உடல் திணிவுச் சுட்டி, கண்பார்வைக் குறைபாடு போன்றவை பரிசீலிக்கப்படுவதோடு மூக்குக் கண்ணாடி மற்றும் நீரிழிவுக்கான கைநூல் இலவசமாக வழங்கப்படும் என்று கிறீன் பீல்ட் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ)

---

## மரண அறிவித்தல்

மலர்வு
28 . 04 . 1950



உதிர்வு
19 . 04 . 2017

### நடராசா கனகராசா

7ஆம் வட்டாரம், நயினாதீவைப் பிறப்பிடமாகவும், பொதுக்கிணறு வீதி, தோணிக்கல், வவுனியாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நடராசா கனகராசா 19.04.2017 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா - சிதம்பரபூபதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், புனிதவதி, மகேந்திரராஜா, செல்வதி, காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அழகேசன் (இலங்கை போக்குவரத்துச்சபை கணக்காளர் - வடபிராந்தியம்), அரங்கேசன் (இலங்கை போக்குவரத்துச்சபை - வவுனியா), அரவிந்தன் (பிரான்ஸ்), ரமேசன் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்), லிங்கேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரி (கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் - வவுனியா), நவரஞ்சினி (பிரதேசசபை - நயினாதீவு), மைதிலி (பிரான்ஸ்), பிரசாந்தி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவநீதன், லக்ஸ்வீணன், சஷ்மிளா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமையன்று முற்பகல் 10 மணியளவில் இல.142C, பொதுக்கிணறு வீதி, தோணிக்கல், வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோணிக்கல்,**
**வவுனியா**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## அமரர் இ.த.பத்திநாதர் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
08 . 04 . 1927



ஆண்டவன் அரவணைப்பில்
22 . 03 . 2017

### அமரர் இராயப்பு தம்பியையா பத்திநாதர்

(ஓய்வுபெற்ற விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்)

எங்கள் பாசமுள்ள பப்பாவே! பார்க்கும் இடமெல்லாம் உங்கள் அன்பு உருவமும்
கேட்கும் ஒலியெல்லாம் உங்கள் குரலுமே எம் மத்தியில்
இருப்பதாகவே உணர்கின்றோம்.

குடும்பம், ஊர், சமூகம் வாழ அரும்பாடுபட்டு உழைத்தீர்கள்
மனிதன் இறக்கும் போது எப்படி இறந்தான்
என்பதல்ல, எப்படி வாழ்ந்தான் என்பதே முக்கியம்

மக்களின் மனதில் மா மனிதராகவே வாழ்ந்த பப்பாவே! நீங்களும் அம்மாவும் எமக்கு ஊட்டி வளர்த்த நற்பண்புகள் ஆல மர விழுதுகள் போல் வேரூன்றி சமூதாயத்தில் எம்மை நிலைத்து சிறப்புடன் வாழ வைத்திருக்கிறது உங்கள் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையாரின் துயர் செய்தி கேட்டு நேரில்வருகை தந்து எமது துயரில் பங்கு கொண்ட யாழ். ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கும் யாழ்.மன்னார், மறை மாவட்ட குரு முதல்வருக்கும், அனைத்து அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகளுக்கும், மேல் நீதிமன்ற நீதிபதிகள், அனைத்து மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட காணிப்பதிவாளர்கள், ஜனாதிபதி சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் மேல்நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற பதிவாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலாளர், இலங்கை செஞ்சிலுவைக் கிளை சங்கங்களின் கௌரவ ஆளுநர் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஏனைய அரச , அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள்.ஊழியர்கள், ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள், மூத்தோர் சங்க உறுப்பினர்கள், சகல பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொலை விடங்களில் இருந்து நேரடியாகவே வருகை தந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், தொலைபேசி வாயிலாகவும், இல்லத்திரணியல் ஊடகங்கள் மூலமாகவும் , ஆறுதல் கூறிய வெளிநாட்டு உள்நாட்டு அன்பு உள்ளங்களுக்கும், துண்டுப் பிரசுரங்கள், மலர்வளையங்கள் மூலம் எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் மேலும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவிபுரிந் தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இரணைப்பாலை புதுக்குடியிருப்பு**

**அமரர் இ.த. பத்திநாதர் குடும்பத்தினர்**

# புதிய அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக அரச தலைவருடன் கலந்துரையாட முடிவு

## மக்கள் விடுதலை முன்னணி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 21

புதியஅரசமைப்புச்சீர்த்திருத்தம்தொடர்பில்அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனவை விரைவில் சந்திக்கவுள்ளோம் என்றுமக்கள்விடுதலைமுன்னணியின் பரப்புரைச் செயலர் விஜித கேரத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் தமிழ்தேசியகூட்டமைப்புமற்றும்முஸ்லிம்காங்கிரஸ்உள்ளிட்டகட்சிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளன.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான நடவடிக்கைகள் தாமதமடைந்து வருகின்றன. இதனைத்துரிதப்படுத்தும் நோக்கில் எமது கட்சி இந்தச் சந்திப்புகளைமேற்கொண்டுவருகின்றன. இது தொடர்பில் அரச தலைவரைச் சந்திக்கவுள்ளோம். என்றார். (ஐ-10)

## மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவரை கைது செய்ய சிறப்புத்திட்டம்

கொழும்பு, ஏப். 21

சுற்றுலா நுழைவு விசைவு மூலம் இலங்கைக்கு மாணிக்கக் கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்களைக் கைது செய்வதற்காகச் சிறப்பு திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது இல்லாது தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிககார சபையின் தலைவர் அசங்க வெலகெத தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

'பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து இந்தச் சிறப்புத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாநுழைவுவிசைவுமூலம்மாணிக்கக்கல்வர்த்தகத்தில்ஈடுபடும்வெளிநாட்டவர்கள்தொடர்பில்குடிவரவு மற்றும்குடியகல்வு திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றஇடங்களில்இடம்பெறுகின்றஇடர்களைக்கட்டுப்படுத்துவதற்காகபுதியதொழில்நுட்பவழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது" - என்றார். (ஐ-10)

## போலி முகப்புத்தகக் கணக்குகள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 21

இந்தவருடத்தில்போலியானமுகப்புத்தகக் கணக்குகள் தொடர்பில் அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கைகணினிஅவசரப்பிரிவின்முதன்மைப்பாதுகாப்புப்பொறியியலாளர்ரொசான் சந்திரகுப்த தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில்மாத்திரம்சமுகவலைத்தளங்கள் தொடர்பில் 850 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதில் அதிகளவிலான முறைப்பாடுகள் போலியான முகப்புத்தகம் தொடர்பாகவே கிடைத்துள்ளன. இதனால் முகப்புத்தகக் கணக்குகளை வைத்திருக்கும் நபர்கள் மிகவும்அவதானத்துடன்செயற்படவேண்டும் என்றார்.

இலங்கையில் அண்மைக்காலமாக முகப்புத்தகக் கணக்கு தொடர்பாக உயிரிழப்புக்கள் அதிகரித்த வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஐ-10)

# மீதொட்டமுல்ல இடருக்கு அரசே காரணம்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியும் சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 21

கொலன்னாவ மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்த இடரில் 33க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். 100 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் நிர்கதியாகியுள்ளனர். அதற்கு அரசே காரணம். மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாது, மக்கள் போராட்டங்களை அரசு அலட்சியப்படுத்தியதன் விளைவே மீதொட்டமுல்ல இடருக்குக் காரணமாகும்.

இவ்வாறுபுதியஜனநாயகமாக்சிச - லெனினிசக் கட்சி வெளியிட்டுள்ளஅறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில்உள்ளதாவது:

மீதொட்டமுல்ல மக்கள் குப்பை மேட்டால்தாம்அனுபவித்துவந்த கொடுமைகளை அவ்வப்போது தெரிவித்து வந்த போதும், தீர்வு வழங்கப்படாமையால், கடந்த 2012ஆம் ஆண்டு வீதியிலிறங்கி போராடினார்கள். அதற்கு அரசு இராணுவத்தினரைக் கொண்டே பதிலளித்தது. மீண்டும்2014ஆம் ஆண்டும் பெரியஆர்பாட்டமொன்றை முன்னெடுத்தனர் அதற்கும் இராணுவத்தையும், பொலிஸாரையுமே ஏவினர். மக்களின் மிகவும் நியாயமான கோரிக்கைக்கு கூட அரசு செவிசாய்க்கவில்லை. 2015 ஆம் ஆண்டுமீதொட்டமுல்லமக்களின் போராட்டத்தைஅரசுக்குசார்பான காடையர்களைகொண்டுஅடக்கியது.

இத்தனை போராட்டத்துக்கு மத்தியிலும் நடந்தேறிய இந்தக் கொடுமைகளைப்பற்றி ஓரிரு கிழமைகளுக்குமாத்திரமேகதைத்துவிட்டு அவரவர்வேலைகளைப்பார்க்கச் செல்லும் நடைமுறையை கைவிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்க வேண்டும். மக்களின்பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை இனியாவது உடனடியாக பெற்றுக்கொடுக்க அரசு முன் வர வேண்டும். மக்கள் கூட்டம்தன்னை மாய்த்துக்கொண்டு தனது பிரச்சினையைப் புரிய வைக்கும்வரை வேடிக்கைபார்க்காது. மக்களின் நியாயமான பிரச்சினைகளைதீர்க்க அரசு முன்வர வேண்டும். என்றுள்ளது. (ஐ-10)



கோப்புப்படம்

# பத்தரமுல்ல வர்த்தகருக்கு வெளிநாடு செல்லத் தடை

கொழும்பு, ஏப். 21

பல பெண்கைளை துர்நடத்தையில்ஈடுபடுத்தினார் என குற்றச்சாட் டில் பத்தரமுல்லையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு வெளிநாடு செல்வதற்கு கொழும்பு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

அந்த வர்த்தகர் திருமணம் செய்து கொள்வதாகக் கூறி, பல பெண்களை ஏமாற்றி, மாலைத்தீவுக்குஅழைத்துச் சென்று, அங்கு துர்நடத்தையில் ஈடுபடுத்தியுள்ளார்.

காலி மற்றும் மகரகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களையே இவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளனர். அங்கிருந்து இலங்கைக்குத் தப்பி வந்த பெண்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு அறிவித்ததைஅடுத்து, பணியகத்தின் பிரதிப்பொதுமுகாமையாளர், கடந்த டிசெம்பர் மாதம், இது தொடர்பாக முறைபாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டையடுத்து, குற்றத்தடுப்புப்பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, கொழும்பு பிரதான நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே, அவர்வெளிநாடுசெல்வதற்கானதடையைகொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் லால் ரணசிங்க பண்டார விதித்தார். (ஐ-10)




## பெகி கார் நோயாளர் காவு வண்டிச் சேவை அம்பாறை வைத்தியசாலையில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 21

பெகி கார் நோயாளர் காவு வண்டிச் சேவையொன்று, முதன் முறையாக அம்பாறைவைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அம்புலன்ஸ் சேவை மூலமாக அவசர சிகிச்சைக்குரியநோயாளர்களைநேரடியாக நோயாளர் விடுதிக்கு அனுமதிக்க முடியும்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவின் ஆலோசனையின் பேரில், இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அம்பாறை வைத்திய அதிகாரி மருவத்துவர்லங்காதிலகஜயசிங்க தெரிவித்தார்.

"அவசரசிகிச்சைக்காகஅனுமதிக்கப்படும் நோயாளர்களைத் தள்ளுவண்டியில் நோயாளர் விடுதிக்கு அழைத்துச்செல்லும்போது வழங்கப்படும் பாதுகாப்பு வழிமுறைகள், இந்த பெகி கார்நோயளர்காவுவண்டிச் சேவையின் போது தேவைப்படாது. நோயாளர்களை மிகுந்த பாதுகாப்புடனும் வசதியுடனும், பெகி கார்நோயாளர்காவுவண்டி மூலம்நோயாளர்விடுதிக்கு அழைத்துச்செல்லமுடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ10)

## பொதுக்கூட்டம்

முல்லைத்தீவு,ஏப்.21

முல்லைத்தீவு அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் நாளைபிற்பகல்3மணிக்குமணற்குடியிருப்புபொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் எம்.அன்ரனியூட் அறிவித்துள்ளார். (ஐ-12)

# விபத்து இடம்பெற்ற இடத்தில் பொலிஸார் கடமையில் இல்லை; பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமையிலிருந்து இடைநிறுத்தம்

மட்டக்களப்பு, ஏப். 21

விபத்து இடம்பெற்ற இடத்தில் பொலிஸார்கடமையில்இல்லாத, மட்டக்களப்பு வவுணதீவுப் பொலிஸ் நிலையத்தின் பதில் பொலிஸ்பொறுப்பதிகாரிகடமையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுணதீவுப் பொலிஸ் பிரிவிலுள்ள கன்னங்குடா சந்தியில் கடந்த14ஆம்திகதி அன்று இடம்பெற்றமோட்டார்சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

அந்த விபத்து நேர்ந்த சந்தர்ப்பத்தில் அந்தப்பகுதியில்பொலிஸார் எவரும்பாதுகாப்புக்கடமையில் அங்கு இருக்கவில்லை என்று குற்றச் சாட்டு எழுந்ததைத் தொடர்ந்து, பொலிஸ் பதில் பொறுப்பதிகாரிபதவிஇடைநிறுத்தப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அன்று வவுணதீவுப் பதில் பொலிஸ் பொறுப்பதிகாரிதனதுநிரர்வாகத்துக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் பொலிஸாரைக் கடமைக்கு அமர்த்தியிருந்தார்.

ஆனால்விபத்துஇடம்பெற்றகன்னங்குடா சந்தியில் கடமைக்கு அனுப்பப்பட்டிருந்தபொலிஸார், அங்குகடமைக்குச்செல்லத்தவறிவிட்டனர்என்றுவிசாரணைகளில்இருந்துதெரியவந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

புத்தாண்டுஉட்பட சிறப்பு வைபவங்கள்மற்றும்நிகழ்வுகள்இடம்பெறும்போது அந்தச்சந்தர்ப்பங்களில் பொலிஸார் சிறப்புப் பாதுகாப்புக்கடமைகளில்ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பது பொலிஸ் மாஅதிபரின்பணிப்புரையாகும். (ஐ-46)

# சீனாவின் தலையீட்டைத் தடுப்பதற்கு இலங்கையுடன் இந்தியா உடன்பாடு

## இந்திய ஊடகம் தகவல்



கொழும்பு, ஏப். 21

இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள பயணத்தில், கூட்டு அபிவிருத்தி தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திடும் வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பெருங் கடன் சுமையில் சிக்கியுள்ள இலங்கை, சீனாவின் பிடியில் இருந்து விடுபடுவது கடினமானது. அதைச் சமநிலைப்படுத்தும் வகையில், திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுடன் இணைந்து கூட்டாக அபிவிருத்திசெய்வதற்கு இலங்கை முன்வந்துள்ளது.

இந்தியாவுடன் கூட்டு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைக்கையெழுத்திடவும் இலங்கை தயாராகவுள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தியப் தலைமை அமைச்சர் நரேந்திரமோடியின்கொழும்புக்கான பயணத்தின்போது, இந்த உடன்பாடு கையெழுத்திடப்படக் கூடும்.

அதேவேளை, இரு தரப்பு உறவுகளை மீளாய்வு செய்வதற்கு இலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த மாத இறுதியில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பொருளாதார ரீதியான சாத்தியப்பாடுகள் இருப்பதாகத் தோன்றாததால், இந்தியா கடந்த காலங்களில் திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும்திட்டத்தில்ஆர்வம்காட்டவில்லை. தாம் ஆட்சியில் இருந்தபோது அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்என இந்தியாவிடமே முதலில் கேட்டோம். இந்தியா மறுப்புத் தெரிவித்த பின்னரே சீனாவிடம் அதனை ஒப்படைத்தோம் என்று மகிந்த ராஜபக்ச கூறியிருந்தார்.

பொருளாதார ரீதியாகச் சாத்தியமற்றது என்ற பயத்தால் தான் இந்தியா அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை மறுத்திருந்தது. அதனால் அங்கு சீனாவின் கடுமையான தலையீடுகளை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு சிறப்புப் பொருளாதாரவலயம்ஒன்றைஅமைக்கவும், மத்தள வானூர்தி நிலையத்தை மேலும் விரிவாக்கம் செய்வதற்கும்சீனாவுக்கு இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது.

வணிக ரீதியான அம்சங்களை ஒதுக்கிவைத்து விட்டுப் பார்த்தால், திருகோணமலைத் துறைமுகத்தைக் கூட்டாக இணைந்து அபிவிருத்திசெய்வதற்கு இலங்கை எடுத்துள்ள முடிவு நல்லதொரு அடையாளமாக பார்க்கப்படுகின்றது என்று இந்திய அரசு மற்றும் சுதந்திரமான மூலோபாய விவகார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மூலோபாய சிந்தனையாளரான, பிரமா செல்லானி, இங்கையில்சீனாவின் முதலீட்டிலான திட்டத்தின் மூலம், இந்தியப் பெருங்கடலில் சீனாவுக்குச் சொந்தமான, சீனாவால் நடத்தப்படும் பகுதி ஒன்று உருவாகும் என்று தெரிவித்துள்ளார்- என்றுள்ளது. (த-4)



மீதொட்டமுல்ல இடரால் இடம்பெயர்ந்து, மீதொட்டமுல்ல டேரன்ஸ் என் த சில்வா மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சிவன் அறக்கட்ட நிறுவனம் மெத்தை, மின்விளக்குகள் என்பவற்றை நேற்று முன்தினம் வழங்கியது. நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் அவற்றைக் கையளித்தார். (ஐ)

# போர்க்குற்ற விசாரணைகளை அரசு உடன் நடத்தவேண்டும்

## சிவில் சமூக அமைப்புக்களின் ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 21

ஜெனிவாத் தீர்மானத்துக்கு அமைவாக, இலங்கையின் போர்க்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை கொழும்பு அரசு உடனடியாக நடத்த வேண்டும்.

இவ்வாறு இலங்கையின் சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றியத்தைச் சேர்ந்த அகலங்க ஹெற்றியாராச்சி அங்கு தெரிவித்ததாவது.

"போரின் போதும், போருக்குப் பின்னரும், குற்றங்களை இழைத்தவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். போரின் போது கொடுமைகளைப் புரிந்த சீருடையில் உள்ளவர்களைக் காப்பாற்றுவதற்கு விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவும் முயற்சிக்கின்றனர்.

பொறுப்புக்கூறல் விவகாரங்கள் சரியாகத் தீர்க்கப்படாவிட்டால் பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டவர்கள் என்பதற்காககுற்றமிழைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்கக் கூடாது. போர்க் குற்றச்சாட்டுகள் குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்

# 3 வயதுக் குழந்தையுடனும் சிறுமி மீதும் துர்நடத்தை

## தாய் பொலிஸில் முறைப்பாடு

திருமலை, ஏப். 21

திருகோணமலையில் 3 வயதுக் குழந்தையும் 9 வயதுச் சிறுமியும் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளின் தாயாரால் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது சகோதரரே பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டார் என்று அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட இருவரும் மருத்துவப் பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

32 வயதான சந்தேகநபர் கொழும்பில் பணிபுரிவதுடன், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-5)

# தேங்காய் பறித்த நபர் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஏப். 21

பன்னல ஹெண்டியாகலப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார் என்று தவகல்கள் வெளியாகியுள்ளன.

பன்னலவிலகெதப்பகுதியைச்சேர்ந்த 27வயதான இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தோட்டமொன்றுக்குள்களவாகப்பிரவேசித்து, இவர் தேங்காய் பறித்தார் என்றும் தோட்டத்தின் காவலர் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சம்ப இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-10)

# மீதொட்டமுல்ல இடருக்கு அரசே முழுப்பொறுப்பு

## குற்றஞ்சாட்டுகின்றது மகிந்த அணி

கொழும்பு, ஏப். 21

மீதொட்டமுல்ல குப்பைமேட்டுப் பிரச்சினைக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். இடர் என்ற போர்வைக்குள் இதனைத் தள்ளி விடாமல் முறையான தீர்வை முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு பொது எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முந்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் தெரிவித்ததாவது:

குப்பைமேடு சரிந்து விழுந்து அதிகளவானோர் உயிரிழந்த சம்பவம் இலங்கையிலேயே பதிவாகியுள்ளது. இந்த இடரில் உயிரிழந்தவர்களின்எண்ணிக்கை 30க்கும் அதிகமாகியுள்ளது. அதிகளவிலானோர் இந்தக் குப்பைமேட்டில் புதையுண்டி ருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இங்கு மீட்பு நடவடிக்கைகளைத் துரித கதியில் முன்னெடுக்க வேண்டும். உயிரிழந்தவர்களின் சடலங்களை உரிய முறையில் நல்ல டக்கம் செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயமான நட்ட ஈடு வழங்க வேண்டும் என்று பொது எதிரணி என்ற வகையில் கோரியிருந்தோம்.

அண்மையில் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் ஊடாக உள்நாட்டுப் போரில் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினரின் குடும்பத்துக்கு 20இலட்சம் ரூபா வழங்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கொலன்னாவை மீதொட்டமுல்லப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்புக்கு அரசு அவசரமாக ஒரு இலட்சம் ரூபா வழங்கத் திட்டமிட்டிருப்பது வெட்கத்துக்குரிய விடயம்.

பாதிக்கப்பட்ட தரப்பின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஒரு இலட்சம் ரூபாவை வழங்கிப் பின்னர் நியாயமான நட்டஈட்டை அந்த மக்களுக்கு வழங்கவேண்டும்.

கொலன்னாவை மீதொட்டமுல்ல பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு அதிகளவிலான பொறுப்பு அரசுக்கே உள்ளது.

இடர் என்ற போர்வைக்குள் இந்த அரசு இந்தப் பிரச்சினையை மறைத்துவிட முடியாது. இங்கு கொட்டப்படவேண்டிய குப்பை தொடர்பில் சட்டங்களை மீறி கொழும்பு மாநகர சபை செயற்பட்டுள்ளது. அசமந்தப்போக்கே இந்தப் பெரும் இடருக்குக், காரணமாக அமைந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துக்கு உடன் தீர்வுகாணும் அரசு குறுகியகால மற்றும் நீண்டகால தீர்வுகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (த-4)



# அல்மினா மகா வித்தியாலயத்தில் போதியளவு வகுப்பறைகள் இல்லை

மரங்களின் கீழிலிருந்து கற்கும் அவலம்

திருமலை.ஏப்.21
மூதூர் அல்மினா மகா வித்தியாலயத்தில் போதியளவு வகுப்பறைகள் இல்லை. மாணவர்கள் மரங்களின் கீழிலிருந்து கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்வாறு மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலை மூதூர் கல்வி வலயத்துக்குட்பட்ட அல்மினா மகா வித்தியாலயம் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புக்கள் உள்ளன. இங்கு 419 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். திருகோணமலை மாவட்டத்தில் நகரப்புறத்தில் அமைந்துள்ள அனைத்துப் பாடசாலைகளையும்விட இந்தப்பாடசாலையே மூத்த பாடசாலையாக உள்ளது.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாடசாலையில் போதியளவு வகுப்பறைகள் இல்லை. மாணவர்கள் மரங்களின் கீழிலிருந்து கல்வி கற்கின்றனர்.

தற்போது இருக்கும் வகுப்பறைக் கட்டடங்களின் கூரைகளும் மிகவும் தாழ்வாக உள்ளன. மாவட்டத்தில் அதிகரித்த வெப்பம் நிலவுவதால், கட்டடங்களின் கீழிருந்து கல்வி கற்கும் மாணவர்கள் பல வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கல்வி அதிகாரிகள் உடனடியாக பாடசாலையின் கட்டடவளங்களைச் சீர்படுத்திக் கொடுக்க வேண்டும் - என்றனர். (ஐ-45)

# ஹன்ரர் விபத்தில் பெண் உயிரிழப்பு

8 குழந்தைகள் உட்பட 16 பேர் படுகாயம்

கொழும்பு, ஏப். 21
ஹன்ரர் வாகனம் வீதியை விட்டு விலகி மரம் ஒன்றில் மோதியதில் அதில் பயணித்த பெண் ஒருவர் உயிரிழந்தார்.

8 குழந்தைகள் உட்பட 16 பேர் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து காலிகொழும்பு முதன்மைப் பாதையில் பலப்பிட்டிய ஆசியர் கல்லூரி மைதானத்துக்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்தள்ளது.

விபத்தில் சிக்கியவர்கள் பலப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

ஆபத்தான நிலையில் இருவர் கராப்பிட்டிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

அக்குரஸ்ஸ - ஹேனேகம பிரதேசத்தை சேர்ந்த 45 வயதான பெண்ணொருவரே உயிரிழந்தார்.

சாரதியின் தூக்கக் கலக்கத்தால் விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

# தலைமைகள் மாறாவிட்டால் ஐ.தே.க., சு.க. அழிவடையும்

டல்ஜின் அளுவிகாரே எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 21
மைத்திரியும் ரணிலும் கயிறு இழுக்கும் போட்டியில் ஈடுபடுகிறார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் தற்போதைய தலைமைத்துவம் மாறாவிட்டால் இரு கட்சிகளும் விரைவில் திசை தெரியாமல் போய்விடும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அலிக் அளுவிகாரேயின் மகனும், மாத்தளை மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான டல்ஜின் அளுவிகாரே எச்சரித்தார்.

மாத்தளையிலுள்ள அவரது இல்லத்தில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துதெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"மீதொட்டமுல்ல அசம்பாவிதம் போன்ற மற்றொரு இடர் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க வேண்டுமானால் மூளை உள்ளவர்களை ஆட்சியில் அமர்த்த வேண்டும். ராஜபக்சவின் சகோதரர் என்ற ஒரே காரணத்துக்காகக் கோத்தபாய மீது அவதூறு கூறிக்கொண்டிருப்பது முட்டாள்தனம்.

அவர் இன்று அரசில் இருந்திருந்தால் மீதொட்டமுல்ல அசம்பாவிதம் நிச்சயமாக நடந்திருக்காது.

அரச தலைவர் மைத்திரியும், தலைமை அமைச்சர் ரணிலும் இன்று கயிறு இழுக்கும் போட்டியில் ஈடுபட்டிருக்கிறார்கள். நாடு அதலபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இவர்கள் இருவர் மீதும் நாங்கள் வைத்திருந்த நம்பிக்கை முற்றாகச் சரிந்து போய்விட்டதாலேயே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் நாங்கள் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளோம்"- என்றார். (த-4)



# அமைச்சர்களை திட்டித்தீர்க்கும் ஆட்சியாளர்கள்

கவலைப்படுகிறார் மகிந்த

கொழும்பு.ஏப். 21
"என்னுடைய ஆட்சியில் நான் யாரையும் தரம் குறைந்த வார்த்தைகளால் திட்டவில்லை. ஆனால் கூட்டு அரசின் ஆட்சியாளர்கள் அமைச்சர்களைக் கூட தரம் குறைந்த வார்த்தைகளால் திட்டுகின்றனர்- என்று அறிந்தேன். இதனை நினைத்துக் கவலைப்படுகின்றேன்"

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

குருநாகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புத்தாண்டுதின விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

அமைச்சரவையில் வைத்து தலைமை அமைச்சர், அமைச்சர்களைத் தரம் குறைந்த வார்த்தைகளால் திட்டினார் என்று அறிந்தேன். இவ்வாறான திட்டுக்கள் குருநாகலைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கே கிடைத்துள்ளது. பதவி, அதிகார மோகத்தில் அமைச்சர்களின் பதவி நிலைகளையும் பொருட்படுத்தாது, கூட்டு அரசின் ஆட்சியாளர்கள் மோசமான முறையில் செயற்பட்டு வருகின்றனர். - என்றார். (ஐ-10)

# கடவுச்சீட்டுக்களை இனி இணையத்தில் புதுப்பிக்கலாம்

கொழும்பு, ஏப். 21
கடவுச் சீட்டு விண்ணப்பங்களை இணையத்தின் மூலம் அனுப்பி வைக்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த குடிவரவு குடியகல்வு திணைக்களம் தயாராகி வருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தை நவீனப்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்குத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக கடவுச் சீட்டுக்களைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை இணையத்தின் மூலம் அனுப்பி வைக்கும் வாய்ப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான பணத்தைக் கடன் அட்டை மூலம் செலுத்த முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருட இறுதிக்குள் இந்த வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம் என்று குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-10)

# பங்குச்சந்தைப் பட்டியலில் சைட்டம் மருத்துவக் கல்லூரி

கொழும்பு, ஏப். 21
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி கொழும்பு பங்குச் சந்தைப்பட்டியலின் கீழ் பட்டியல் படுத்தப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்களின் முதன்மைஅதிகாரிகளைநேற்று சந்தித்துக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 'எதிர்வரும் சில வாரங்களில் அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற பதவிகளிலும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இந்த நடவடிக்கை இடம்பெறக் கூடும் - என்று அவர் தெரிவித்தார். (ஐ-10)

# இலங்கையின் கடல்வள அபிவிருத்திகளுக்கு வியட்நாம் உதவும்

இலங்கையின் கடல் வள அபிவிருத்திகளுக்குத் தேவையான அனைத்துத் தொழில் நுட்ப உதவிகளையும் வியட்நாம் வழங்கும் என்று தெரிவித்துள்ளது. இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் வியட்நாமுக்கான உத்தியோகப்பூர்வ பயணத்தில் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர இணைந்திருந்தார். அந்த நாட்டுக் கடற்றொழில் அதிகாரிகளுடன் அவர் நடத்திய பேச்சின் பிரதிபலனாகவே இந்த உதவித் திட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்படுகின்றது.

வியட்நாம் நீரியல்வள தொழில் தொடர்பான கல்விச் சுற்றுப் பயணத்திலும் அமைச்சர் மகிந்த அமரவீர பங்குப்பற்றியிருந்தார். ஏற்றுமதி மீன்வகையான பென்ஜியஸ் என்றமீன் வகையை இலங்கையில் உற்பத்தி செய்கின்றமை குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

இந்த மீன்வகையை ஏற்றுமதி செய்வதன் ஊடாக ஒரு கிலோவுக்கு மூவாயிரம் ரூபா கிடைப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது. இதற்காகப் பெரிய கேள்வி நிலவுகின்றது என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-10)

# சு.கவின் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு அஞ்சப்போவதில்லை

திலும் அமுனுகம தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு அஞ்சப் போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது.



"சிறிலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தாலும் எந்தவொரு ஒழுக்காற்று விசாரணைகளுக்கும் நான் அஞ்சப் போவதில்லை.

எவ்வாறான தடைகள் போடப்பட்டாலும் மகிந்த அணியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்பதைத் தடுக்க முடியாது.

கண்டியில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்கவுள்ளனர்.

மகிந்த அணியின் மே தினக் கூட்டத்துக்குக் கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளும் பங்கேற்கவுள்ளன.

வெளிநாடு சென்றுள்ள மகிந்த அணியின் உறுப்பினர்கள் தவிர்ந்த அனைவரும் இந்த மே தினக் கூட்டத்தில் பங்கேற்பார்கள்" என்றார். (ஐ-10)

# பிரிவினை உண்டாக்காது அனைவருக்கும் உதவுக

## அமைச்சர் பழனி திகாம்பரத்திடம் முல்லை. வாழ் மலையக மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.21

முல்லைத்தீவில் வசிக்கும் மலையக மக்களுக்கு மட்டு மல்லாது மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்டு வீட் டுத் தேவைகள் உள்ள அனைத்து மக்களுக்கும் வீட்டுத்திட்டங்களை வழங்க முன்வர வேண்டும்.

இவ்வாறு மாவட்டத்தைச் சேர்ந்த மலையகத் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத் தனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தைச் சேர்ந்த மலையகத் தமிழ் மக்களுக்குத் தேவை யான வீட்டுத் திட்டங்கள், அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அறியத் தர வேண்டும் என்று மலையக புதிய கிராமம், தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் மற் றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்ப ரத்தால் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலருக்குக் கடி தம் அனுப்பப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள மலை யக மக்களின் தேவைகளை ஆராய்வதற்காக புதுக்குடி யிருப்புப் பிரதேச செயலாள ரால் பிரதேச செயகத்தில் நேற்று முன்தினம் கலந்து ரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. அதில் கருத்து முன்வைத்த போதே மலையக தமிழ் மக் கள் மேற்கண்டவாறு தெரி வித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது: முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை காலமும் மலைய கத் தமிழ் மக்கள் எத்தகைய வேற்றுமைகளும் இல்லா மல் அனைத்து மக்களுட னும் ஒன்றாக வாழ்கின் றோம். புதுக்குடியிருப்பு பிர தேசத்தில் பெரும்பாலான மலையகத் தமிழர்களுக் கும் வீட்டுத்திட்டங்கள் வழங் கப்பட்டுள்ளன. புதுக்குடியி ருப்புப் பிரதேச செயலக பிரி வில் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன.

நேரில் பார்வையிட்டு அவற் றைத் தீர்ப்பதற்கு முன்வராத அமைச்சர் பழனி திகாம்பரம், இங்குள்ள மலையகத் தமி ழர்களுக்கு மட்டும் வீடுகள் கட்டி தருவேன் என்று கூறு வது வருத்தத்துக்குரியது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வீடுகள் இல்லை. அவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க முன் வந்திருக்கலாம். ஒரு சமூகத் துக்கு மட்டும் உதவிகள் செய்வேன் என்று கூறு வதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

போரால் அழிவடைந்த எங் கள் மாவட்டத்தை கட்டியெ ழுப்புவதற்கு அவர் முன்பே வந்திருக்க வேண்டும். இங்கு மலையகத் தமிழர் கள் மட்டும் பாதிக்கப்பட வில்லை. அனைத்துத் தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டுள்ள னர். இங்கு இதுவரை பிரிவி னைகள் இல்லாதுதான் உத வித் திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டன. அமைச்சர் பழனி திகாம்பரத்தால் மேற்கொள் ளப்படும் உதவிகளும் அனை வரையும் சென்றடைய வேண் டும் என்பதே எமது கோரிக்கை என்றனர். (ற-21,7)



## பாதீனியத்தைக் கட்டுப்படுத்த தவறினால் சட்ட நடவடிக்கை

### முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்த தீர்மானம்

முல்லைத்தீவு, ஏப்.21

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதீனியச் செடிகளைக் கட் டுப்படுத்தத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என்று அரச அதிகாரிகளும், விவசாய அமைப்பினரும் இணைந்து தீர்மானித்துள் ளனர்.

ஒட்டுசுட்டான் விவசாய போதனாசிரியர் அலுவலகத் தில் பாதீனியக் கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர் வுக் கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. மாகாண பிரதி விவசாயப் பணிப்பா ளர் தலைமையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

பாதீனியக் களைகளால் ஏற் படும் தீமைகள் தொடர்பாக வும், அவற்றைக் கட்டுப்ப டுத்த வேண்டியதன் அவசி யம் தொடர்பாகவும் விவசா யப் பணிப்பாளர் விளக்க மளித்தார். எதிர்வரும் 27ஆம் திகதி அனைத்து விவசாய அமைப்புகள், பொதுமக்கள், அரச திணைக்கள அலுவ லர்கள் ஒன்றிணைந்து பாதீ னிய ஒழிப்பு நடவடிக் கையை சிரமதானத்தின் மூலம் மேற்கொள்வது என் றும் தீர்மானிக்கப்பட்டது. பாதீனியத்தைக் கட்டுப்படுத் தத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது என் றும் ஏக மனதாகத் தீர்மா னிக்கப்பட்டது.

“பாதீனிய ஒழிப்பு நடவடிக் கையில் வடக்கு விவசாய அமைச்சர் கடந்த காலங்க ளில் முழுவீச்சுடன் செயற் பட்டார். அதற்கென குழுக்க ளும் அமைக்கப்பட்டன. தற்போது வடக்கு மாகா ணத்தின் பல பகுதிகளை யும் பாதீனியம் ஆக்கிரமித் துள்ளது. முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் அவை அதிகம் காணப்படு கின்றன.

வடக்கு விவசாய அமைச் சின் நடவடிக்கைகளால் எமது பகுதிகளில் பாதீனியம் அழிக்கப்படும் என்று எதிர் பார்த்தோம். ஆனால் அவ் வாறு நடக்கவில்லை. எமது வயல் நிலங்கள், வீதிகள் என எங்கும் பாதீனியம் ஆதி கம் செலுத்துகின்றது. விவ சாய அமைச்சு எமது பகுதிக ளில் பாதீனியத்தைக் கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ற-21)

## மாதிரிக் கிராமங்களில் தலா ரூ.7 மில்லியனில் வேலைத் திட்டங்கள்

### வாழ்வின் எழுச்சித் திணைக்களம் ஊடாக

தென்மராட்சி, ஏப்.21

வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் மூன்று கிரா மங்கள் மாதிரிக் கிராமங்களாகத் தெரிவு செய் யப்பட்டு தலா 7 மில்லியன் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இவற்றில் தென்மராட்சிப் பிரதேசத்தின் வாழ் வின் எழுச்சி வரணி வலயத்தின் இடைக்கு றிச்சி கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

பனம்பொருள்கள் உற்பத்திக்குப் பெயர் பெற்ற இடைக்குறிச்சி கிராமத்தில் புதிய வேலைத் திட்டங்களாக இயந்திரத்தின் மூலம் பனங்களி உற்பத்தி செய்தல், பதநீர் உற்பத்தியை அதிக ரிக்கச் செய்து அவற்றின் ஊடாகப் பனை வெல்லம் உற்பத்தி செய்தல் மற்றும் அங்கு பன்ன வேலைப் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து பல குடும்பங்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்தல் போன்ற வேலைத்திட் டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன எனப் பிர தேச செயலக வாழ்வின் எழுச்சி தலைமைப் பீட முகாமையாளர் தெரிவித்தார். (த-9)



## சிறார்கள், பெண்களை வலுப்படுத்தத் திட்டம்

வவுனியா, ஏப்.21

சிறுவர்களை நோக்கிய சமூக அபி விருத்தித் திட்டம் எனும் வலுவூட்டல் திட்டம் நேற்று வவுனியா மகாறம் பைக்குளம் கிராம அலுவலர் அலுவ லகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

மகாறம்பைக்குளம், காத்தார்சின் னக்குளம் கிராம அலுவலர் பிரிவு களை உள்ளடக்கி இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கே.எச்.என். நிறுவனப் பணிப்பாளர் ஏ.விமலன், ஐக்கிய அபிவிருத்தி நிதியத்தின் இலங்கைப் பிரதிநிதி கே டி மெல், வவுனியா பிரதேச செயலா ளர் கா.உதயராஜா, பிரதேச செய லக உத்தியோகத்தர்கள், காத்தார் சின்னக்குளம், மகாறம்மைபைக்கு ளம் கிராம அலுவலர்கள், பெண்கள் அமைப்புக்கள், மகாறம்பைக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டம் 4 இலட்சத்து 25 ஆயி ரம் யூரோ செலவில் ஜேர்மனின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படு கின்றது. சிறுவர்களையும், பெண்க ளையும் வலுப்படுத்தும் விதத்தில் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட் டது. (ற-21)

## சிறார், பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளே அதிகம்

### மகாறம்பைக்குளம், கத்தார் சின்னக்குளம் பகுதிகளில்

வவுனியா, ஏப்.21

பெண்கள், சிறார்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மகாறம் பைக்குளம், கத்தார்சின்னக் குளம், அண்ணாநகர் போன்ற போன்ற இடங்க ளில் இருந்தே சிறுவர்கள், மகளிர் தொடர்பான அதிக முறைப்பாடுகள் கிடைக்கின் றன என்று தெரிவித்தார் வவுனியா பிரதேச செயலா ளர் கா.உதயராசா.

சிறுவர் வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற் றது. அதில் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் ஊடாக உங்க ளுக்கு பணமோ வீடோ, மல சலகூடமோ கிடைக்கப் போவ தில்லை. இந்தத் திட்டத்தின் ஊடாக சிறுவர்களையும், பெண்களையும் வலுப்படுத் தும் திட்டமாகவே இந்தத் திட்டம் அமையும்.

இந்தத் திட்டம் ஐந்து ஆண் டுகளின் பின்னர் எவ்வாறு செயற்படுகின்றது என்ப தைப் பொறுத்து ஏனைய பகுதிகளுக்கும் விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ற-21)

## மக்கள் காணிகளில் இராணுவம் உல்லாச வாழ்வே வாழ்கின்றது

### கேப்பாபிலவு சென்று பார்த்த கூட்டமைப்பு எம்.பிக்கள் கருத்து

முல்லைத்தீவு, ஏப்.21

கேப்பாபிலவு மக்களின் காணிகளில் படையினர் உல்லாச விடுதிகளையே அமைத்துள்ளனர். ஒவ் வொன்றும் 5 நட்சத்திர விடு திகள் போன்று அமைக்கப் பட்டுள்ளன. படையினர் ஆடம்பர வாழ்க்கை நடத்து கின்றனர்.

இவ்வாறு தெரிவித்தனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள்.

அவர்கள் தெரிவித்ததாவது படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கேப்பாப்பிலவு மக்க ளின் வாழ்விடங்களை விடு விப்பது தொடர்பாக ஆராய்வ தற்காக அங்கு சென்றிருந் தோம். படைத் தளபதிகளோ அல்லது அரசோ கூறுவது போன்று அங்கு பாதுகாப்பு நிலைகளோ, படையினர் தங்கும் முகாம்களோ இல்லை.

அந்தப் பிரதேசம் செழிப்பு மிக் கதாகக் காணப்படுகின்றது. மாதந்தம் சுமார் 5 முதல் 6 மில்லியன் ரூபா வருமா னத்தை ஈட்டக் கூடிய வகை யில் பயன்தரு மரங்கள் இருக்கின்றன. கடந்த 8 ஆண்டுகளில் அவற்றைக் கொண்டு படையினர் எவ்வ ளவு வருவாய் ஈட்டிருப்பார் கள் என்று ஊகிக்க முடிகின்றது.

அங்கு 4 பெரும் விடுதிகள் அமைத்துள்ளனர். 5 நட்சத் திர விடுதிகளை ஒத்தவை யாக அவை அமைக்கப்பட் டுள்ளன. அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பா கப் படையினர் எதுவும் செய் வதாக இல்லை.

படையினர் அருகில் உள்ள காட்டை அகற்றி அதில் முகாம் அமைக்க முடியும். படை அதிகாரிகளிடம் அவ் வாறு கூறியபோது தமக்கு அந்தப் பகுதியில் அமைத்த ஒரு கட்டடத்துக்கு 60 மில்லி யன் ரூபா செலவாகியது என்று கூறுகின்றனர்.

அந்தப் பகுதி மக்கள் உங்க ளால் எத்தனை மில்லியன் வருமானத்தை இத்தனை காலம் இழந்திருப்பார்கள் என்று அந்த அதிகாரிகளிடம் கேட்டால் அதற்கு அவர்கள் மௌனம் காக்கின்றனர். என்றனர். (ற-101)

## வீட்டில் தனித்திருந்தவர் அடிகாயங்களுடன் மீட்பு

வீட்டில் தனித்திருந்த குடும்பத் தலைவர் அடிகாயத்துடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த யோகராசா (வயது - 70) என்பவரே காயமடைந்தவராவார்.

சுண்டுக்குழியில் அமைந்துள்ள அவர் வேலை செய்யும் கடை முதலாளியின் வீட்டில் தங்கியிருந்தபோதே தாக்குத லுக்கு உள்ளாகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

தலையில் காயமடைந்து மயங்கிய நிலையில் காணப்பட்ட அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும் தெரி விக்கப்பட்டது. (ற-12)



## மீதொட்டமுல்லவில் இறந்தோருக்கு அஞ்சலி

வவுனியா, ஏப்.21

கொழும்பு மீதொட்டமுல்லவில் குப்பை மேடு சரிந்து ஏற்பட்ட இடரில் உயிரிழந்தவர்களுக்கு நேற்று வவுனியாவில் அஞ்சலி செலுத்தப் பட்டது.

வவுனியா மில் வீதியிலுள்ள புளியடி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலாளர் எம். பி. றோஹன புஸ்பகுமார, வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். எஸ். வாசன், வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் ரி.கே. இராஜலிங்கம், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (ற - 21)

## புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 9 பேர் கைது

வவுனியா, ஏப்.21

புதையல் தோண்டினர் என்ற குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பெரிய உலுக்குளம், புதுமடுக் காட்டுப் பகுதியில் புதையல் தோண்டுகின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புதையல் தோண்டுவதற்கு உபயோகிக்கப்பட்டன என்று நம்பப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம், கொல்லன்னாவ, மதவாச்சி, வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற -21)

### காணாமல் ஆக்கப்பட்டோரின் வெளிப்படுத்தலை வலியுறுத்தி

# 27ஆம் திகதி முழு அடைப்பு

## அனைவரும் இணைந்து வலுச் சேர்க்குமாறு அழைப்பு




கிளிநொச்சி, ஏப்.21

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுவிப்பையும் வலியுறுத்தி எதிர்வரும் வியாழக்கிழமை 27ஆம் திகதி கிளிநொச்சியில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. அனைத்துத் தரப்பினரையும் அதில் இணையுமாறு அழைக்கின்றோம். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத் தலைவி கலாரஞ்சினி.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களது உறவினர்களால் கடந்த 60 நாள்களாகக் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக தொடர் போராட்டம் நடத்தப்படுகின்றது. அவர்களுக்கு இதுவரை எந்தவித பதிலும் உரிய தரப்புகளிடம் இருந்து வழங்கப்படவில்லை.

"நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்து இன்று (நேற்று) வியாழக்கிழமையுடன் 60 நாள்களாகின்றன. நாங்கள் அனாதைகள் போன்று வீதியில் போராடி வருகின்றோம். எங்களை அனைவரும் கைவிட்டுள்ளனர்.

எமது பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவு எட்டப்பட வேண்டும் என்றே நாம் போராட்டத்தில் இறங்கினோம். ஆனால் எமது கோரிக்கைகளை எவரும் கண்டு கொள்ளவில்லை. எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் முழு அடைப்பு நடத்துவதற்கு அழைப்பு விடுகின்றோம்.

வர்த்தகச் சங்கங்கள், பொது அமைப்புக்கள், போக்குவரத்துச் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், அரசியல் தரப்புக்கள் என அனைவரும் இணைந்து எமது போராட்டத்துக்கு வலுச் சேர்த்து ஒத்துழைக்க வேண்டுகின்றோம்" என்று சங்கத்தின் தலைவி கலாரஞ்சனி வேண்டுகோள் விடுத்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி வடக்கில் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் திருமலையிலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் 60 ஆவது நாளாகவும், வவுனியாவில் 56 நாளாகவும், முல்லைத்தீவில் 44 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் மருதங்கேணியில் 37 ஆவது நாளாகவும், திருகோணமலையில் 47 ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டங்கள் தொடர்ந்தன. (ற -21,35,6)

## குருவிச்சை ஆற்றுப்பாலம் மக்கள் பாவனைக்கு

ஒட்டுசுட்டான், ஏப்.21

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கற்சிலைமடு பேராறு ஊடாக முல்லைத்தீவு பிரதான வீதியைச் சென்றடையும் வீதியில் அமைக்கப்பட்ட குருவிச்சை ஆற்றுப்பாலம் மக்கள் போக்குவரவுக்கு விடப்பட்டுள்ளது.

முன்னர் பண்டாரவன்னியன் கிராம மக்களில் சிலகுடும்பங்கள் வெள்ளம் ஏற்படும்போது வெளியேற முடியாத நிலைகாணப்பட்டது. இதனைத் தவிர்க்கும் முகமாக இந்தப் பாலம் உயர்த்தி அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. (ற - 500)

## 95 குடும்பங்களுக்கு காணி அனுமதி பத்திரங்கள்

முல்லைத்தீவு, ஏப்.21

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கற்சிலைமடுக் கிராமத்தில் வசிக்கும் 95 குடும்பங்களுக்குக் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு அண்மையில் கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மாகாணக் காணி ஆணையாளரால் 2015ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட கடிதம் மூலம் காணி கச்சேரிகள் இடம்பெற்று 95 குடும்பத்தினர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற - 500)

## கூடுதல் சேமிப்பில் ஈடுபட்ட மாணவர்களுக்கு பரிசில்கள்



யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சித்திரைப் புத்தாண்டில் மாணவர் சேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் கூடுதல் சேமிப்பை மேற்கொண்டவர்களுக்குப் பரிசில்களை வழங்கியது.

சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை சமாச அலுவலகத்தில் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இடம்பெற்றது.

சமாசத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மாணவர் சேமிப்புத் திட்டத்தில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் இணைக்கப் பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தில் இணையும் மாணவர்களுக்குச் சிறப்பு நலத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படும்.

இந்தச் சேமிப்பில் இணைந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கி வைக்கப் பட்டன. அத்துடன் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு கைவிசேடம் வழங்கப்பட்டது. (த - 17)

## முஸ்லிம் மக்களின் வாக்குகளால் சு.கவை மீளப் பலப்படுத்துவேன்

### காதர் மஸ்த்தான் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஏப். 21

முஸ்லிம் மக்களின் வாக்குகளால் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவேன் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இணைத் தலைவருமான கே.காதர் மஸ்த்தான்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் மே தினம் தொடர்பான கூட்டம் நேற்று எஸ்.பி.திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 12 வீதம் முஸ்லிம்களின் வாக்குகள் கிடைத்தன. தற்போது அது 4 வீதமாகக் குறைந்துள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார். இந்த ஆட்சியில் அரச தலைவரை முஸ்லிம்கள் ஆதரிப்பதால் வாக்கு வீதம் அதிகரிக்கும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை திருகோணமலை மாவட்டத்தில் பலப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை முன்னாள் முதலமைச்சரும், மாகாணசபை உறுப்பினருமான நஜீப் ஏ மஜீத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளேன் - என்றார்.



கூட்டத்தில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்த்தான், மாகாண அமைச்சர் ஆரியவதி கலாபதி, மாகாண சபை உறுப்பினர் நஜீப் ஏ. மஜீத், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள அமைப்பாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்ப பலரும் கலந்து கொண்டனர். (ற - 21)

## ஐந்து பிள்ளைகளின் தாயை காணவில்லை என முறைப்பாடு

கிளிநொச்சி, ஏப்.21

கிளிநொச்சி அறிவியல்நகரில் ஐந்து பிள்ளைகளின் தாயொருவரைக் கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவுமுதல் காணவில்லை என்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொன்னகர் வடக்கு, இந்தியன் வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த அல்லிமுத்து இராஜேஸ்வரி (கௌரி (வயது - 40) என்பவரையே காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் கூறப்படுகின்றது.

மெலிந்த பொதுநிறத் தோற்றமுடைய இவர் காணாமல் போன தினமன்று சிவப்பு மற்றும் பழுப்பு வெள்ளைநிற சல்வார் அணிந்திருந்தார். செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வீட்டை விட்டு வெளியேறிய இவர் இரு தொலைபேசிகளையும் எடுத்துச்சென்றுள்ளார்.

காணாமல்போன அன்றிரவு ஒரு மணியளவில் தான் யாழ்ப்பாணம் செல்வதற்காக கிளிநொச்சி பஸ்நிலையத்தில் நிற்கின்றேன் என்று தொலைபேசியில் கூறியுள்ளார். அதன் பின்னர் தொலைபேசி செயலிழந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற- ய)

## ஜி.பி.எஸ். கருவிகளை எமக்கு வழங்கவில்லை

### பூநகரி மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்.ஏப்.21

மீன்பிடிக்கு உதவும் ஜி.பி.எஸ். கருவிகள் தமக்கு வழங்கப்படவில்லை எனப் பூநகரிப் பிரதேச மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

ஏனைய பகுதி மீனவர்களுக்கு ஜி.பி.எஸ். கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. எமக்கு இன்னும் இவை வழங்கப்படவில்லை. பரம்பரை பரம்பரையாக நாங்கள் கடற்றொழிலையே செய்து வருகின்றோம். கடலைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் நாங்கள். கடலை மட்டும் தான் நம்பியிருக்கிறோம். சில வேளைகளில் மீன் பிடிபாடு இல்லாமல் திரும்பி வரும் நாள்களும் உண்டு.

எனவே இலகுவான முறையில் தொழில் புரிவதற்கு ஏற்ற இந்த ஜி.பி.எஸ். கருவிகளை எமக்குப் பெற்றுத் தர ஆவண செய்ய வேண்டும் – என்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீரஞ்சனிடம் கேட்டபோது,

2012 ஆம், 2013ஆம் ஆண்டுகளில் எண்ணெய் மானியம் என்ற ஒரு கொடுப்பனவு மீனவருக்கு வழங்கப்பட்டது. பின்பு அது நிறுத்தப்பட்டது. இதனடிப்படையிலேயே ஆரம்பத்தில் ஜி.பி.எஸ். கருவிகள் வழங்கப்பட்டன. எண்ணெய் மானியம் எடுத்தவர்களுக்குத் தான் ஜி.பி.எஸ். கைக்கருவிகள் வழங்கப்பட்டன. இப்பொழுதும் வழங்கப்படுகின்றன. அனைத்துப் பகுதி மீனவர்களுக்கும் அவை வழங்கப்படுகின்றன. மீனவர்கள் வலை கேட்டால் வலையும் ஜி.பி.எஸ். கருவி கேட்டால் அதனையும் கொடுக்கிறோம் – என்றார். (த-12)



முல்லைத்தீவு மல்லாவி வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவுக்கான கட்டடம் நேற்று வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டது. நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், எனப் பலர் கலந்து கொண்டனர். (ற - 21)

## வறட்சியால் பாதிக்கப்பட்டால் நிவாரணம்

### முல்லை. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.21

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் பாதிப்புகள் ஏற்படுமாயின் இடர் முகாமைத்துவத்தின் ஊடாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க முயற்சிக்கப்படும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.


முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைய வாரங்களாகக் கடும் வெப்பமான காலநிலை நிலவுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் குளங்களில் நீர் இன்மையால் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படாத நிலையில், தற்போது வான் பயிர்களும் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வறட்சியால் பாதிப்புகள் ஏற்படும் பட்சத்தில் இடர் முகாமைத்துவத்தின் ஊடாக நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும்" -என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ற - 7)

# நந்திக் கடலில் தொழில் செய்ய முடியாத நிலை

### ஆழமாக்க வேண்டும் என பிரதேச மீனவர்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, ஏப்.21

நந்திக் கடலை ஆழப்படுத்த வேண்டும். அதை நம்பித் தொழில் செய்யும் குடும்பங்களை அதனூடாகவே மேம்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தனர் நந்திக் கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள்.

அவர்கள் தெரிவித்ததாவது:

நந்திக் கடலில் ஆரம்ப காலத்தில் தொழில் செய்தமை போன்று தற்போது தொழில் செய்ய முடியாதுள்ளது. 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் மண் மேவி நந்திக் கடலில் ஆழம் வெகுவாகக் குறைந்துள்ளது. அவற்றை அகற்றி ஆழப்படுதினாலே தொழில் செய்ய முடியும்.

கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நந்திக் கடல் ஆழமாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதுவரை எந்த வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. என்றனர்.

"நந்திக் கடலை ஆழப்படுத்துவது சுற்றாடலுக்குத் தீங்காக அமையும் என்று சுற்றாடல் அதிகார சபையினர் தெரிவித்தனர். ஆயினும் நந்திக் கடலைத் துப்புரவு செய்வதற்கு கற்கள், அடைசல்களை அகற்றுவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டளவில் அது நடைமுறைப்படுத்தப்படும்." என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ற - 7)

## தவணைக் கட்டணம் பிந்தியதற்கு 5,000 ரூபா குற்றப்பணம் அறவீடு

### நிதி நிறுவனம் ஒன்றின் மீது பாதிக்கப்பட்டோர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஏப்.18

கிளிநொச்சி நகரத்தில் இயங்கிவரும் நிதி நிறுவனம் ஒன்று தனிநபர் கடன்பெற்ற பெண்கள் சிலர் தவணைக் கட்டணத்தைப் பிந்திச் செலுத்தியமைக்குக் குற்றப்பணமாக 5 ஆயிரம் ரூபாவை அறிவிட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

எனினும் பற்றுச்சீட்டுகளில் குற்றப்பணம் எனக் குறிப்பிடப்படாமல் தவணைக் கட்டணம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

சுகவீனமுற்ற நிலையில் கடந்த சில மாதங்களாக சுயதொழிலை மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்த பெண்ணொருவரிடமும் இவ்வாறு பணம் வசூலிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் பல பாகங்களிலும் கிளைகளைக் கொண்டுள்ள பிரபலமான அந்த நிதி நிறுவனத்தில் பெண்கள் பலர் சுமார் 3 லட்சம் ரூபாவரை தனிநபர் கடன்களாகப் பெற்றுள்ளனர். இதனை மாதாந்தம் 12 ஆயிரத்து 500 ரூபா வீதம் 36 மாதங்களில் திருப்பிச் செலுத்துகின்றனர்.

"குறித்த தவணையில் கட்டணத்தை செலுத்தத் தவறினால் குற்றப்பணமாக 5 ஆயிரம் ரூபா முதல் 6 ஆயிரம் ரூபா வரை செலுத்துவதற்கு நிர்ப்பந்திருக்கின்றனர். நிறுவனத்தின் பிரதிநிதிகள் வாடிக்கையாளர்களுடன் கெடுபிடியாக நடந்து கொள்கின்றனர்.

தனிநபர் கடன் பெற்ற பலரிடம் இவ்வாறு தண்டப்பணம் அறவிட்டுள்ளது. பல பெண்கள் இதுதொடர்பில் போதிய தெளிவற்ற நிலையில் இருக்கின்றனர். கடனுக்கு பெருந்தொகைப்பணம் வட்டியாக அறவிடப்படும் நிலையில் தண்டம் என்ற பேரிலும் பெருந்தொகைப்பணம் பணம் அறவிடப்படுகிறது.

இது எந்த நிதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் மத்திய வங்கி அதிகாரிகள் மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்." என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

"எம்மால் தண்டப்பணம் எதுவும் அறவிடப்படுவதில்லை. அவர்கள் பெற்ற கடனுக்கு வட்டியுடன் சேர்த்து மொத்தமான தொகை ஏற்கனவே கணக்கிடப்பட்டுள்ளது. அந்தத் தொகைக்கு மேலதிகமாக அவர்கள் ஒரு ரூபாவும் செலுத்தத் தேவையில்லை. அதேநேரம் இவ்வாறான குற்றச்சாட்டுகள் எம்மிடம் ஆதாரங்களுடன் முன்வைக்கப்படும் பட்சத்தில் அதுதொடர்பாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்." என்று அந்த நிதி நிறுவனத்தின் கிளை முகாமையாளர் தெரிவித்தார். (ற -ய)

# தொடர் போராட்டமே காணிகளை மீட்டுத் தரும்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு
### கேப்பாபிலவு மக்களையும் சந்தித்தார்

முல்லைத்தீவு, ஏப்.21

இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்க அரசுக்கு விருப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அரசியல் ரீதியாக அவற்றை விடுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு உண்டு. அதற்கு உங்கள் தொடர் போராட்டம் வலிமை சேர்க்கும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று கேப்பாபிலவில் மக்கள் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களை வடக்கு முதலமைச்சர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.





அவர் தெரிவித்ததாவது:

உங்கள் போராட்டம் தொடர்ந்து நடப்பதைப் பாராட்டுகின்றேன். இந்தப் போராட்டத்தின் ஊடாகத் தான் அரசுக்கு ஒரு நெருக்குதலைக் கொடுக்க முடிகின்றது. அரச தலைவருக்கு நான் ஒரு நீண்ட கடிதம் அனுப்பியிருந்தேன். இந்த விடயம் தொடர்பாகத் தீர்க்கமான முடிவெடுப்பதற்காக அரச தலைவரைச் சந்திக்கவுள்ளேன். அரச தலைவரும் தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

உங்கள் காணிகளை விடுவிப்பதற்காக அடையாளப்படுத்தியுள்ளீர்கள். உங்கள் வருமானத்தை இராணுவம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. இந்த விடயங்கள் எல்லாம் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் சொல்லப்பட்டுள்ளன. அவர்களும் அரசுக்கு நெருக்குதல்கள் கொடுக்க வேண்டும்.

அரசு இராணுவம் இங்கு இருக்க வேண்டும் என்று விரும்புகின்றது. அதனால் காணிகளை விடுவிக்க முடியாத நிலையில் உள்ளனர். தூங்குபவனை எழுப்பலாம், தூங்குவது போன்று நடிப்பவனை எழுப்ப முடியாது. அரசும் அவ்வாறு தான் செயற்படுகின்றது.

அரசியல் ரீதியில் காணிகளை விடுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து எதிர்ப்பைக் காட்டிக் கொண்டு இருக்க வேண்டிய தேவை உள்ளது. தொடர்ந்து போராட்டத்தை நகர்த்தினாலே காணிகளை விடுவிக்க முடியும்" - என்றார்.

தமது காணிகளை அடையாளப்படுத்துவதற்காக நேற்றுமுன்தினம் சென்றுவந்தமை தொடர்பாக வடக்கு முதலமைச்சருக்கு மக்கள் விளக்கினர். தமது காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும் வரை தாம் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று அவர்கள் 51ஆவது நாளாகத் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (ற -7)

# கங்கையை சுத்தப்படுத்த சச்சின் பரப்புரை

புதுடெல்லி, ஏப். 21
இந்தியாவின் புனித நதிகளில் ஒன்றான கங்கையைச் சுத்தப்படுத்த இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் தலைமையில் பரப்புரைக் குழு அமைக்க மோடி ஆலோசித்து வருகிறார் என்று இந்திய ஊடகங்கள் நேற்றுக் குறிப்பிட்டன.
கங்கையைத் தூய்மைப்படுத்தும் திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியைக்கொண்டு கங்கையில் கழிவு நீர் கலக்கும் இடங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. சுத்திகரிப்பு செய்யப்பட்ட பின்பு தான் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் தண்ணீரும் கங்கையில் விட நேரிடும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.
கங்கை கரையில் உள்ள நகரங்களில் வசிக்கும் மக்கள் பிளாஸ்டிக் குப்பைகள் போன்றவற்றைக் கொட்ட வேண்டாம் என்றும் விழிப்புணர்வுப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இந்த விழிப்புணர்வுப் பரப்புரையைப் பிரபலங்களைக் கொண்டு மேலும் தீவிரப்படுத்த பிரதமர் மோடி முடிவு செய்துள்ளார்.
இந்தக் குழுவுக்கே சச்சின் தலைமை தாங்கவுள்ளாராம். (ம)



ஈராக்கின் பிரபல வயலின் கலைஞரான அமீன் முக்தாத், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போரில் அழிவடைந்துள்ள மோசூல் நகர, நபி யுனஸ் ஆலயத்தில் வயலின் வாசித்து உலகின் கவனத்தைப் பெற்றுள்ளார். நபி யுனஸ் ஆலயம் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னரேயே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து மீட்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இமாச்ச... 45 பே...

புதுடெல்லி, ஏப். 21
இமாச்சலப் பிரதேசத்தின் சிம்லா மலைப் பாதையில் நேற்றுமுன் தினம் நண்பகல் பயணித்த பேருந்து, பாதையில் இருந்து விலகி ஆற்றுக்குள் பாய்ந்ததில் 45 பேர் உயிரிழந்தனர். உத்தரகாண்ட் மாநிலத்தின் விகாஸ் நகரில் இருந்து இமாச்சல பிர தேசத்தின் துனி கிராமத்திற்குச் சென்ற பேருந்தே அவ்வாறு விபத்துக்கு உள்ளானது. பேருந்தில் 56 பயணிகள் பயணம் செய்தனர். உயிரிழந்த 45 பேரைத் தவிர ஏனையவர்கள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருசிலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)



# காய்ச்சலை கட்டுப்படுத்த தவளைகளில் மருந்து



வொஷிங்டன், ஏப். 21
தென்னிந்தியத் தவளையிடமிருந்து கிடைக்கும் ஒருவித பிசுபிசுப்பான திரவம் பலவகை காய்ச்சல் தொற்றுக்களைத் தடுக்கக்கூடிய நிவாரணியாக உள்ளது என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நிறுவினர். அமெரிக்காவின் அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழகத்தைத் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களின் ஆய்விலேயே இந்த முடிவு வெளிப்பட்டது. இதன் அடுத்த கட்டப் பரிணாமம் தொடர்பில் தொடர்ந்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. (ம)

# ஓ.பி.எஸ். - எ... இன்று சந்தித்து...

## இந்திய ஊடகங்கள் தகவ...



சென்னை, ஏப். 21
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம், தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் இன்று சந்தித்துப் பேச்சில் ஈடுபடவுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைந்த பின்னர் அவர் வகித்து வந்த அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் பதவி சசிகலாவுக்கும் முதல்வர் பதவி ஓ.பன்னீர் செல்வத்துக்கும் கொடுக்கப்பட்டது. கட்சியும் ஆட்சியும் ஒருவரிடத்தில் இருக்க வேண்டும் என்று தெரிவித்து ஓ.பன்னீர்செல்வத்திடம் இருந்து முதல்வர் பதவியையும் எடுத்துக் கொள்ள சசிகலா முடிவு செய்தார். இதனால் கட்சி இரண்டாக உடைந்தது. சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா சிறைக்குச் செல்லுவதற்கு முன்னர் தனது அண்ணன் மகன் டி.டி.வி. தினகரனைத் துணைப் பொதுச்செயலாளராக நியமித்தார். தினகரன் ஜெயவால் நீக்கப்பட்டவர். எனவே அவரது நியமனத்தைப் பலரும் ஏற்கவில்லை. ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் வேட்பாளராகவும் தினகரன் நிறுத்தப்பட்டார். இடைத்தேர்தலில் வாக்குகளுக்குப் பணம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு தினகரனின் மீது உள்ளது. இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்காக அவர் இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுத்தார் என்று டெல்லி பொலிஸார் ஆதாரத்துடன் வழக்குப் பதிவுசெய்துள்ளனர்.
இதனால் அ.தி.மு. கழகம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.
இது தொடர்பில் கடந்த திங்கட்கிழமையும் ...வாய்க்கிழமையும் ஆ...சனை நடத்திய முத... எடப்பாடி பழனிச்ச... அமைச்சர்கள், சட்ட... உறுப்பினர்கள் சசி... குடும்பத்தை அடியே... நீக்கிவிட்டு கட்சியை ... துவது என்று முடிவெ... கடந்த செவ்வாய்க்கிழ... இரவு அறிவித்தனர்... சியைத் தற்காலிகமா... வகிக்கக் குழு அமைக்... டும் என்றும் அவ... தெரிவித்தனர்.
ஓ.பன்னீர்செல்வம் த...லும், எடப்பாடிபழனிச்... தரப்பிலும் எதிரணிய... பேச்சில் ஈடுபடவு... குழுக்கள் அமைக்...

# வெனிசூலா அதிபருக்கு எதிராக வெடித்தது மக்கள் போராட்டம்



கராக்கஸ், ஏப். 21
வெனிசுலாவில் அதிபர் நிக்கோலஸ் மதுரோவுக்கு எதிராக ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து மக்கள் போராட்டங்கள் வெடித்த வண்முள்ளன.
தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுலாவில் தற்போது பெரும் உணவுத்தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் அந்த நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவருக்கு எதிராகவும் எதிர்கட்சித்தலைவருக்கு ஆதரவாகவும் அங்கு தொடர்ந்து பேரணிகள் நடைபெற்று வருகின்றன.
மத்திய கராக்கஸில் நேற்றுப் பேரணி நடத்தப்பட்டது. அங்கு திடீரென நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 17 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான் என்று சொல்லப்படுகிறது.
பொலிஸாரே துப்பாக்கிச் சூடு மேற்கொண்டனர் என்று ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவித்தனர். பெரும் திரளான இளைஞர்களின் பங்குபற்றலால் நாளுக்கு நாள் ஆர்ப்பாட்டங் கள் வலுப்பெற்றுச் செல்கின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அதிபருக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் பலரும் தற்போது சிறையிடப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பதற்றத்தை முடிவுக்கு...

வொஷிங்டன், ஏப். 21
கொரியத் தீபகற்பத்தில் நிலவும் போர்ப் பதற்றத்தை முடிவுக்குக் கொண்டுவர வட கொரியாவுக்கு அழைப்பு விடுத்தார் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே.
பன்னாட்டு விதிமுறைகள் மட்டும் ச...களை மீறி வடகொரியா ஆயுத மற்... அணுவாயுதச் சோதனைகளை ந... வருகிறது. இதனால் ஐக்கிய நாடு... சபை, அமெரிக்கா, ஜப்பான், தென்...ரியா ஆகியன அந்த நாட்டின் மீது ...

# ச்சலத்தில் கோர விபத்து
# பர் பரிதாப உயிரிழப்பு

ம்லா
தினம்
பாதை
க்குள்
தனர்.
கொஸ்
தேசத்
சன்ற
உள்
னிகள்
த 45
படுகா
துவம
வர்க
லைக்
ழப்பு
ரிக்க
டப்பட்
(ம)





## பூமிபோலின் உடலம்
## ஒக்ரோபரில் அடக்க

பாங்கொக், ஏப். 21
கடந்த 6 மாதங்களின் முன்னர் உயிரிழந்த தாய்லாந்து அரசன் பூமிபோலின் உடலம் எதிர்வரும் ஒக்ரோபரில் அடக்கம் செய்யப்படும் என்று அந்த நாட்டு அரசு அதிகார பூர்வமாக அறிவித்தது.
தாய்லாந்து மன்னர் அதுல்யதேஜ் பூமிபோல் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி உயிரிழந்தார்.
இவரது மறைவுக்கு உலகப் பிரபலங்கள் பலரும் தமது இரங்கலைத் தெரிவித்திருந்தனர்.
அடுத்த ஒரு வருடத்துக்குத் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. மிகவும் சிறந்த முறையில் அவரின் உடல் பதனப்படுத்தப்பட்டு தலைநகரில் வைக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி பாங்கொக்கில் உடல் அடக்கம் செய்யப்படும் என்று தற்போதைய மன்னரும் பூமிபோலின் மகனுமான வயிரலோங்காரன வித்தார். இறுதிச் குகள் 5 நாள்கள் பெறும் என்றும் அறிவித்தார்.
தனது 18 ஆவது தில் மன்னராக ஆட் பீடம் ஏறிய பூமிபோ தனது 88 ஆவது வ தில் உயிரிழந்தார். 70 ஆண்டுகள் தாய்லாந்தை ஆண்டார். இவரின்ஆட்சியேஅந்த நாட்டின் பொற்காலம் என்று தாய்லாந்து ஊடகங்கள் பலவும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(ம)

# எடப்பாடி
# து பேச்சு

வல்

### அமெரிக்க எல்லைப் பகுதிக்குள் ரஷ்யாவின் போர் விமானங்கள்

*அத்துமீறி கண்காணிப்பு நடவடிக்கை*

வொஷிங்டன், ஏப். 21
அமெரிக்கப் பகுதிக்குள் ரஷ்யப் போர் விமானங்கள் இரண்டு அத்துமீறி நுழைந்து பின்னர் அவை திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) இடம்பெற்றன.
கொடியாக் என்ற பகுதியிலேயே இந்தப் பதற்ற நிலை உருவானது. இதனையடுத்து அமெரிக்கா தனது போர் விமானங்களை அந்தப் பகுதிக்கு விரைந்து அனுப்பியது. பின்னர் ரஷ்யப் போர் விமானங்கள் பின்வாங்கிச் சென்றன என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன. எனினும் அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனோ அல்லது ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகமோ எந்தத் தகவலும் வெளியிடவில்லை.
(ம)



மயும் செவ்
மையும் ஆலோ
ந்திய முதல்வர்
பழனிச்சாமி,
ள். சட்டமன்ற
ர்கள் சசிகலா
த அடியோடு
கட்சியை நடத்
முடிவெடுத்து
வாய்க்கிழமை
வித்தனர். கட்
காலிகமாக நிர்
அமைக்கப்ப
ம் அவர்கள்
ார்.
சல்வம் தரப்பி
டிபழனிச்சாமி
எதிரணியுடன்
டுபடவுள்ள
அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் இன்று சந்தித்து இணைப்புத் தொடர்பில் கலந்தாலோசிக்கவுள்ளன. குழுக்களின் சந்திப்பைத் தொடர்ந்து எடப்பாடி பழனிச்சாமி - ஓ.பன்னீர்செல்வம்இடையே சந்திப்பு இடம்பெறும் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
எடப்பாடி பழனிச்சாமி - ஓ.பன்னீர்செல்வம் இடையிலான சந்திப்பை அடுத்து கட்சியின் பொதுச்செயலாளர் எவர் என்பதும் முதல்வர் எவர் என்பதும் தெரியவரும் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
(ம)

## 3,500 வருடங்கள் பழமையுடைய மம்மிகள் எகிப்தில் கண்டுபிடிப்பு

கெய்ரோ, ஏப். 21
எகிப்தின் லக்சார் நகர் அருகே உள்ள பழங்கால கல்லறையில் இருந்து 8 மம்மிகளை தொல்பொருள் ஆய்வாளர்கள் கட்டுபிடித்துள்ளனர்.
எகிப்து நாட்டின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள நகரம் லக்சார். இந்த நகரின் அருகில் உள்ள பகுதிகளில் அந்நாட்டு தொல்லியல் துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.
அங்குள்ள 3 ஆயிரத்து 500 வருடங்கள் பழமை வாய்ந்த கல்லறை ஒன்றில் இருந்து 8 மம்மிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
அவற்றுடன் மரத்தினாலான வண்ணமிகு பெட்டிகள் மற்றும் இறுதிச் சடங்குகளுடன் தொடர்புடைய ஆயிரத்திற்கும் அதிகமான சிலைகளும் இருந்துள்ளன.
இதுபற்றி தொல்பொருள் அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இந்த மம்மிகள் நகர நீதிபதியாக இருந்த வர்களினுடையவையாக இருக்கலாம்' என்று குறிப்பிடப்பட்டது.
(ம)





## 1,800 கோடிகளைத் திரட்டி டொனால்ட் ட்ரம்ப் சாதனை

வொஷிங்டன். ஏப். 21
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தனது பதவியேற்பு விழாவுக்காக இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஆயிரத்து 800 கோடி ரூபாவை நன்கொடையாகத் திரட்டி புதிய சாதனை படைத்தார். இது கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு முன்னாள் அதிபர் ஒபாமா திரட்டியதைப்போல் 2 மடங்கு அதிகம்.
ட்ரம்பின் பதவியேற்பை நடத்துவதுக்கு என்று நியமிக்கப்பட்ட விழாக்குழு வழங்கியுள்ள கூட்டறிக்கையில், சமீபகால வரலாற்றில் பொதுமக்கள் மிகவும் எளிதாகப் பங்கேற்கும் வகையில் நடைபெற்ற அதிபர் பதவியேற்பு விழாக்களில் ஒன்றாக ட்ரம்பின் பதவியேற்பு விழாவும் அமைந்திருந்தது. திரட்டப்பட்ட நிதி ஒபாமா திரட்டியைத் போல் இரண்டு மடங்கு அதிகம்' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.
(ம)

# க்குக் கொண்டுவர வடகொரியாவுக்கு ஹாலே அழைப்பு

மட்டும் சட்டங்
ஆயுத மற்றும்
களை நடத்தி
கிய நாடுகள்
ன், தென்கொ
ன் மீது கடும்
பொருளாதாரத்தடைகளைவிதித்துள்ளன.
எனினும் வடகொரியாவின் சோதனைகள் தொடர்ந்ததால் அமெரிக்கா தனது விமானம் தாங்கிப் போர்க்கப்பலான வின்சனை கொரியத் தீபகற்பத்தில் நிறுத்தியுள்ளது. இது, வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்காவின் இராணுவ நகர்வு என்று கருதப்பட்டது.
அமெரிக்காவுடன் அணுவாயுதப்போருக்கும் தயார் என்று வடகொரிய அறிவித்தது. இதனால் தற்போது கொரியத் தீபகற்பத்தில் பெரும் பதற்றமான சூழல் நிலவுகிறது. மூன்றாம் உலகப்போர் வெடிக்க சாத்தியக்கூறுகள் அதிகமுள்ளது என்று அரசியல் நிபுணர்கள் கணித்துள்ள நிலையில் அமைதியாகச் செல்ல வடகொரியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் நிக்கி ஹாலே.
(ம)



# சிறந்த தொழில்நுட்ப உற்பத்தி செயன்முறை வழங்கியாக ஹுவாவி

## சந்தைப் பங்கு 30 சதவிகிதமாக அதிகரிப்பு

சந்தை ஆராய்ச்சி மற்றும் பயனாளர்களின் அனுபவம் தொடர்பான நிபுணத்துவச் சிறப்பினை பெற்றுள்ள ஜி.எவ்.கே அறிக்கையிடலின் அடிப்படையிலே 3 ஆவது காலாண்டில் ஹுவாவி தனது சந்தைப்பங்கை 30 வீகிதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அந்தவகையிலே இலங்கையின் திறன்பேசி சந்தையில் ஹுவாவி இரண்டாவது நிலையில் உள்ளது. குறிப்பாக மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம், புத்தாக்கம் மற்றும் கூட்டு முயற்சி ஆகியவற்றின் மூலமாக தனது வாடிக்கையாளர்களுக்கான சிறந்த தொழில்நுட்ப உற்பத்தி செயன்முறைகளை தொடர்ந்தும் தரமான முறையிலே வழங்கி வருகின்றது.

இதன்படி நுகர்வோருக்கான சாதனங்கள் தொடர்பிலான எதிர்காலப் போக்கு மற்றும் பங்காளர்களின் மேம்பட்ட தொழில்நுட்பம் ஆகியவற்றுக்கிடையே தற்போது உருவாக்கப்பட்டு வருகின்ற ஒருங்கிணைப்பு, நவீனமயப்படுத்தப்பட்ட உற்பத்திகள் மற்றும் வியப்பூட்டும் பயனாளர் அனுபவம் என்பன சிறப்பானதாக காணப்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

HUAWEI



# பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்த அரசு நடவடிக்கை

## அபிவிருத்தி குறித்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இந்தியாவுடன் மேற்கொள்ளத் தீர்மானம்

நாட்டுக்கான பொருளாதார ஒத்துழைப்புச் செயல் நிலைகளை வலுப்படுத்துவதற்கான திட்டமிடல் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் திட்டமிடப்பட்டுள்ளதான இலங்கைப் பயணத்துக்கான நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்துதல் மற்றும் இந்தியாவுடனான பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க இம்மாதத்தின் இறுதி வாரத்தில் இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்போது பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களை உள்ளடக்கிய இந்தியாவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் உறுதி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பொருளாதார அபிவிருத்தி குறித்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் தலைமை அமைச்சரின் உத்தியோகபூர்வ பயணத்தின் போது ஏற்படுத்தப்படவுள்ளன.

கடந்த 2015 ஆம் ஆண்டு ரணில் விக்ரமசிங்க நாட்டின் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றுக் கொண்டதன் பிற்பாடு அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் மூன்றாவது பயணம் இதுவென்பது நோக்கத்தக்கது.

# "அன் சென்ட்"

## வட்ஸ் அப்பில் புதிய தகவல் செயலி அறிமுகம்

நுட்பம்




தொழில்நுட்பத்தின் செயல் விதிகள் மனித நடத்தைகளையும் அவர்களிடம் இருந்தான தகவல் பரிமாற்றங்களையும் பின்னூட்டங்களோடு இடையறாது விரைவுபடுத்தியுள்ளது.

அந்தவகையிலே வட்ஸ்அப்பில் தவறுதலாக அனுப்பப்படும் தகவல்களை ஐந்து நிமிடங்களுக்குள்ளாய் 'அன் சென்ட்' தகவல் செயலி இயங்கு நிலை மூலம் முடிவுறுத்திக் கொள்ள முடிகிறது.

குறிப்பாக உலகில் உள்ள பல கோடி வாடிக்கையாளர்களை தன் வயப்படுத்திக் கொண்டுள்ள வட்ஸ்அப் வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களை செய்து கொண்டே வருகிறது. அந்த மாற்றங்களுள் ஒன்றாகவே மேற்படி 'அன் சென்ட்' செயன்முறையும் அமைந்துள்ளது.

அண்மையில் ஜிப், புகைப்படம், காணொலி போன்றவற்றை பதிவிடலில் வைக்கும் புதிய தரவேற்றங்களை வட்ஸ் அப் அறிமுகப்படுத்தியது.

அதன்வழியே தற்போது குறுந் தகவல் அனுப்புவதிலும், எழுத்துக்களின் அளவுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தகவல் அனுப்பும் போது அதில் சில குறிப்பிட்ட எழுத்துகளை மேற்கோள் செய்வதற்கான வசதியாக சரிந்த மற்றும் தடித்த வடிவமைப்புக்களின் உள்ளீடுகளையும் வட்ஸ் அப் அறிமுகப்படுத்தவுள்ளது.

தற்போது சோதனையில் உள்ளதான இந்தப் பதிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கொள்கை வட்டி வீதங்களில் மாற்றங்கள் ஏதுமில்லை சமனிலையை பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானம்

சந்தைக்கான வட்டி வீதங்களை தீர்மானித்துக் கொள்வதில் நேரடியான தாக்கங்களை செலுத்தக்கூடிய கொள்கை வட்டி வீகிதங்களை மாற்றமின்றி தொடர்ந்தும் சமனிலைத்தன்மையோடு பேணிக்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இதன்படி நடைமுறையிலுள்ள நிதிக் கொள்கைகளில் நீடித்த உறுதித்தன்மை காணப்படுவதான தகவல்களும் தீர்மானமாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை மத்திய வங்கியில் நிலையான வைப்புகள் மற்றும் நிலையான கடன் வசதிகளுக்கான விகிதாசாரங்கள் முறையே 7 மற்றும் 8.5 என்ற நிலைபேறான மட்டங்களில் தொடர்ந்தும் மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்படும் என மத்தியவங்கி தெரிவித்துள்ளது. அதேவேளை யாப்பு ரீதியான கையிருப்புகளுக்கான விகிதாசாரம் என்பது 7.5 சதவிகிதமாகப் பேணப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# ஐந்து சதவீதமான உள்நாட்டு நிறுவனங்களே ஏற்றுமதிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கை மற்றும் மாலைதீவு பிரதிநிதிக்குழு தூதுவர் டங் லை மார்கி தெரிவிப்பு

ஐந்து சதவீதமான உள்நாட்டு நிறுவனங்கள் மட்டுமே ஏற்றுமதிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதான தகவலும் புள்ளி விபரங்களின் தகவலடிப்படையிலே கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை ஏற்றுமதிச் சந்தையில் பெரிய அளவிலான மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை என்பதான கருத்தும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கை மற்றும் மாலைதீவு பிரதிநிதிக்குழுத் தூதுவர் டங்லை மார்கியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,

"கடந்த 2016 ஆம் ஆண்டை விடவும் நடப்பாண்டில் ஏற்றுமதிச் செயற்பாடுகளில் மந்த நிலை காணப்படுகின்றது. புதிய மாற்றங்கள் என்பது சற்றுக் கடினமானதாகவே அமையும். ஏற்றுமதியை அபிவிருத்தி செய்யும் நோக்கம் அதிகப்படுத்தப்பட வேண்டும். நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையிலான ஏற்றுமதியை இரட்டிப்பாக்கி ஏற்றுமதி சார் பெறுமதியை 10 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 20 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்த்துவதற்கு கடந்த காலங்களில் அரசு மேற்கொண்டதான அறிவிப்புகள் வினைத்திறனாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போதும் அது சார்ந்த செயல்நிலைகள் முனைப்புப்பெறவில்லை. சமனிலையிலிருந்து குறைவடைந்துள்ளது. பன்முகத்தன்மை ஊடாகவே இலங்கை ஏற்றுமதித் துறையில் வெற்றி காணமுடியும் என நம்புகிறேன்." - என்றார்.



"கடந்த 2016ஆம் ஆண்டுக்கான மொத்த ஏற்றுமதி வருமானம் என்பது ஏறத்தாழ 10 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருப்பது டன் அதில் அண்ணளவாக 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆடைகள் மற்றும் தொழிற்சாலை துறைகளிலிருந்தே பெறப்பட்டுள்ளது"



# சைவ சமயத்தை மேன்மையுறச் செய்த திருநாவுக்கரசு நாயனார்

மதுரகவி
காரை.எம்.பி.அருளானந்தன்

நிலாவின் தண்ணொளி என்பன பலவும் ஒருங்கி யைந்த நிலையில் ஓர் ஒப்புயர்வற்ற கலைஞன் குற்றமற்ற வீணையை எடுத்து மீட்டி இசை மழை பொழிந்து இன்புறுகின் றான். அவ் இசைக்கலை யின் வெள்ளத்தில் மிதக் கும் போது அவன் உள்ளம் எத்தகைய குளிர்ச்சியும், இன்பமும் , அமைதியுமுற் றுச் சிறந்து திகழுமோ அத்தகைய நிலையில் இன் பமும் குளிர்ச்சியும் அமை தியும் மிக்கதாக இறைவ னின் திருவடி நிழல் விளங்கும் எனத் திருநாவுக்கரசர் அழகுறப் பாடுகின்றார்.

திருநாவுக்கரசர் தமிழ் நாட்டின் தலை சிறந்த ஒரு பெருஞ்சான்றோர். சிறந்த பக்தர் ஒப்புயர் வற்ற சமயப் பெரியார் இணை யற்ற பெரும் அருளாளர், சிறந்த சிவஞானச் செல்வர், சைவசமய ஆசிரியர்கள் நால்வருள் ஒருவர். தேவாரம் என்னும் சிறந்த தெய்வீ கத் திருப்பாடல்களை அருளிச் செய்த அருள் பெருங்கவிஞர். தமிழ் நாட்டுச் சமய வளர்ச்சி பற்றிய சரித் திரத்தில் அவர் மிகவும் முக்கியத்து வம் பெற்று விளங்குகின்றார்.

**ஞானத்தவ முனிவர்**

ஞானத்தவமுனிவர் என்றும், "தமிழ்மொழித்த லைவர்" என்றும் "தாண்டக வேந்தர்" என்றும் பிறவாறும் சேக்கிழார் பெருமான் அவரை மிக வும் புகழ்ந்து போற்றுகின்றார். திருநாவுக்கரசர் திருவிருத்தம், திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்னும் அரிய இனிய பாடல் கள் பலவற்றைப் பாடியுள்ளார். அவைகள் அனைத்தும் எளிமையும், இனிமையும், உருக் கமும், உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொள்ள வல்லனவாகத் திகழ்கின்றன.

இறைவனின் திருவடியின்பத்தை அவர் விளக் கியிருக்கும் முறை பெரிதும் வியக்கத்தக்கதாக உள்ளது. நல்ல இளவேனிற் காலம் இனிய மாலை நேரம், மென்மையான தென் றல் காற்று, குளிர்ச்சி மிக்க தாம ரைப் பூந்தடாகம், முழு நிலா வின் தண்ணொளி என்பன பலவும் ஒருங்கியைந்த நிலையில் ஓர் ஒப்புயர் வற்ற கலைஞன் குற்ற மற்ற வீணையை எடுத்து மீட்டி இசை மழை பொழிந்து இன்புறுகின் றான். அவ் இசைக்கலை யின் வெள்ளத்தில் மிதக் கும் போது அவன் உள் ளம் எத்தகைய குளிர்ச்சியும், இன்பமும் , அமைதியுமுற்றுச் சிறந்து திகழுமோ அத்த கைய நிலையில் இன்பமும் குளிர்ச்சியும் அமைதியும் மிக்கதாக இறைவனின் திருவடி நிழல் விளங்கும் எனத் திருநாவுக்கரசர் அழகு றப்பாடுகின்றார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடிநிழலே"

எனவரும் திருநாவுக்கரசர் பாடல் எவ்வளவு இனிமை மிக்கதாக விளங்குகின்றது. எளிய இனிய சொற்களில் மிகவும் சிறியதொரு செய் யுளில் இறையருள் இன்ப நலத்தினை எவ்வ ளவு அழகாகத் திருநாவுக்கரசர் விளக்கி யிருக் கின்றார். பாடல் சிறிதேயா யினும் அதன் அனுப வப்பயன்மிகமிக உயர்ந்ததாகவிளங்குகின்றது. திருநாவுக்கரசரின் பாடல்கள் எளிய சிறு ணசொற்களால் உயரிய சிறந்த கருத்துக்களை எம் போன்றோர் உள்ளங்களில் நன்கு பதியம் வண்ணம் அழகுற எடுத்துக் கூறும் தெளிவும் சிறப்பும் வாய்ந்தவை.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே!"

என்பன போன்றுவரும் இனிய அருமையான பாடல்கள் பலவற்றைத் திருநாவுக்கரசர் அரு ளிச் செய்துள்ளார். மக்கள் வாழ்க்கைக்கு நலம் பயக்கும் பற்பல அரிய நல்ல அருளுரைக ளைத் திருநாவுக்கரசரின் பாடல்களில் நாம் பெரிதும் காணலாம்.

**அரும்பெரும் ஞானம்**

திருநாவுக்கரசரின் தமிழ் வேதங்கள் ஓதுபவர் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு உவகை அளிக்க வல்லவை. அவற்றை அன்பு டன் நாள்தோறும் பயில்பவர் அனைவரும் தத்தம் மனமாசுகளும், கவலைகளும் நீங்கி தம் வாழ்விற் படிப்படியே உயர்ந்து பலவகை நலங்களையும் எய்துவர் என்பது திண்ணம். கவிதை நயம் காண்போர்க்கும் இலக்கிய இன் பம் விரும்புவர்க்கும் பக்தியுணர்வில் திளைப் பவருக்கும் மனஅமைதியை நாடுவோர்க்கும் திருநாவுக்கரசர் அருளிச் செய்துள்ள பாடல்கள் அனைத்தும் ஓர் அரும்பெரும் ஞானப் புதைய லும், கலைக்களஞ்சியமும் ஆகும்.

இந்து வெள்ளி

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று



ஆலயம் தொழுவது சாலவும் நன்று 'கோயில் இல் லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றெல் லாம் பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். இறை வனை வணங்கும் பொருட்டு நாம் ஆலயங்களை நாடிச் செல்கின்றோம். இறைவன் குடியிருக்கின்ற வீடுகளாகவே ஆலயங்கள் கருதப்படுகின்றன. இதனால் அவை புனிதம் நிறைந்தனவாக மதிக்கப்படுகின்றன.

உலகிலே இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் எனப் பல்வேறு மதப் பிரிவினர் வாழ்கின்றனர். இவர்கள் தமது சம்பிரதாயத்துக்கு ஏற்ற வகையில் ஆலயங்களை அமைத்து வணங்கி வருகின்ற னர். இவர்களது வழிபாட்டு முறைகள் வெவ்வேறாகக் காணப்பட்டாலும் இறைவனைத் தேடுவதே அவற்றின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

எமக்குத் துயரம் ஏற்படும் போதெல் லாம் ஆலயங்களுக்குச் சென்று இறை வனிடம் அவற்றைக் கூறிப் பரிகாரம் தேடுகின்றோம். இறைவன் எம்மைக் கைவிட மாட்டார் என்ற மனத் திருப்தி யுடன் வீடு திரும்புகின்றோம். எமக் கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு மாபெரும் சக்தியே இறைவன் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இதற்கு அப்பால் எதுவுமே இல்லை.

ஆனால் மனிதர்கள் தமக்குத் துன்பம் ஏற்படும்போதுதான் ஆலயங்களை நாடிச் செல்கின்றனர். மகிழ்ச்சியான தரு ணங்களில் இறைவனை மறந்து விடுகிறார்கள். ஆனால் மகிழ்ச்சியும் நீடிப்பதில்லை. துயரங்களும் தொடருவ தில்லை.

எது எப்படியிருந்த போதிலும் மனிதர்களின் துன்பங்கள் நீங்குவதற்கான வடிகாலாக ஆலயங்களே காணப்படுகின் றன. இவற்றைப் புனிதமாகவும், அமைதியுள்ளனவாகவும் பேணிப் பாதுகாக்க வேண்டியது எமது முக்கியமான கட மையாகும். அப்போதுதான் ஆலயங்களைத் தரிசிப்பதற் கான முழுப் பயனையும் எம்மால் அனுபவிக்க முடியும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அனைத்து மாணவருக்கும் சம வாய்ப்பு வழங்க வேண்டும்

தொழில்நுட்பவளர்ச்சிக்குஅமைய, பாடசாலைகளில் டிஜிற்றல் முறைக் கல்வியைப் புகுத்து வதற்கான திட்டத்தின்முதல்படியை இலங்கைஎடுத்துவைத்துள்ளது. தொழில்நுட்ப யுகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்துக்கு ஏற்ப, கற்றல் முறைமையையும் மாற்றியமைக்க வேண்டும் என்பது நீண்டகாலமாகவே விவாதிக்கப்பட்டு வரும் ஒரு விடயம். எனவே தற்போது இலங்கை எடுத்து வைத்திருக்கும் முதல் அடி, எதிர்காலத்திற்கேற்ற அவசியமான நடவடிக்கைதான்.

இந்தத் திட்டத்தின் கீழான மாதிரி டிஜிட்டல் வகுப்பறை ஒன்றுகல்வி அமைச்சில்நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. கல்வி அமைச்சர் அகிலவிராஜ்காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் இதனைத் திறந்து வைத்தார்கள். நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றில் இந்த மாதிரி வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான வசதிகளையும் பொருள்களையும் கல்வி அமைச்சு வழங்கவுள்ளது.

எதிர்காலச் சந்ததியின் மேம்பாடு, வளர்ச்சி கருதி கல்வி முறையிலும், கற்றல் முறையிலும் மாற்றங்கள்ஏற்படுத்தப்படுவது அவசியம். அதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. கடந்த 20 வருடங்களில் மனிதன்சார்ந்த ஏனைய துறைகள் அடைந்த வளர்ச்சியைக்கற்பித்தல்துறை அடையவில்லை என்பது மிகச் சரியானதே. கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன்னைய வகுப்பறை மாதிரிகளிலேயே மாணவர்கள் இன்னமும் படித்து வருகிறார்கள்.

தொழில்நுட்பம் எவ்வளவோ வளர்ந்து அதன் மூலம் ஏனையதுறைகளில்பெரும்மாற்றம்வந்துவிட்டபோதிலும், கற்பித்தல் துறையில் அது ஏற்படுத்திய மாற்றங்கள் மிகச் சொற்பமானவையே. கற்பித்தலில் தொழில்நுட்பம் பயன்படுகின்றது என்றபோதிலும் அது கற்பித்தலில் ஒரு புரட்சியை ஏற்படுத்திவிட்டது என்று சொல்ல முடியாது.

அந்தஅடிப்படையில்பார்த்தால், தற்போது கொண்டுவரப்படவுள்ள டிஜிட்டல் வகுப்பறைகள் அதில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தக்கூடும். மாதிரி வகுப்பறை தொடர்பில் கல்வி அமைச்சால் வெளியிடப்பட்ட ஒளிப்படங்களைப் பார்க்கின்றபோது அது புரிகின்றது. இந்த முயற்சியை வரவேற்று மனதார வாழ்த்துகின்ற அதேசமயத்தில் மனதில் மற்றொரு அச்சம் எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

இலங்கையின் கல்வித்துறை பெரும்பாலும் அரசின் கைகளிலேயே இருக்கின்றபோதிலும், அதில் ஏற்றத் தாழ்வுகள் அதிகம் காணப்படுகின்றன. அரச பாடசாலைகள் அனைத்தும் ஒரே மாதிரியான வசதிகளையும் வாய்ப்புகளையும் கொண்டவையல்ல. அனேகமாக நகரப்புறத்தில் உள்ள பாடசாலைகளில்காணப்படும் வசதிகளும் வாய்ப்புகளும் கிராமப்புறப் பாடசாலைகளில் இல்லை.

ஆளணி மற்றும் பௌதிக வளங்களில் இந்த வேறுபாடு மிகப் பெரியது. நகரப்புறப் பாடசாலைகள், அதிலும் அனைத்தும்அல்ல, பெரியளவில் ஆளணி மற்றும் பௌதிக வளங்களைக் கொண்டிருக்கின்றபோது கிராமப்புறப் பாடசாலைகள் அவற்றில் மிகவும் பின்தங்கியிருக்கின்றன. வடக்கிலே பின்தங்கிய பகுதிகளில் குறிப்பாக வன்னியில் கணித, விஞ்ஞான, ஆங்கில பாட ஆசிரியர்களே இல்லை என்கிறநிலைதான்நீடிக்கிறது. மாணவர்கள்அமர்ந்துபடிக்க நிரந்தர வகுப்பறைகள் இல்லாத பாடசாலைகளும்கூட இருக்கத்தான் செய்கின்றன.

இப்படிக் கடுமையான ஏற்றத் தாழ்வுகளை ஏற்கனவே கொண்டிருக்கும் அரச பாடசாலைகளில் கொண்டுவரப்படவுள்ள இந்த டிஜிட்டல் புரட்சி இன்னும் அதிகமான, சரி செய்யப்படவே முடியாத இடைவெளியை நகர மற்றும் கிராமப்புறப் பாடசாலைகளிடையே ஏற்படுத்திவிடுமோ என்கிறஅச்சம்மேலெழுகின்றது. அவ்வாறானநிலைஒன்று ஏற்படாமல் இருப்பதைஉறுதிப்படுத்த வேண்டியதுகல்வி அமைச்சினதும், கல்வித் துறையினரதும் கடமை.

மாணவர்கள்புதிய முறையில்கற்பதை மட்டுமல்ல, பயன்பாட்டிலுள்ளதொழில்நுட்பங்களில்அவர்களைமுன்னேற்றுவதுமே இந்தத் திட்டத்தின் நோக்கம். அனைத்து மாணவர்களுக்கும் அந்த வாய்ப்புக்கிடைத்தால் மட்டுமே, இது சாத்தியம். இல்லையேல் ஒரு தொகுதியினருக்குக் கிடைக்கும்வாய்ப்பு ஏனையோருக்கு மறுக்கப்படும். அரசுஅதற்கு அனுமதிக்கக்கூடாது. அதற்கேற்ற வகையில் திட்டமிட வேண்டும்.



கட்டுரை

# போரின் பின்னர் 8 ஆண்டுகள் கடந்த நிலையில் வடக்கு மக்களின் வாழ்வியல் குறித்து ஓர் பார்வை

ஆங்கிலவழிமூலம் - தநஷனல் - ஜென்னி கஸ்ரவ்சன்
மொழியாக்கம் - நித்தியபாரதி

இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்றபோர் நிறைவு பெற்று எட்டு ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போது பெரும்பாலான மக்கள்தமதுசொந்தஇடங்களில் மீளக்குடியேறுவதுடன் தமது வாழ்விடங்களையும்மீளக்கட்டியெழுப்பிவருகின்றனர்.

'எமது அயலிலேயே எங்களது வீடுதான்முன்னர்மிகப்பெரிய வீடாகக் காணப்பட்டது' என தற்போது கிளிநொச்சியில் இடிந்தநிலையில்காணப்படும் தமது வீட்டின் தளத்தில் நின்றவாறு தம்பதியினரான கந்தசாமி மற்றும்சிவமலர் ஆகியோர் தெரிவித்தனர்.

அந்த வீட்டின் அடிப்பகுதி மட்டுமே இடிபாடுகளிலிருந்து தப்பிக் காணப்படுகிறது. அந்த வீட்டின் சுவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அடையாளம் காண முடியவில்லை. கிளிநொச்சியில் இவர்களது தோட்டம் மட்டுமே தற்போது வெறுமையாகக் காணப்படுகிறது. போரின் காரணமாக அங்கிருந்த பெரும்பாலான வீடுகள் அழிக்கப்பட்டன.

'எமது வளவில் மாமரம் மட்டுமே எஞ்சியுள்ளது. நாங்கள் எமது வீட்டை விட்டு இடம்பெயர்ந்தபோது இந்த மரம் மிகச் சிறியதாகக் காணப்பட்டது. தற்போது இந்த மரம் மிகப் பெரிதாகவளர்ந்துவிட்டது'என கே.சிவமலர் தெரிவித்தார்.

### தமது பழைய வாழ்வியலை இரை மீட்கும் மீளக்குடியமர்ந்தோர்

நாட்டில் இடம்பெற்ற போர் காரணமாக இரண்டு பத்தாண்டுகளாக இந்தியாவில் அகதிகளாக வாழ்ந்த இந்தத் தம்பதியினர், தற்போது தமது சொந்த இடத்துக்குத்திரும்பியுள்ளனர். கந்தசாமிஒருநீரிழிவுநோயாளியாவார். இவரால் இந்தியாவில் தனக்கான மருத்துவச் செலவை ஈடு செய்ய முடியவில்லை. இந்தியாவில் அகதிகளாக வாழ்வோருக்கு அடிப்படை மருத்துவப்பராமரிப்புமட்டுமே வழங்கப்படுகிறது. இந்தியாவின்தெற்குமாநிலமானதமிழ்நாடு இலங்கையின் வடக்கில் வாழும் தமிழ் மக்களுடன் மொழி மற்றும் கலாசாரத் தொடர்பைப் பேணி வந்துள்ளது; தற்போதும் பேணிவருகிறது. தற்போதும் தமிழ்நாட்டில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் வாழ்கின்றனர்.

'இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுற்ற பின்னர் தமிழ்நாட்டு அகதி முகாம்களில் வாழ்ந்த 8000 பேர் தமது சொந்த நாடான இலங்கைக்குத்திரும்பியுள்ளனர். பலர் தற்போதும் இலங்கையில்இடம்பெறும் அசாதாரண சூழல் காரணமாக இலங்கைக்குத்திரும்பிச்செல்வதில் தயக்கம் கொள்கின்றனர்'என இந்தியா மற்றும் இலங்கையில் வாழும் அகதிகளுக்கு ஆதரவளிக்கும் நிறுவனமான (OfERR) இலங்கைத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுநிறுவனத்தைச் சேர்ந்த ஏ.சுதர்சன் தெரிவித்தார்.

போர் இலங்கையின் வடக்கின் பெரும்பகுதியை அழித்துள்ளது. குறிப்பாக 2009இல் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போர் பெரும் அழிவுக்குக்காரணமாகஉள்ளது. அப்போதைய அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போரின்போது புலிகளின் போர் வலயத்துக்குள் அகப்பட்ட பொது மக்கள் பல அழிவுகளைச் சந்தித்தனர். போர்வலயத்திலிருந்து மக்கள் தப்பிச் செல்வதற்குபுலிகள்அனுமதிக்

> போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்த போதிலும், போர் வடுக்களை இலங்கை அரசால் ஆற்றுப்படுத்த முடியவில்லை. 2015ல் இலங்கையில் புதிய அரசு தெரிவு செய்யப்பட்ட போது, போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதி வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் இந்த மீறல்கள் தொடர்பில் நீதியை எட்டுவதில் புதிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தாமதம் காண்பிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையால் விமர்சிக்கப்பட்டுள்ளார்.



> இராணுவமயமாக்கல் என்பது இலங்கையில் மிகப் பெரியதொரு பிரச்சினையாக உள்ளது. இதனால் நாட்டில் இனங்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதில் இடர்கள் ஏற்பட்டுள்ளன. சித்திரவதை என்பது தொடர்ந்தும் 'பொதுவான' பிரச்சினையாகக் காணப்படுகிறது. பாதுகாப்புப் படையினரால் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் குறித்து இன்னமும் விசாரிக்கப்படவில்லை. வடக்கில் தொடர்ந்தும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் தங்கியுள்ளனர். இராணுவத்தினர் அனைவரும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

கவில்லை. இதனால் இந்த மக்கள் செறிவான எறிகணைத் தாக்குதல்களால் இலக்கு வைக்கப்பட்டனர். இந்தப் போரில் 40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டது.

போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்த போதிலும், போர் வடுக்களை இலங்கை அரசால் ஆற்றுப்படுத்த முடியவில்லை. 2015ல் இலங்கையில் புதிய அரசு தெரிவுசெய்யப்பட்ட போது, போர்க் குற்றங்கள் தொடர்பில் நீதி வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால் இந்த மீறல்கள் தொடர்பில் நீதியை எட்டுவதில் புதிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தாமதம் காண்பிப்பதாக ஐக்கிய நாடுகள் சபையால் விமர்சிக்கப்பட்டுள்ளார்.

'போர்க் குற்றங்கள் தொடர்பில் தீவிர நடவடிக்கை எடுத்தால் ராஜபக்சவின் ஆட்சி மீளவும் நிலைபெறலாம் என மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு அச்சம் கொள்கிறது. அரசின் கைகள் கட்டப்பட்டால் அதில் எவ்வித பயனுமில்லை' என மனித உரிமைச் செயற்பாட்டாளர் மரிசா டா சில்வா தெரிவித்தார். போரின் போது வீடுகளை இழந்த மக்கள் தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச்சென்றுகொண்டிருக்கின்றனர். இதுவரை 50,000 வீடுகள் மீளநிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால் போர் இடம்பெற்ற பகுதிகளில் வாழ்வோரில் 137,000 குடும்பங்கள் வீடற்றவர்களாக உள்ளனர். தமது வீடுகளை மீளநிர்மாணிப்பதில் இந்த மக்கள் பெரும் இடர்ப்படுகின்றனர்.

'எமது அயலை நாங்கள் 'குட்டிச் சிங்கப்பூர்' என்றே கூறுவோம். எமது அயலில் நாம் மிகுந்த செல்வச் செழிப்புடன் வாழ்ந்தோம். எமது வாழ்வு சிறப்பாக அமைந்திருந்தது. அகதி வாழ்வு ஆரம்பிக்கப்படும் வரை நாம் சிறப்பான வாழ்வை வாழ்ந்தோம்' என ஆர். கந்தசாமி தெரிவித்தார்.

**விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம்களது அனுபவம்**

ஜான்சி கபூர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒஸ்மானியா கல்லூரியின் அதிபராவார். ஒஸ்மானியா கல்லூரி என்பது யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லீம் மாணவர்கள் கல்வி கற்பதற்கென நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஜான்சி கபூரின் தந்தையாரும் அதிபராகவே கடமையாற்றினார். ஆனால் 1990ல் வடக்கில் வாழ்ந்த முஸ்லீம்கள் அவர்களது சொந்த வீடுகளிலிருந்து விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட பின்னர் இந்தப் பாடசாலை மூடப்பட்டது.

'விடுதலைப்புலிகள் எமது வீட்டுவாசல்களில் துப்பாக்கிகளுடன் நின்றனர். அவர்கள் எமது வீடுகளிலிருந்து நாங்கள் வெளியேறுவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே அவகாசம் தந்தனர். நாங்கள் எமது வீடுகளிலிருந்து எந்தப் பொருள்களையும் எடுத்துச்செல்ல அவர்கள் எமக்கு அனுமதி வழங்கவில்லை. நாங்கள் அனைத்தையும் இழந்தே யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறினோம்' என கபூர் தெரிவித்தார். வடக்கில் தனியாட்சியை நிறுவுவதற்கான புலிகள் அமைப்பின் முயற்சியின் ஒரு பகுதியாகவே வடக்கில் வாழ்ந்த 65,000 வரையான முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். போர் முடிவுற்ற நிலையில் தற்போது முஸ்லீம்கள் மீண்டும் தமது சொந்த இடத்திற்குத் திரும்பியுள்ளனர்.

'நிலத்தை மீளப் பெறுவதென்பது பெரியதொரு பிரச்சினையாக உள்ளது' என பெண்கள் உரிமைச் செயற்பாட்டாளர் ஜன்சிலா மஜீட் தெரிவித்தார். 'பெரும்பாலான முஸ்லிம் மக்களிடம் ஆவணங்



கள் காணப்படவில்லை. ஏனெனில் அவர்கள் தமது நில ஆவணங்களை இடப்பெயர்வின்போது தொலைத்திருந்தனர். ஆனால் முஸ்லீம்கள் மற்றும் தமிழ் சமூகங்களிடையே புதிய தொடர்பை உருவாக்கவே நாங்கள் விரும்புகிறோம்' என ஜன்சிலா மஜீட் தெரிவித்தார். 2015ல் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய கபூர் மற்றும் அவருடைய பெற்றோர்கள், தமது வீட்டின் உட்பகுதியைத் திருத்தியுள்ளனர். இவர்கள் வாழும் வீதியிலுள்ள பல வீடுகள் இன்றும் போரின் வடுக்களைச் சுமந்து காணப்படுகின்றன. போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த 2500 முஸ்லீம் குடும்பங்களில் 500 குடும்பங்கள் மட்டுமே மீளவும் யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ளன.

'இடம்பெயர்ந்து சென்ற இடங்களில் மக்கள் புதிய வாழ்வை அமைத்துள்ளனர். புதிய தலைமுறையினர் தமது பெற்றோர்களின் சொந்த இடத்திற்குத் திரும்பிவர விரும்பவில்லை' என வடக்கில் வாழும் இடம்பெயர்ந்த மக்களுக்காகப் பணியாற்றிய இடா சுகன்யா ஜேசு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தின் பிறிதொரு பகுதியான சுன்னாகத்தில் வாழ்ந்து வரும் வி. பத்மாவதியும் தனது சொந்தக் கதையைப் பகிர்ந்து கொண்டார். இவரது குடும்பம் 1990ல் இடம்பெயர்ந்தது. இதனால் இவர் வாழ்ந்த வீடும் ஏனைய வீடுகளைப் போல இலங்கை இராணுவத்தினரால் அறிவிக்கப்பட்ட உயர்பாதுகாப்பு வலயத்துள் உள்ளடக்கப்பட்டுள்ளது. '27 ஆண்டுகளாக நாங்கள் எமது சொந்த நிலத்தைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. எமது நிலமானது பயிர் செய்வதற்குச் சிறந்த நிலமாகும். நாங்கள் இங்கு திரும்பிச் சென்றாலும் கூட அங்கு வாழ்வது சிரமமானது. ஏனெனில் எமது நிலம் சிறியது. ஆனால் எமது குடும்பம் விரிவடைந்து விட்டது.

**சொந்த இடம்விட்டு இடம்பெயர்ந்து முகாம் வாழ்க்கைக்குப் பழகிப் போனவர்களது மன உணர்வுகள்**

பத்மாவதியின் தற்போதைய வீடானது இடம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் உள்ளது. இந்த முகாமுக்குள் பிரவேசித்த போது சலவைத் தூள் மற்றும் எண்ணெயில் பொரிக்கப்படும் மிளகாய் போன்றவற்றின் வாசனைகள் காற்றுடன் கலந்திருந்தன.

அந்த முகாமில் வாழும் அனைத்து மக்களும் மயிலிட்டி என்ற இடத்திலிருந்து இடம்பெயர்ந்தவர்களாவர்.

'இந்த மக்கள் தமது சொந்த இடத்தில் வாழ்ந்த போது மிகவும் செல்வச் செழிப்போடு வாழ்ந்தனர். ஆனால் இவர்கள் இடம்பெயர்ந்த பின்னர் வாழ்வதற்கு மிகவும் துன்பப்படுகின்றனர்.' என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆய்வாளரான நியந்தினி கதிர்காமர் தெரிவித்தார். கேப்பாப்பிலவைச் சேர்ந்த மக்கள் தம்மைத் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி கடந்த பெப்ரவரி மாதம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து இலங்கை அரசு போரின் பின்னர் வழங்கிய தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கோரி பரவலான ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையின் புதிய அரசு தனது கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியில் தமிழ் மக்களது ஒரு பகுதி நிலத்தை விடுவித்துள்ளது. ஆனாலும் 12,750 ஏக்கர் வரையான நிலங்கள் இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. மக்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து சில நிலங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் கேப்பாப்பிலவு மற்றும் மயிலிட்டி போன்ற இடங்களில் பெருமளவான நிலங்கள் விடுவிக்கப்படவில்லை என மக்கள் கூறுகின்றனர்.

இராணுவமயமாக்கல் என்பது இலங்கையில் மிகப் பெரியதொரு பிரச்சினையாக உள்ளது. இதனால் நாட்டில் இனங்களிடையே நல்லிணக்கத்தை உருவாக்குவதில் இடர்கள் ஏற்பட்டுள்ளன. சித்திரவதை என்பது தொடர்ந்தும் 'பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகிறது. பாதுகாப்புப் படையினரால் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் குறித்து இன்னமும் விசாரிக்கப்படவில்லை. வடக்கில் தொடர்ந்தும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் தங்கியுள்ளனர். இராணுவத்தினர் அனைவரும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களில் இலங்கை இராணுவத்தினரால் தற்போது விடுதிகள், உணவகங்கள் மற்றும் சுற்றுலா மையங்கள் நடத்தப்படுகின்றன.

'தென் ஆசியாவில் அதி தீவிரமாக இராணுவமயமாக்கப்பட்ட நாடாக இலங்கை காணப்படுகிறது. அதாவது பத்துப் பொது மக்களுக்கு ஒரு இராணுவச் சிப்பாய் என்ற விகிதாசாரத்தில் இராணுவச் சிப்பாய்கள் உள்ளனர். இந்த நிலைமை, போர் மனநிலையிலிருந்து அமைதி நிலைக்குக் கொண்டு செல்வதற்கு தடையாக உள்ளது' என உளவியல் நிபுணரும் இலங்கை நல்லிணக்கத்தை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட செயலணியில் அங்கம் வகிப்பவருமான தயா சோமசுந்தரம் தெரிவித்தார்.

வடக்கு கரையோரத்திற்கு அருகிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் இலங்கை இராணுவத்தினரால் வீடுகள் கட்டப்படுகின்றன. இது 'நல்லிணக்கபுரம்' அல்லது 'நல்லிணக்க கிராமம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த வீட்டின் உட்பகுதியில் அரச தலைவர் சிறிசேனவின் ஒளிப்படம் காணப்படுகிறது.

'நாங்கள் மீண்டும் எமது சொந்த இடத்திற்குச் செல்லமுடியும் என நான் நினைக்கவில்லை. இதற்குப் பதிலாக நாங்கள் எமது வாழ்வை இங்கேயே வாழவேண்டியேற்படும்' என கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக அகதி முகாமொன்றில் வாழ்ந்துவரும் டனிஸ்ரன் என்பவர் தெரிவித்தார்.



# வாசகர் திருமுகம்

## அமைதியை உருவாக்குவதில் துரிதம் தேவை

இரண்டாம் உலகப்போரின் கொடுமை கண்டு மீண்டும் ஓர் அழிவு வேண்டாம் என்று சக்திமிக்க நாடுகள் அணிசேர்ந்து உருவாக்கிய ஐக்கிய நாடுகள் சபை இன்று தனது அடிப்படைக் கோட்பாட்டை இழந்து விட்டது அல்லவா?

சிரியப் போரின் கொடுமைகளை, போரின் வலியறிந்த எம்மாலன்றி வேறு எவரால் உணரமுடியும்? வலி சுமந்த நாமன்றி சிறிய மக்களுக்காக எவர் அழுவார்?

ஐயா. அய்லான் குர்தி என்ற குழந்தை அரபுக் கடலில் முத்தமிட்டு வீழ்ந்து கிடந்த காட்சி; ஓம்ரான் தாக்னீஸ் என்ற சிறுவன் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து படுகாயங்களுடன் குருதி வழிய இருந்த காட்சி; 'இப்போது அப்பாவுக்குக் "குட்பை சொல்லுங்கள், அப்பாவுக்குக் குட்பை சொல்லுங்கள்' என்ற சிரியத்தந்தை அப்துல் ஹமீது அல்யூ அப் தன் இரு குழந்தைகளை, அயா. அகமது என்ற பிஞ்சுகளை, அரவணைத்துக் கதறிய காட்சி, இவையெல்லாம் கிறிஸ்தவ குடும்பங்களின் குழந்தைகளாக இருந்தால் ஐ.நா. வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்குமா? நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால் என்று தணியுமோ இந்த அதிகார மோகம்? அமெரிக்காவும் ரஷ்யாவும் ரகசிய உடன்படிக்கை செய்துகொண்டு இஸ்லாமியர்களாகப் பிறந்த பாவத்துக்காக சிரிய மக்களை மாறி மாறித் துவம்சம் செய்கின்றன.

இறுதிக் கட்டப் போரில் முள்ளிவாய்க்காலில் அனாதரவாக அபயக் குரல் எழுப்பிய ஈழத்தமிழர்களது அவலத்தை 'சட்டலைற்றில்' கூர்ந்து அவதானித்த அன்றைய அந்த ஐ.நா தலைமை மேய்ப்பன், மௌனம் காத்து, பயங்கரவாதம் வேரறுக்கப்படுகிறது என இறும்பூது எய்திவிட்டு, வெறும் கண்துடைப்புக்காக இங்கு வந்து முள்ளிவாய்க்கால் பிணப்பூமியில் நின்றுகொண்டு போட்ட வேஷம் போன்றல்லாது,

இன்றைய ஐ.நா தலைமை மேய்ப்பன், சிரியாவின் பேரவலம் தொடராது தடுத்து நிறுத்தத் துரித நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால், ஐ.நா என்ற கீர்த்தி மிக்க நிறுவனத்தின் மதிப்பு மரியாதையெல்லாம் குறுகிய காலத்தினுள் சாயம் வெழுத்துப் போகநேரிடும்.

நா. துஷாந்
வரணி



# கணவரைப் பிரிந்துவிட்டாரா டி.டி?

சின்னத்திரையில் அனைவரும் விரும்பும் நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருப்பவர் திவ்யதர்சினி டி.டி. இவர் தொகுத்து வழங்கும் நிகழ்வுகளுக்கு எனப் பெரிய ரசிகர்கள் வட்டம் இருக்கும். இவர் ஒரு பிரபல இயக்குநரிடம் உதவி இயக்குநராகக் கடமையாற்றுபவரைத் திருமணம் செய்தார்.

திருமணத்துக்குப் பல ரசிகர்கள் வாழ்த்துக்கள் கூறினர். ஆனால், இவர் ஒரு சில மாதங்களாகத் தனது கணவரைப் பிரிந்து வாழ்கிறார் எனக் கூறப்படுகிறது. தற்போது அது உறுதியாகியுள்ளது. இவர் தனது கணவரைப் பிரிந்து தனிமையில் வாழ்ந்து வருகிறாராம், இது இவருடைய ரசிகர்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது.

சமீபத்தில் இவர் நடித்த படத்தில் கூட தனது பெயருக்கு முன்னால் செல்வி என்று குறிப்பிட்டிருந்தார்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**இடபம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாவர். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் நேர்மை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**கடகம்:** பேச்சின் மூலம் அனைவரையும் கவர்ந்திழுப்பீர்கள். தொழில் வளர்ச்சியால் வியத்தகு முன்னேற்றம் காண்பீர்கள். லாபம் அதிகரிக்கும். பெண்கள் குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பர்.

**சிங்கம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். மனைவிக்கு விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கன்னி:** நண்பரின் ஆலோசனையை ஏற்பது நன்மையளிக்கும். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட செயல் இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வங்கி நிதியுதவியுடன் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** முக்கியப் பணியை பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் திணறுவர். வீடு, வாகன வகையில் திடீர் செலவு ஏற்படும்.

**மகரம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். சமுகத்தில் அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் நிலுவைப் பணியை விரைந்து முடிப்பர்.

**கும்பம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டியால் இலாபம் சுமாராகக் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம்.

**மீனம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். பணிகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 8 | | | 3 | |
| 1 | 6 | | | | 5 | | 7 | 4 |
| | | | 9 | | | | 6 | |
| | 4 | | | 7 | | 1 | | 2 |
| | | | | | | | | |
| 5 | | 1 | | 6 | | | 4 | |
| | 7 | | | | 8 | | 1 | |
| 4 | 1 | | 7 | | | | 2 | 3 |
| | 3 | | | 1 | | | 9 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 4 | 8 | 9 | 3 | 1 | 6 |
| 1 | 6 | 9 | 2 | 3 | 7 | 8 | 5 | 4 |
| 4 | 8 | 3 | 5 | 6 | 1 | 9 | 2 | 7 |
| 8 | 3 | 2 | 7 | 9 | 5 | 4 | 6 | 1 |
| 7 | 1 | 6 | 3 | 2 | 4 | 5 | 8 | 9 |
| 5 | 9 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 2 |
| 3 | 4 | 8 | 1 | 7 | 2 | 6 | 9 | 5 |
| 6 | 2 | 5 | 9 | 4 | 8 | 1 | 7 | 3 |
| 9 | 7 | 1 | 6 | 5 | 3 | 2 | 4 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**தனுசு ராசி அன்பர்களே....**

நீங்க எது செஞ்சாலும் யோசிச்சு பண்ணுங்க. யார் விடயத்திலும் தலையைக் குடுக்காதிங்க




இவங்க சொல்றது ச்ரியா இருக்குமோ

**மகர ராசி அன்பர்களே....**

ஆண்டின் முற்பாதியில் எடுக்கிற முயற்சி வெற்றியைத் தரும் பிற்பாதியில் கொஞ்சம் கவனமாக இருக்கனும்



அப்படி நடக்க நான் ஒரு காலமும் விட மாட்டேன்

**கும்ப ராசி அன்பர்களே....**

எந்த எதிர்ப்பு வந்தாலும் சமாளிக்கக் கூடிய சக்தி கிடைக்கும். கவலையை விடுங்க




ஹலோ நேத்து அடிக்க வாறேன்னீங்க! வரவே இல்ல!



**கடவுள்:** உன் தவத்தை மெச்சினேன் ஏதாவது இரு வரங்கள் கேள்.
**பக்தன்:** நான் தூங்கும்போது சாக வேண்டும்.
**கடவுள்:** ஆகட்டும். மற்ற ஒரு வரம்?
**பக்தன்:** எனக்குத் தூக்கமே வரக் கூடாது
**கடவுள்:** ?????

« ச.மணி »

மன்னிப்பதற்கு எல்லாம் காரணம் தேடாதீர்கள்
மன்னித்திட வேண்டும் என்பதை விடவா பெரிய காரணம் கிடைத்துவிடப் போகிறது.




ராசிகளுக்கான

# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

## மீனம்

புதிய ஆண்டு உங்களுக்கு நற்பலன்களை தரும். இல்லத்தில் நெடுநாள்களாகத் தடைபட்டு வருகின்ற சுபகாரியங்கள் இனிதே நடைபெறும். திருமணத்துக்காகவும், புத்திரபாக்கியத்துக்காகவும் காத்திருப்போருக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். விருப்பங்கள் நிறைவேறும். எதிர்பார்க்கும் காரியங்கள் தடையேதுமில்லாமல் இனிதே நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். அலைச்சல் அதிகரித்தாலும் எடுத்த செயல்கள் வெற்றி பெறும். பெப்ரவரி மாதம் முதல் பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

அசையாச் சொத்துகளில் முதலீடு செய்யும் வாய்ப்பு உருவாகும். வீடு, மனை, நிலம், ஆகியவை சேரும் நேரம் இது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். வருடத்தின் மத்தியில் குடும்பத்தினருடன் தொலைதூர சுற்றுலா செல்வதற்கான வாய்ப்பு உண்டு. உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். முன்னோர்களின் சொத்துகளில் பாகப்பிரிவினைக்கான வாய்ப்புகள் உண்டு. சொத்துகள் விடயத்தில் உடன்பிறந்தோர் உங்களோடு ஒத்துப்போவார்கள். வருடத்தின் பிற்பாதியில் தாயார் வழி உறவினர்களால் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரும். தாயார் உடல்நிலையில் கவனம் அவசியம். வருடத்தின் பிற்பாதியில் தனித்து பிரயாணிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

பிள்ளைகளின் செயல்களால் உங்கள் கௌரவம் உயரும். நெடுநாள்களாக நிலுவையில் இருந்த வழக்குப் பிரச்சினைகள் விரைவில் முடிவுக்கு வரும். கடன் சுமைகள் குறையத் தொடங்கும். நிலுவைகள் வசூலாகும். தன்னம்பிக்கை கூடும். எதையும் திடமாகச் சிந்தித்துத் தீர்க்கமான முடிவு எடுத்து மற்றவர்கள் மத்தியில் நற்பெயர் காண்பீர்கள். முதியோர்களின் ஆசி கிடைக்கும். ஆன்மிகப் பணிகள், தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

மாணவர்களுக்கு எழுத்து வேகமும், துல்லியமாக விடையளிக்கும் பாங்கும் அதிகரிக்கும். போட்டிகள், எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வில் முதலிடம் கிடைக்கும். ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வின் மூலம் பெருமையடையும் யோகம் உண்டு. சட்ட மாணவர்கள், ஆசிரியர் பயிற்சி, கணக்காளர், வணிகம், கணிதத் துறைகளில் மாணவர்கள் முன்னேற்றம் காண்பார்கள்.

பெண்களே வீட்டில் உங்களது விருப்பத்திற்கிணங்க தங்க, வெள்ளிப்பொருள்கள் சேரும். வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பத்தில் நடக்கும் விசேடங்களின் போது உங்கள் பங்களிப்பு முக்கியத்துவம் பெறும்.

தொழில், உத்தியோகத்தில் வருட தொடக்கத்தில் மட்டும் உத்தியோக ரீதியாக இடமாற்றம் இருந்தாலும் உறுதித் தன்மை ஏற்படும். ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகமும் உண்டாகும். மருத்துவ, நீதித்துறையினர், ஆசிரியப் பெருமக்கள் முன்னேற்றம் காண்பார்கள். தொழிலதிபர்கள், வியாபாரிகள் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்துகொள்ள சரியான நேரமிது. தான தர்ம காரியங்கள் மூலம் மனநிம்மதி கொள்வீர்கள்.

**பரிகாரம்:** ஐயப்பனைத் தரிசித்து, பக்தர்களுக்கு இயன்ற அன்னதானம் செய்யவும். வியாழன் தோறும் நவக்கிரகங்களில் உள்ள குரு பகவானுக்கு வடக்கு முகமாக நெய் விளக்கேற்றி வைத்து வழிபடுங்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்

**21.04.2017**

1526 -முதலாவது பனிப் போரில் லோடி வம்ச கடைசி ஆட்சியாளர் இப்ரஹீம் லோடி தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

1802 -அப்துல் அசிஸ் பின் முகமட் தலைமையிலான 12000 வஹாபிகள் ஈராக் கரபாலா நகருள் புகுந்து மூவாயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்பாளர்களைக் கொன்று நகரை அழித்தார்கள்.

1856 -ஆஸ்திரேலியா தொழிலாளர் இயக்கம் எட்டு மணித்தியால வேலைநாள் கோரி மெல்போர்ன் பல்கலைக்கழகத்திலிருந்து நாடாளுமன்றம் வரை பேரணி நடத்தினர்.

1945-இரண்டாம் உலகப்போரில் சோவியத் படை களால் பேர்லின் தெற்கு ஷேஸெனில் ஜேர்ம னிய உயர் கட்டளைப் பீடம் தாக்கப்பட்டது.

1962- இரண்டாம் உலகப் போரின் பின் முதன் முதலாக உலக சந்தை நடத்தப்பட்டது.

2004 -ஈராக் பஸ்ரா நகரில் ஐந்து தற்கொலைக் கார் குண்டுத் தாரிகளால் பொலிஸ் நிலையம் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டதில் 74 பேர் உயிரிழந்தனர் 160 பேர் காயமடைந்தனர்.


2012 -நெதர்லாந்தில் இரண்டு புகையிரதங்கள் நேருக்கு நேர் மோதியதில் 116 பேர் காயமடைந்தனர்.

1993 -ஆனையிறவுப் பகுதியில் வான், தரை, கடல் வழித் தாக்குதல்கள். 5மணி நேரம் கடும் சண்டை முன்னேற முயன்ற படையினர் புலிகளால் துரத்தப்பட்டனர்.


1995 -கொழும்பில் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர் யுவதிகள் கைது.

## நாளை

**சித்திரை-09**
சனிக்கிழமை -22.04.2017
திதி: ஏகாதசி பி.இ.12.35
நட்சத்திரம்: சதயம் மு.இ.11.10
சுபநேரம்:03.01-04.31 வரை
ராகுகாலம்:09.01-10.31 வரை
ஏகாதசி விரதம்
திருநாவுக்கரசர் குருபூஜை




## இது புதுசு



பெண்களுக்கான அலங்கார வகைகளில் ஆடையின் நிறத்துக்கு ஏற்றவாறு நெக்லஸ் அணிவது முக்கிய இடத்தை பிடித்துள்ளது. அலுவலகத்துக்கு அணிந்து செல்லக்கூடிய வகையில் நூலினாலும்; துணியினாலும் அமைந்த நெக்லஸ்கள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 850 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# காது பராமரிப்பு



குழந்தைகளுக்கு காது குத்தும் போதே, சரியான இடத்தைக் குறித்துக் கொள்வது அவசியம். பலருக்கு வயதானால் தோடுகளை பட்டன் இன்றி போட இயலாது. அதிக கனமுள்ள தோடுகளைப் போடுவதால் துளைகள் பெரிதாகிவிடும். இதனை எளிதாக சரி செய்து கொள்ள முடியும். மருத்துவரை அணுகினால் அவர், இப்படி பெரிதாக உள்ள துளைகளில் லேசாக கீறிவிட்டு தைத்துவிடுவார். சில நாள்களில் துளைகள் சேர்ந்து விடும்.

அதிக எடையுள்ள தோடு மட்டுமின்றி வளையங்களை அணிபவருக்கும் இந்த பிரச்சினை ஏற்படும். தூங்கும்போது இந்த வகை தோடுகளை கழட்டி வைத்துவிடுவது நல்லது. அதேபோல் சிலர் எப்போதும் தோடுகளை அணிந்து கொண்டே, அதனை சுத்தம் செய்யாமல் இருப்பார்கள். இதனால் காதுகளில் மற்றும் தோடுகளில் அழுக்கு சேர்வது மட்டுமில்லாமல் காதின் நிறமும் கறுப்படையக்கூடும். இப்படி நேரமில்லை என்று சாக்கு சொல்பவர்கள் வாரம் ஒரு முறை தலைக்கு குளிக்கும்போதாவது தோடுகளைக் கழற்றி சுத்தம் செய்யலாம். எண்ணெய்ப் பிசுக்கு, அழுக்குகளினால் ஏற்படும் துர்நாற்றமும் போகும். அடுத்து முக்கியமான விடயம் காதுகளை சுத்தம் செய்வது.

தரமான பட்ஸை உபயோகித்து காதுகளை சுத்தம் செய்வது மிகவும் அவசியம். தரமான பட்சுகளை வாங்கி உபயோகியுங்கள். குழந்தைகளுக்கு சின்ன பருத்தி துணியைக் கொண்டு காதுகளை சுத்தம் செய்தால் போதுமானது அல்லது குழந்தைகளுக்கென்று பிரத்தியேகமாக உள்ள பட்ஸினை உபயோகிக்கலாம். இந்த வகை பட்ஸ்கள், முனை பெரிதாக காது உள்பக்கம் வரை போக முடியாமல் இருக்கும். எனவே பயப்படாமல் உபயோகிக்கலாம்.

காதுகளுக்கு அழகுப் படுத்துதல் என்று தனியாக எதுவும் தேவையில்லை. ஒரே ஒரு விடயம் மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டும். முகத்திற்கு மேக்கப் போடும்போது காதுகளுக்கும் சேர்த்து பவுண்டெஷன், பவுடர் தடவுங்கள். இல்லாவிட்டால் காதுகள் தனி நிறத்தில் இருக்கும். நிறைய தோடுகளை பக்கக் காதில் குத்திக் கொள்வதைக் காட்டிலும், ஓட்டை துளைக்காமல் போடக்கூடிய தோடுகளை போட்டால், நாகரிகம் மாறும்போது நாமும் வடுக்கள் இல்லாமல் மாறிவிடலாம்.

# பருத்தித்துறை நகரசபை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2017

பருத்தித்துறை நகரசபையினால் சபைநிதி 2017, 2016 அபிவிருத்தி ஒதுக்க நிதிகளிலிருந்து கீழ்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி 25.04.2017 ஆம் திகதிதொடக்கம் 08.05.2017 திகதி பி.ப 3.00 மணிவரை.
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 09.05.2017ஆம் திகதி 12.00 மணிவரை
3. கேள்விதிறக்கப்படும் திகதி 09.05.2017 பி.ப. 3.00 மணி (கேள்வி திறக்கப்படும் சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.)
4. கேள்வி ஆவணங்கள் பெற தகுதியுடையவராகுவதற்கு சித்திபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (BLACKLIST) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் "இக்ராட்" (ICTAD) பதிவையுடையவராகவும் இருத்தல் வேண்டும். (கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது வலுவுள்ள (ICTAD) புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்)
5. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை **"செயலாளர், நகரசபை, கல்லூரிவீதி, பருத்தித்துறை."** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பு வதன் மூலமோ, அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புவதுடன் மறு பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
6. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
7. மேலதிக விவரங்களை பருத்தித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபா) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (VAT.NBT உட்பட) | ஆகக் குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | நாகலிங்கமுதலியார் வீதியும் வடிகாலும் புனரமைத்தல் (கொங்கிறீற்) | 3.330Mn | 05 மாதங்கள் | 16700.00 | 1170.00 | C8 |
| 02 | கல்லடிவீதி புனரமைப்பு. (கொங்கிறீற்) | 2.147Mn | 04 மாதங்கள் | 10800.00 | 1170.00 | C8 |
| 03 | பண்டாரிஅம்மன் கோவில் வீதி புனரமைப்பு மிகுதிவேலை.(தார்) | 1.033Mn | 1 1/2 மாதங்கள் | 5200.00 | 1170.00 | C9 |
| 04 | வல்லிபுரப்பெரியார் வீதி புனரமைப்பு மிகுதிவேலை.(தார்) | 1.250Mn | 1 1/2 மாதங்கள் | 6300.00 | 1170.00 | C9 |
| 05 | கந்தவுடையார் வீதி புனரமைப்பு மிகுதிவேலை.(தார்) | 0.386Mn | 01 மாதம் | 2000.00 | 1170.00 | C9 |
| 06 | மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மைதான வீதி, கல்லூரிவீதி இணைக்கும் வடிகாலினைப் புனரமைத்தல் | 3.042Mn | 05 மாதங்கள் | 15300.00 | 1170.00 | C8 |
| 07 | கல்லூரிவீதி, தம்பசிட்டிவீதி, விநாயகமுதலியார் வீதி, 4 ம் குறுக்குத்தெரு ஆகிய வீதிகளின் மருங்கிற்கு (Shoulders) அமைத்தல் | 1.147Mn | 01 மாதம் | 5900.00 | 1170.00 | C9 |
| 08 | பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கான குடிநீர்த்தொட்டி அமைத்தல் | 0.264Mn | 02 மாதங்கள் | 1400.00 | 1170.00 | C9 |
| 09 | பருத்தித்துறை மீன்சந்தைக்கான குடிநீர்த்தொட்டி அமைத்தல் | 0.264Mn | 02 மாதங்கள் | 1400.00 | 1170.00 | C9 |
| 10 | தும்பளைகிழக்கு கடற்கரையில் குடிநீர்த்தொட்டி அமைத்தல் | 0.264Mn | 02 மாதங்கள் | 1400.00 | 1170.00 | C9 |
| 11 | பருத்தித்துறை மரக்கறிச் சந்தை உட்பகுதி, மரக்கறிச் சந்தை சுற்றுப்புறம், ஆட்டோ தரிப்பிடம் ஆகியவற்றிற்கு கொங்கிறீற் இடலும், நவீனசந்தையில் மலசலகூட மேலதிக வசதிகளை ஏற்படுத்தலும் | 3.272Mn | 04 மாதங்கள் | 16400.00 | 1170.00 | C8 |
| 12 | மரக்கறிச்சந்தையில் குப்பைத் தொட்டி அமைத்தல் | 0.181Mn | 02 மாதங்கள் | 1000.00 | 1170.00 | C9 |
| 13 | தலைமை அலுவலக வாகனத் தரிப்பிட மிகுதிவேலை | 3.793Mn | 04 மாதங்கள் | 19000.00 | 1170.00 | C8 |
| 14 | நூலகத்திற்கான சுற்றுமதில் அமைத்தலும் முற்பக்கத் தளத்திற்கு கொங்கிறீற் இடலும் | 0.530Mn | 02 மாதங்கள் | 2700.00 | 1170.00 | C9 |

**புவனேந்திரன் ரமேஸ்வரன்,**
**செயலாளர்,**
**நகரசபை,**
**பருத்தித்துறை.**

அடையாளம்

## அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் நிர்வாக உத்தியோகத்தருக்கான விண்ணப்பக் கோரல்

யாழ்ப்பாணத்தைத் தளமாகவும், எதிர்வரும் காலங்களில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தனது செயல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கவும் எண்ணியுள்ள. 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையமானது தனது யாழ். காரியாலயத்தை நிர்வகிக்க முழுநேர நிர்வாக உத்தியோகத்தருக்கான விண்ணப்பங்களை கோருகின்றது.

**நிர்வாக உத்தியோகத்தர்,**

- நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளரின் கீழ் பணி புரிவார்.
- நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்புக்களை செவ்வனே, நேரத்திற்கு செய்து முடிக்கக் கூடியவராகவும்.
- தமிழ், ஆங்கில மொழிகளில் குறிப்பிடத்தக்களவு பரீட்சயம் பெற்றவராகவும்.
- அடிப்படை கணக்குப்பதிவியல், வரவு-செலவு கணக்கியல் அறிந்தவராகவும்.
- நிறுவனத்தின் அறிக்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யக் கூடியவராகவும் இருத்தல் அவசியம்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் சமூகத்தினிடையேயும், செயற்பாட்டாளர்களிடையேயும் செயற்பட்ட, செயற்பட்டு வரும் / தொடர்புகளை தொடர்ந்து பேணி வரும், அப்பிரதேசங்களின் சமூக- அரசியல்- பொருளாதார கள நிலவரங்களை நன்கறிந்த விண்ணப்பதாரிகளுக்கும் அலுவலக நிர்வாகத்தில் முன்னனுபவம் உடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பக் கடிதங்களையும் இரு சான்றாளர்களின் பெயர்களுடனான தகைமைத் திரட்டு படிவத்தினையும் "நிர்வாக உத்தியோகத்தருக்கான விண்ணப்பம்" அல்லது Application for Administrative Officer என்ற தலைப்புடன் info@adayaalam.org என்ற முகவரிக்கு மே 05 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர்**
**அடையாளம் கொள்கை ஆய்வுக்கானநிலையம்**
**49,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
- 20/04/2017 -



## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள·
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கதிரவேலு கந்தையா**
(இரத்தினம் மெக்கானிக்)
மலர்வு
08.07.1947
உதிர்வு
21.04.1998

பத்தொன்பது ஆண்டுகள் ஓடிச்சென்றாலும்
எம் குடும்பத்தின் துயரம் ஆறாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அச்சுவேலி தெற்கு. குடும்பத்தினர்.

## நினைவஞ்சலியும் நன்றிநவிலும்



அமரர்
**சிந்தாமணி மகேசன்**

**கடந்த 18.03.2017 ஆம் திகதி அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிந்தாமணி மகேசன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (22.04.2017) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**உடையார் வளவு,**
**சுன்னாகம்.**
**குடும்பத்தினர்.**

### அம்பன்...

நாளாக அந்தப் பகுதி மக்களுடன் மாவட்டச் செயலக அதிகாரிகள் பேச்சு நடத்தவுள்ளனர். யாழ்ப்பாண குடாநாட்டுக்கான மணல் அகழ்வு இதுவரை முன்னெடுக்கப்பட்ட பிரதேசத்தை வனவளப் பிரிவினர் தமக்குரியது என்று அடையாளப்படுத்தியுள்ளனர். அதனால் மணல் அகழ்வு தடைப்பட்டுள்ளது. கட்டட நிர்மாணம், வீட்டுத் திட்டம், அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்படும் அபாய நிலையை எட்டியுள்ளன. புதிய இடத்தில் மணல் அகழ்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அம்பன், குடத்தனைப் பகுதிகளிலிருந்து மணல் அகழ்வது தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் கடந்த வாரம் கலந்துரையாடல் நடத்தப்பட்டிருந்தது. மணல் அகழ்வுக்கு முன்னதாக, அந்தப் பகுதி மக்கள் சம்மதித்தால் மாத்திரமே அங்கிருந்து மணல் பெற்றுக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. மக்களுடனான கலந்துரையாடலுக்காக நேற்றுக் காலை 7 மணிக்கு அதிகாரிகள் சென்றனர்.

அதிகாரிகளை உழவு இயந்திரத்தில் ஏற்றி அழைத்துச் சென்று, கடந்த காலத்தில் தமது பகுதிகளில் மணல் அகழ்வால் ஏற்பட்ட பாதிப்புக்களை மக்கள் காண்பித்தனர். இவ்வாறான அழிவுகள் நடைபெறும் போது எவரும் ஏன் கண்டுகொள்ளவில்லை என்று அதிகாரிகளிடம் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

நிலமட்டத்திலிருந்து 6 அடி கீழே மணல் அகழப்பட்டுள்ளது. இதனால் கடல் நீர் உட்புகுந்துள்ளது. கடல் நீர் வந்து தேங்கி குளமாகியுள்ள பிரதேசத்தில் தற்போது சிலர் மீன்பிடிப்பதையும் மக்கள் நேரில் காண்பித்துள்ளனர். காலை 11 மணி வரையில் தமது பிரதேசத்தின் அழிவுகளை அதிகாரிகளுக்கு காண்பித்த மக்கள் அதன் பின்னரே அவர்களுடன் பேச்சு நடத்தினர்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய மணல் தேவையின் அவசியத்தை மக்களிடம் அதிகாரிகள் எடுத்துரைத்தனர். மணல் அத்தியவசியமாக எந்தெந்த அபிவிருத்தி வேலைகளுக்கு தேவைப்படுகின்றது என்பதையும் அவர்களிடம் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். மனிதாபிமான அடிப்படையில் மணல் அகழ்வுக்கு இடமளிக்குமாறு மக்களிடம் அதிகாரிகள் கோரினர்.

மணல் அகழ்வு கூட வெளியார் மேற்கொள்ள மாட்டார்கள் என்றும், இந்தப் பகுதியைச் சேர்ந்த சங்களுக்கே அதற்குரிய அனுமதி வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் மக்களிடம் உறுதியளித்தனர். பி.ப. 2 மணிவரை இந்தப் பேச்சு நடைபெற்றது. இதில் முடிவு எதுவும் எட்டப்படவில்லை. ஆனால் இன்றைய தினமும் தொடர்ந்து பேச்சு நடத்துவதற்கு ஊர் மக்கள் சம்மதித்துள்ளனர். இன்று மாலை 4 மணிக்கு, அந்தப் பகுதிகளுக்கு அதிகாரிகள் நேரில் சென்று பேச்சு நடத்தவுள்ளனர்.

(வ-5,173)

### யாழ்.பண்ணையிலுள்ள...

அறியமுடிகிறது. போர்க் காலத்தில் யாழ்ப்பாண மாநகரில் பல்வேறு இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. போரின் பின்னர் படிப்படியாக இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டன. எனினும் சில முகாம்கள் இன்றுவரை அகற்றப்படாத நிலையில் காணப்படுகின்றன.

2 இராணுவ முகாங்களும் வேறு இடத்துக்கு நகர்த்தப்படவுள்ளன. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குச் சொந்தமான காணியும் அவற்றில் அடங்குகின்றது. அதனை சிறுவர் வைத்தியசாலையை அமைக்க மீளளிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் இறுதியாக இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடற்படை மற்றும் இராணுவத்தினர் முகாம்களை அமைந்துள்ளமை யால் தங்களின் வலைகளை உலர விடமுடியாத நிலமை காணப்படுகின்றது என்று கடற்தொழிலாளர்கள் தெரிவித்திருந்தனர்.

(வ-8)

### 5000 ஏக்கர்...

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் 3 ஆயிரத்து 640 ஏக்கரும், பொலிஸார் வசம் 25 ஏக்கரும், கடற்படையினர் வசம் 800 ஏக்கரும், வான் படையினரின் கட்டுப்பாட்டில் 540 ஏக்கரும் உள்ளது.

பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ள காணிகள் விடுவிப்புத் தொடர்பில் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் 23 ஏக்கரும், வேலணைப் பிரதேசத்தில் 77 ஏக்கரும், ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 3 ஏக்கரும், காரைநகர் பிரதேசசெயலர்பிரிவில் 40 ஏக்கரும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 1 ஏக்கரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 5 ஏக்கரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 83 ஏக்கரும், சங்கானை பிரதேசத்தில் 30 ஏக்கரும், உடுவில் பிரதேசத்தில் 3 ஏக்கரும், தெல்லிப்பழை பிரதேசத்தில் 4 ஆயிரத்து 500 ஏக்கரும், கோப்பாய் பிரதேசத்தில் 13 ஏக்கரும், சாவகச்சேரி பிரதேசத்தில் 70 ஏக்கரும், கரவெட்டிப் பிரதேசத்தில் 5 ஏக்கரும், பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 9 ஏக்கரும், மருதங்கேணிப் பிரதேச த்தில் 85 ஏக்கருமாக 5 ஆயிரம் ஏக்கர் தனியார் காணிகள் முப்படையினர் வசம் உள்ளன.

(வ-5,8)

**வாடகைக்கு**

நாவலர் வீதியில் நல்லூரில்
அனெக்ஸ் வாடகைக்கு உண்டு.
2 பேர் மட்டும் தங்கக்கூடியது.
தொடர்பு - 072 6601 001

(சீ/29525)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் பாலசிங்கம்



மலர்வு 12.04.1939 உதிர்வு 20.04.2017

(ஏழாலை, சிறுப்பிட்டி)

யாழ். ஏழாலையைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் பாலசிங்கம் நேற்று (20.04.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லம் தம்பதியரின் பாசமிகு மகனும் பொன்னம்மாவின் அன்புக்கணவரும் கௌரி, கண்ணகி, முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஞ்சினியின் பெரியதந்தையும் புஸ்பராசன் (அம்பாள் பல்பொருள் வாணிபம், சிறுப்பிட்டி), சற்குணராசா, கேதினி, கலாநந்தன் ஆகியோரின் பாசமிகுமாமனும் மயூரன் (பிரான்ஸ்), அபிரா (பிரான்ஸ்), அபர்ணா, அபிராஜ் (பிரான்ஸ்), அகிலன் (சுவிஸ்), அபூர்ணா (சுவிஸ்), அபிராம், பரனிகா, யதுசன், கஜரதன், காருண்ஜா, ஹன்சிகா, கார்த்திகன், கானுஜா, கானுஜன், கஜானி, அனுசியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T. P : 077 958 7277 (சி/29439) தகவல்: மகன்

**ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**

ஒரு வார, ஒரு நாள் ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு.

077 245 3673

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1357
சீட்டிழுப்பு திகதி 2017.04.20
வெற்றி இலக்கங்கள்
10 19 37 64 M
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,382,284/-

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 33
சீட்டிழுப்பு திகதி ▶ 20.04.2017 வியாழக்கிழமை
Development Fortune
வெற்றி இலக்கங்கள்
01 22 58 61 04
ஒக்ரோபர்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 10, 174, 410/= | 2, 629, 136/= | 2, 263, 714/= |

22.04.2017 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

**துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்**



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் 22.04.2017 இல் இருந்து 25.04.2017 வரை

ஞானவைரவர் ஆலயம், கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

★ 23.04.2017 ஞாயிறுக்கிழமை அன்னதானம் வழங்கப்படும்.

பூசை நேரம்: முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226

(J/8488)

MAJESTIC CINEPLEX Jaffna
A CEYLON THEATRES CINEMA
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சண்முகசுந்தரம்

(ஓய்வு பெற்ற கட்டட திணைக்கள வரைவு வல்லாளர்)



யாழ் நல்லூரைப் பிறப்பிடமாகவும் 52 A, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சண்முகசுந்தரம் 19.04.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் லலிதாதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் வாலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் சகிலா (லண்டன்), சர்மிளா (கனடா, முன்னை நாள் ஆசிரியர் கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வகுமார் (லண்டன்), ராகவன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் குமரன், லாவண்யா, பிரணவன், சஷான, சைலன் ஆகியோரின் அன்புப் பேரனும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி காலஞ்சென்றவர்களான சறோயினி தேவி, யோகரட்ணம், அழகரத்தினம், பத்மாதேவி மற்றும் இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகசெம்மணி இந்துமயானத்திற்குளடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(சி/8492)

0778601064

SUPER BALL சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 640
சீட்டிழுப்பு திகதி 20.04.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
06 14 52 60 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 42, 416, 320/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
நீல நிற டிக்கட்டுக்கள் 22.04.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

## வடக்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கான தீர்வு ஆகியவற்றை வலியுறுத்தி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவை குறித்தும் அவதானம் செலுத்துகிறோம்.

வடக்கில் போரினால் இடம்பெயர்ந்தவர்களில் 60 சதவீதமான மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுவிட்டனர். மிகுதி 40 வீதமான மக்கள் இன்னும் 3 மாதங்களுக்குள் மீள்குடியேற்றம் செய்யப்படுவர். அதற்கான நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது - என்றார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னும் 939 குடும்பங்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டியுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அனைவருமே போர் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள். பலர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், கேப்பாபிலவு, கரிப்பட்டமுறிப்பு ஆகிய இடங்களிலும், கிளிநொச்சியில் பரவிப்பாஞ்சான், நாச்சிக்குடா ஆகிய இடங்களிலும், மன்னாரில் மன்னார், முள்ளிக்குளம் ஆகிய இடங்களிலும் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4-101)

## இரு வாரங்களில்...

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பு கொழும்பு கோட்டை, அரச தலைவர் மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரத்துக்கு வந்து இரண்டு வருடங்கள் ஐந்து மாதங்களைப் பூர்த்தி செய்துள்ளோம். எமது செயற்பாடுகள் தொடர்பாகக் குற்றச் சாட்டுகள், விமர்சனங்கள், எதிர்ப்புகள் உள்ளபோதிலும் நீண்டகால அனுபவம் உள்ளதரப்பு என்ற ரீதியில் இலங்கையைச் சிறந்த நாடாகக் கட்டியெழுப்பும் இலக்கை நோக்கி வெற்றிகரமாக நகருகிறோம். எமது பயணம் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் இலக்குடன் செல்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானம், வடக்கு மீள்குடியேற்றம், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நடத்திவரும் போராட்டம், மீதொட்டமுல்ல இடர், அரசியல் நிர்ணய சபையின் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, சைட்டம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து அரச தலைவர் தனது உரையில் குறிப்பிட்டார். ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளித்தனர். சைட்டம் குறித்து சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நீண்ட நேரம் விளக்கமளித்தார்.

கொழும்புத் துறைமுக நகரம் குறித்து அரச தலைவர் கருத்துத் தெரிவித்தார். "முன்னைய அரசு சீனாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் எந்தவொரு நாட்டு அரசும் செய்துகொள்ளத் துணியாத ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரச தலைவர் செயலகத்துக்கு அருகிலுள்ள மைதானத்தில் இருந்து துறைமுக நகருக்கு மேலாக சீனாவின் அனுமதியின்றி உலங்குவானூர்தியில் நாம் பறக்கமுடியாது. இவற்றையே நாம் மாற்றி அமைத்து புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டோம்"என்றார்.

இன்னும் இரண்டு வாரங்களில் அரச நிறுவனங்களில் மாற்றங்கள் இடம்பெறவுள்ளமை குறித்து அரச தலைவரிடம் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர் ஒருவர், அமைச்சரவையிலும் மாற்றம் வருமா என்று கேட்டார். அதற்கு மைத்திரி பொறுத்திருந்து பாருங்கள் என்று பதிலளித்தார்.

வழமைக்கு மாறாகச் சில மாத இடைவெளிக்குப் பின்னர் நடைபெற்ற இந்த மாநாட்டில் அரச தலைவருடன் அமைச்சர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அரச தலைவர் தலைமையில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் வருமாறு:

* குருநாகல், அநுராதபுரம், புத்தளம், திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் உதவியுடன் 600க்கு மேற்பட்ட குளங்கள் புனரமைக்கப்படும்.

* சைட்டம் தனியார் நிறுவனம். இதனை கூட்டு நிறுவனமாக மாற்ற விரைவில் முடிவு செய்யப்படும்.

* மீத்தொட்டமுல்ல இடர் குறித்து ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டு அறிக்கை பெறப்படும். அடுத்த ஒன்பதுமாதகாலத்தில் மீத்தொட்டமுல்லயிலிருந்து குப்பைமேடு முற்றாக அகற்றப்பட்டுவிடும். (த-4)

## காக்கை...

மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் முல்லைத்தீவு நகரப் பகுதியில் அமைக்கப்பட்ட மாவீரன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியனின் உருவச் சிலை திறப்புவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது. சிலையைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆங்கிலேயர்கள் வன்னிப் பெருநிலப் பரப்பில் போர் தொடுப்பதற்கு முன்பதாக வன்னி இராச்சியத்தின் மன்னனாக விளங்கிய மாவீரன் பண்டாரவன்னியனுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அவனுடன் நெருங்கிப் பழகி வன்னி இராச்சியத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் பண்டாரவன்னியனால் ஏற்றுக்கொள்ளப்படாதபோதும் அவனின் தம்பியர்களான கைலாய வன்னியனதும், பெரிய மெயினாரினதும் வற்புறுத்தலின் பெயரில் ஆங்கிலேயர்களுடன் பேச்சு நடாத்துவதற்காக யாழ்ப்பாணக் கோட்டைக்குச் சென்றிருந்தான். அங்கே பண்டாரவன்னியனுக்கு பிரமாதமான வரவேற்புகள் வழங்கப்பட்டதுடன் எப்படியாவது பண்டாரவன்னியனைத் தமது ஆட்சிக்குள் அடக்கிவிடவேண்டும் என்ற முனைப்பில் ஆங்கிலேயத் தளபதிகள் முயன்றனர். இவ்வாறான பொறிமுறைகள் இப்போது எம் அரசுகளாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 'வா' என்று அழைப்பார்கள். போனால் குடிக்கத் தருவார்கள், சாப்பிடத் தருவார்கள். ஆனால் உரித்துக்களைத் தரமாட்டார்கள்!

பண்டாரவன்னியனுடன் நேருக்கு நேர் போர் புரிந்து அவனை வெல்ல முடியாது என்பதை நன்கு அறிந்த ஆங்கிலேயப் படைகள் வன்னி இராச்சியத்தின் சிற்றரசனாக விளங்கிய காக்கை வன்னியனின் உதவியுடன் பண்டாரவன்னியன் போர்ப் பாசறையில் தனித்திருந்தபோது அவனை தந்திரமாக ஒட்டுசுட்டான் வரை கூட்டிச்சென்று வெள்ளையர்களின் இராணுவத் தளபதி வொன் டிறிபோர்க் மூலம் கைது செய்து விசாரணை என்ற போர்வையில் சுட்டுக் கொன்றார்கள் என்று கூறப்படுகின்றது.

வன்னியைச் சேர்ந்த எமது சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் காக்கைவன்னியன் ஒரு கற்பனைப் பாத்திரமே என்று எங்கோ கூறியிருந்தார். ஆனால் காக்கைவன்னியன் போன்ற கதாபாத்திரங்கள் இன்றும் எம்மிடையே வாழ்கின்றார்கள் என்பதை அவர் ஒப்புக்கொள்வார் என்று நம்புகின்றேன். நேர் சிந்தனையுடன் நிமிர்ந்து நடந்து வாழ்க்கையை எதிர் கொண்ட மாவீரன் அவன். அவனின் வாழ்க்கை உத்தியோகபூர்வமாக எழுதப்பட வேண்டும் என்று கோரிக்கைவிடப்பட்டது. சரித்திர ஆசிரியர்களையும் வன்னி பற்றிய அறிவு படைத்த அறிவாளிகளையும் கொண்ட குழுவை அமைத்து சகல செய்தித் தரவுகளையும் அறிந்த பின் ஒரு நூலினை வெளியிடலாம் என்று நினைக்கின்றேன். வன்னி இறுதிப் போரின்போது மறைந்த பல்லாயிரக் கணக்கான மக்களின் உணர்வுகளை ஒன்று திரட்டி இன்று பண்டாரவன்னியனின் உருவத்தில் இங்கு சிலையாக வடித்திருக்கின்றோம். தமிழர்களின் வீரம் செறிந்த வரலாறுகளையும் அவர்களின் யார்க்கும் அஞ்சா மனோதிடத்தையும் இந்த சிலை என்றென்றும் உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கும். இன்றைய இந்தப் புனித தினத்தில், பண்டார வன்னியனின் சிலை அவனின் வீரப் பிரதாபங்களை மக்கள் மனதில் சுடர்விட்டு எரிய விட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் வடக்கு கிழக்கு மாகாண தமிழ்ப் பேசும் மக்கள் யாவரும் ஒன்றிணைந்து எமது உரிமைகளுக்காகக் போராடுவோம்- என்றார். (த-21)

## பாவனைக்கு உதவாத...

சேர்ந்தவை எனத் தெரிவிக்கப்பட்டது.

முகமாலைப் பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த டாஸ் நிறுவனத்தின் பணியாளர்கள் இந்தத் துப்பாக்கிப் பாகங்களை மீட்டுப் பளைப் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

கண்ணிவெடியகற்றும் பணியாளர்கள் வழமைபோன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமையும் பணியில் ஈடுபட்டிருந்தபோது எண்ணெய் பரல் ஒன்றைக் கண்டுள்ளனர். அதைத் திறந்தபோதே ஆயுதங்கள் இருந்தன. துப்பாக்கிகளுடன் ரவைக்கூடுகள், வெடிபொருள்கள் என்பனவும் அதில் காணப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட துப்பாக்கிகள் பலவற்றில் சில பாகங்களைக் காணவில்லை. இரும்புப் பகுதிகள் துருப் பிடித்த நிலையில் காணப்பட்டன. அவை பாவனைக்குதவாத நிலையிலேயே இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் துப்பாக்கிகள் நேற்றுமுன்தினம் பளைப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-4-6-35)

## 20, 000 பட்டதாரிகளுக்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய தற்போது அரச நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்கள் பற்றிய கணக்கெடுப்பொன்று நடத்தப்படுகின்றது. அதன்படி குறைந்த பட்சம் 20 ஆயிரம் பட்டதாரிகள் தேவைப்படுகின்றனர்.

போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் இவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்கள். இந்த நியமனங்களின்போது இன, மத, மொழி, அரசியல் வேறுபாடுகளின்றி திறமை அடிப்படையிலேயே தெரிவுகள் நடைபெறும்- என்றார். (த-4)

## குடாரப்புவில்...

நேற்று முன்தினம் மாமுனை குடாரப்புப் பகுதியில் கேரளக் கஞ்சா விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படுவதாகக் கடற்படையினர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். பளைப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது மோட்டார் சைக்கிளில் எடுத்துச் செல்லப்பட்ட 6 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

கைதான நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்யப்படவுள்ளதாகப் பொலிஸ் பொறுப்பதிகாரி மேலும் கூறினார். (த-6)

## இராணுவத்திடம்...

பறி கொடுத்த 72 வயதுடைய கணபதிப்பிள்ளை மனோன்மணி கவலையுடன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் எனது மூன்று பிள்ளைகளையும் இழந்து இன்று நானும் கணவரும் தனியாக வாழ்ந்து வருகின்றோம். 20 பேர்ச் காணியில் ஒன்றுமே செய்ய முடியாது. தினமும் செத்துக்கொண்டு இருக்கின்றோம். எமது காணியில் இராணுவம் வருமானம் சம்பாதிக்கிறது. நாங்கள் உண்பதற்கு வழியிலாமல் கிடக்கின்றோம். கடைசிக் காலத்தில் நாவுக்கு ருசியாக உண்ண முடியவில்லை. எத்தகைய வருமானமும் இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றோம். எங்கள் காணிக்குள் எங்களை வாழ விடுங்கள். எங்கள் இறுதிக் காலத்தையாவது நிம்மதியாக செலவிட விடுங்கள் - என்றார். (த-7)

## ரயிலுடன்...

நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த ஜீவன் நாகலிங்கம் ஜீவராஜ் (வயது - 47) என்பவரே உயிரிழந்தார். இவர் இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தை.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த யாழ்.தேவி தொடருந்து மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

உயிரிழந்தவரின் சடலம் வவுனியா தொடருந்து நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. விபத்து நடந்த இடம் ஒற்றையடிப் பாதையே. அந்த இடம் பாதுகாப்பற்ற பகுதியாகவும் அடையாளப்படுத்தப்படவில்லை. அந்த இடத்தில் தொடருந்துக் கடவை பாதுகாப்பு உத்தியோகத்தர் எவரும் பணியில் ஈடுபடுவதில்லை.

குறித்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்தவர் சிறுகாயத்துடன் உயிர் தப்பினார். மோட்டார் சைக்கிள் சிதைந்தது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

## நிறைவேற்றதிகாரம்...

நிறைவேற்று அரச தலைவர் முறைமையை இல்லாமலாக்குவதற்கு, மைத்திரிபால சிறிசேன தற்போது பின்னடிப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்த சூழலில், அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஊடகங்களின் பிரதானிகளை அரச தலைவர் நேற்றுக் காலை சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பிலேயே மேற்படி விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

"அரச தலைவர் தேர்தலின்போது நான் வழங்கிய வாக்குறுதிகளை மீறமாட்டேன். நிறைவேற்று.அரச தலைவர் முறைமை ஒழிக்கப்புடும். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவேன். அதிலிருந்து பின்வாங்கமாட்டேன்", என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்துள்ளார்.

வழிநடத்தல் குழுவினால் புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்று அதிகார முறைமை ஒழிப்புக்குப் பின்னடித்து வருவதாகவும், தகவல்கள் வெளியாகியிருந்த சூழலிலேயே அரச தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (த-5)

## சிங்கள...

உள்ளதாக, வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களம் வழங்கியுள்ள தகவலில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் கடமையாற்றும் தமிழ் மற்றும் சிங்கள மருத்துவர்களின் விவரங்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டிருந்தன. அதற்கு வழங்கியுள்ள பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மருத்துவ நிர்வாக சேவையில் வடக்கு மாகாணத்தில் 12 வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படவில்லை. தமிழ் அலுவலர்கள் 9 பேர் பணியாற்றுகின்றனர். அவர்களிலும் 4 பேர் தற்காலிக இணைப்பில் உள்ளனர். சிங்கள அலுவலர் ஒருவரே பணிபுரிகின்ற நிலையில் அவரும் தற்காலிக இணைப்பிலேயே கடமையாற்றுகின்றார்.

மருத்துவ நிபுணர்களுக்கு வடக்கில் 47 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தமிழ் அலுவலர்கள் 28 பேரே பணிபுரிகின்றனர். சிங்கள அலுவலர்கள் 41 கடமையாற்றுகின்றனர்.

மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான 205 வெற்றிடமும் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை. 289 தமிழ் அலுவலர்கள் பணிபுரிகின்ற அதேவேளை 157 சிங்கள அலுவலர்கள் வடக்கில் கடமையாற்றுகின்றனர்.

பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் 17 காணப்படுகின்றது. தமிழ் அலுவலர்கள் 62 பேரும், சிங்கள அலுவலர்கள் 8 பேரும் பணிபுரிகின்றனர். இதில் வவுனியா மாவட்டத்தில் 19 தமிழ் அலுவலர்களும், 2 சிங்கள அலுவலர்களும் கடமையாற்றுகின்றனர். அந்த மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட வெற்றிடத்தை விட 6 அலுவலர்கள் அங்கு மேலதிகமாக பணியாற்றுவதாக வழங்கிய தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இதில், கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள், மருத்துவ உத்தியோகத்தர்கள், பல் மருத்துவ உத்தியோகத்தர்கள் விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை என்று தகவல் வழங்கும் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். (த-5)

## காணாமற்...

அரச தலைவர் நேற்றுக் காலை நடத்திய செய்தியாளர் சந்திப்புத் தொடர்பில் அவரது அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'காணாமற்போனோர் தொடர்பாக முறைப்பாடு மேற்கொள்வோருக்குச் சரியான தகவல்களை வழங்குவதற்கு இதற்கு முன்னர் காணப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகளில் காணப்படும் விதந்துரைகளையும் கருத்திற்கொண்டு சிறப்புச் செயற்திட்டத்தைத் தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும்' அரச தலைவர் மைத்திரி தெரிவித்துள்ளார். (த-5)



# மரவள்ளி

போர்த்துக்கேயரால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கிழக்கு வகைத் தாவரம் மரவள்ளி. உலகில் 150 மரவள்ளி இனங்கள் உள்ளன. இவற்றுள் எழுபத்தைந்து இனங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் இலங்கையரின் பிரதான உணவுப் பொருளாக மரவள்ளி விளங்குகிறது.

மரவள்ளியில் 3, 4, 5, 6, 8, 10, 12, 18, 24 மாதங்களில் பயன் தரும் இனங்கள் உள்ளன. வருடம் 50 செ.மீ மழை பெறும் வறள் வலய மாவட்டங்கள் தொடக்கம் 200 செ.மீற் மழை பொழியும் ஈரவலய மாவட்டங்கள் வரை இதைப் பயிரிடலாம். கரையோர உப்பு சுவை மண்ணிலும், மலைச்சார அமில மண்ணிலும், பாலை வன மணல் தரையிலும், இருவாட்டி மண்ணிலும், அதிக வெயிலிலும் நிழலிலும் சீராக வளரும் இயல்புடையது இந்த மரவள்ளி. மரவள்ளிக் கிழங்கின் தோலின் உட்புற எல்லையில் 'சயனோ ஜெனிரிக் குளுக்கோ சயிட் லீனமெரின்' சத்து உள்ளது. கிழங்கின் வெளிப்புறம் காயப்பட்டால் அல்லது அகழ்தெடுத்த பின் இரண்டு நாள்களுக்கு மேல் சேமித்து வைத்தால் இந்தச் சத்து 'ஹைறோ சயனிக் அமிலம்' என்னும் நஞ்சாக மாறி விடுகிறது. சமையலின் போது கிழங்கை நன்கு கழுவி மூடாது அவிப்பதால் இந்த நஞ்சு அமிலத்தை எளிதில் அகற்றி விடலாம். மரவள்ளிக் கிழங்குடன் இஞ்சி அல்லது இஞ்சி சேர்த்த உணவு உண்பது தவிர்க்கப்பட வேண்டும்.

# பிரதிபலிப்பு

ஓர் ஊரில் ஓர் அழகான கண்ணாடி மாளிகை இருந்தது. மாளிகையின் உள்ளே எந்தப் பக்கம் பார்த்தாலும் கண்ணாடிகளே பொருத்தப்பட்டிருந்தன. ஒரு நாள் நாய்க்குட்டி ஒன்று அம் மாளிகையின் உள்ளே சென்று பார்த்தது. மாளிகை முழுவதும் கண்ணாடி என்பதால் பார்க்குமிடமெல்லாம் நாய்க்குட்டிகளாவே தெரிந்தன. நாய்க் குட்டிக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை. தன்னைப் போல எத்தனை நாய்க்குட்டிகள் என்று ஆச்சரியப்பட்டு அவற்றிடம் நட்புடன் வாலை ஆட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்தது. கண்ணாடியில் தெரிந்த நாய்க்குட்டிகளின் பிம்பங்களும் அதேபோல வாலை ஆட்டுவதாகத் தெரிந்தது நாய்க்குட்டிக்கு. "அடடா எத்தனை அன்பானவர்கள் எம்மைச் சுற்றி இருக்கிறார்களே!" என்ற மகிழ்வோடு சந்தோசமாக வாசலூடாக துள்ளிக்குதித்து வெளியே ஓடியது.

அதே ஊரில் மிகவும் கோபக்கார நாய்க்குட்டி ஒன்றும் இருந்தது. அது 'இலகுவில் எவருடனும் சேராது. தனித்தே திரியும். யாரைக் கண்டாலும் அன்புடன் பழகாது. முகத்தைச் சிடுசிடு என்று வைத்துக் கொண்டு உறுமும். காகம், கோழி போன்ற பறவைகள் அதனோடு விளையாட வந்தாலும் உறுமி குரைத்து விரட்டி விடும். அது இந்தக் கண்ணாடி மாளிகையுள் சென்று பார்க்க விரும்பியது. உள்ளே சென்றதும் எல்லாப் பக்கங்களிலும் அதனது பிம்பம் விழுந்தது. அங்கே தெரிந்த பயங்கரமான நாய்க் குட்டியின் பிம்பங்களைக் கண்டு நாய்க்குட்டி மிரண்டது. பயமும் வெறுப்பும் அடைந்தது. தற்காப்புக்காக முறைத்தபடியே கோபமாகவும் பார்த்தது. நாய்க்குட்டி மேலும் பயந்தே போனது. காரணம் எல்லா பிம்பங்களும் அதனைக் கோபமாகப் பார்ப்பதும் முறைப்பதுமாகவே தெரிந்தன. நாய்க்குட்டியோ... "ஐயோ எனக்கு இத்தனை எதிரிகள் இருக்கிறார்களா" என வீரிட்டு அலறிக் கொண்டு வெளியே ஓட்டமெடுத்தது. அன்பை விதைத்தால் அன்பையே அறுவடை செய்யலாம். வெறுப்பு, கோபம் இவற்றை விதைத்தால் திரும்ப எமக்குக் கிடைப்பதும் அதுவே. நாம் என்ன செய்கின்றோமோ அதுவே எமக்குத் திரும்பக் கிடைக்கும். எமது எண்ணங்களும் செயல்களுமே எம் வாழ்வின் பிரதிபலிப்பு.


**"அடுத்தது காட்டும் பளிங்கு போல
நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்"**



## உயிர்குறிகளுடன் சேர்த்து உயிர் மெய் எழுத்துக்களை ஆக்குவோம். உயிர்மெய் எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்களை எழுதுவோம்


க
- ா → கா காடு
- ி → ...... ..........
- ு → ...... ..........
- ை → ...... ..........
- ொ → ...... ..........

## சக்கரத்தில் ஒரு சொல் ஆக்க இரண்டு எழுத்துக்கள் வீதம் கொடுக்கப்பட்டுள்ளன. 3ஆவது எழுத்தை வெற்றுக் கூட்டில் எழுதி சொல் ஆக்குவோம்.




1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................
7. ..............................
8. ..............................

## படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனம் கண்டு வட்டம் இடுவோம்



## அலெக்ஸாண்டர் கிரகம்பெல் (1847 – 1922)

இவர் ஸ்கொட்லாந்து நாட்டில் பிறந்தார்.
சிறந்த மின் பொறியியலறிஞர். நவீன தொலைத் தொடர்புச் சாதனங்களில் ஒன்றான தொலைபேசியைக் கண்டு பிடித்த பெருமை இவரையே சாரும்.
மனிதர்களது பேச்சுக்களை மின்கம்பிகளினூடாக அனுப்பும் முயற்சியில் வெற்றி கண்டமை அதாவது இவரது தொலைபேசிக் கண்டுபிடிப்பு மேலும் நவீனமயப்படுத்தப்பட்டு பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் மனிதர்களோடு தொடர்பு கொள்ளும் வகையில் தற்பொழுது சிறப்பிக்கப்பட்டுள்ளது.
மனித சமூகத்துக்கு பயன்படக் கூடிய பலகருவிகளைக் கண்டு பிடிப்பதில் அயராது உழைத்தார். பாலை வனத்தில் பயணம் செய்பவர்களுக்கும் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கச் செல்பவர்களுக்கும் பயன்படும் படியான கருவியைக் கண்டு பிடித்தார். இவ்வாறு மனித வரலாற்றில் இவர் ஆற்றிய சாதனைகள் விஞ்ஞான வளர்ச்சியின் படிநிலைகள் ஆகும்.



## சூழ்ச்சிகள் பண்ணாதே



நேருக்கு நேர் நின்று வாதாடு – மன
நீதிக்கும் நேர்மைக்கும் போராடு
ஆருக்கும் சூழ்ச்சியை பண்ணாதே – வீண்
ஆனந்தம் அதனை அடையாதே!

நல்லவர் போலவே நடிக்காதே – உன்னை
நம்பிய பேர்களைக் கெடுக்காதே
தொல்லைகள் எவருக்கும் கொடுக்காதே – நீ
சூதுகள் செய்வதும் அடுக்காதே!

உணவினில் நஞ்சைக் கலக்காதே – எந்த
உயிருக்கும் வஞ்சனை செய்யாதே
உறவுக்குள் பகைமையை வளர்க்காதே – என்றும்
உண்மைக்குப் பாதகம் நினைக்காதே!

## கொலின்ஸ் அணி அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஏப். 21
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமராட்சி அணிகளுக்கு இடையிலான கால்பந்தாடத் தொடரில் கரணவாய் கொலின்ஸ் அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணி மோதியது. இரு அணிகளினதும் சிறப்பான போராட்டத்துக்கு ஏற்ப கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் கரணவாய் கொலின்ஸ் அணியின் ஆதிக்கம் மேலோங்கியது. ஆட்டத்தின் 44 ஆவது நிமிடத்தில் பிரசாந் கொலின்ஸின் முதல் கோலை பதிவு செய்தார்.

50 ஆவது நிமிடத்தில் சாந்தன் பதிவுசெய்த கோல் கொலின்ஸின் இரண்டாவது கோலாக அமைந்தது. முடிவில் அந்த அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. பிரசாந் ஆட்டநாயகனானார். (ம-422)



# இமையாணன் மத்தி. வென்றது கிண்ணம்

கரணவாய், ஏப். 21
கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. இமையாணன் மத்திய இளைஞர் கழக மகளிர் அணியும், நெல்லியடி என்.சி.சி. இளைஞர் கழகமும் மோதின.

மூன்று செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது.

முதலாவது செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இமையாணன் மத்தி. அடுத்த செற்றையும் வென்றால் நேர்செற் வெற்றி என்ற நிலைமை அந்த அணிக்கு இருந்தது. அதேநேரம் கிண்ணக் கனவைத் தக்கவைக்க இரண்டாவது செற்றைக் கைப்பற்ற வேண்டும் என்ற சிக்கல் என்.சி.சி. அணிக்கு இருந்தது.

இரண்டாவது செற் 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இமையாணனின் வசமானது. முடிவில் அந்த அணி 2:0 நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-108)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடத்த பொது கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. எனவே அனைத்து கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களையும், புதிதாக இணைய விரும்புவோரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)



## குட்டி டோனி

ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக விளை யாடிவரும் பன்ட், 'குட்டி டோனி' என்று சக வீரர் பில்லிங்ஸ் புகழாரம் சூட்டினார். ரிசப் பன்டின் ஆட்டம் சிறப்பாக உள்ளது. இலக்குக் காப்பு மற்றும் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்படுகிறார். குறைந்த அளவான ஆட்டங்களில் விளையாடி இருந்தாலும், அவரின் ஆட்டம் வியப்பாக இருக்கிறது. நிச்சயமாக கூறலாம், டோனியின் இடத்தை நிரப்பும் திறமை பன்டிடம் உள்ளது. இருந்த போதிலும் டோனிக்கு நிகர் டோனிதான் என்று பில்லிங்ஸ் மேலும் தெரிவித்தார். இந்திய அணியின் முன்னாள் வீரர் கங்குலி, ரி-20 ஆட்டங்களில் டோனி சிறந்தவர் அல்லர் என்று விமர் சித்திருந்தார். (ம)

## கே.சி.சி.யின் துடுப்பாட்டத்தில் விக்ரோறியன்ஸை வென்றது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 21
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் ,துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் விக்ரோறியன்ஸை வென்றது சென்றலைட்ஸ் அணி.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக ஜேம்ஸ் 128 ஓட்டங்களையும், எடின் 68 ஓட்டங்களையும், வதுசனன் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சனத் அதிகபட்சமாக 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

180 பந்துகளில் 331 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியனஸ் 168 ஓட்டங்களக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ராஜ் 32 ஓட்டங்களையும், பிரணவன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் அலன் ராஜ், ஜேம்ஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும், சௌமிதரன் 2 இலக்குகளையும், மயூரன், செல்ரன், ஜெரிக் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-23)



ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் டெல்லி - ஹைதராபாத் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தைப் பார்ப்பதற்காக இந்தியாவின் நட்சத்திர பூப்பந்தாட்ட வீராங்கனை பி.வி. சிந்து வந்திருந்தார். அவர் ஹைதராபாத் அணிக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் அந்த அணியின் ஜெர்சியை அணிந்திருந்தார். (ம)


## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 21
யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கிச்சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான தொடரின் ஆட்டங்கள் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை கிறாஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரார் அணியை எதிர்த்து நியூவாரியர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## தீவக கழகங்களின் கால்பந்துத் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 21
தீவக கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்துத் தொடரொன்று இன்று ஆரம்பமாகிறது.

நண்பர்கள் விளையாட்டுக் கழகமும் நண்பர்கள் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் இந்தத் தொடரில் மொத்தம் 27 கழகங்கள் பங்கு பற்றுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)



## கரவெட்டி இளைஞர் கழக பெருவிளையாட்டு இன்று

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுக்கள் சில கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. காலை 8 மணிக்கு இருபாலருக்குமான கயிறுழுத்தலும், 9 மணிக்கு இருபாலாருக்குமான கபடியும், பிற்பகல் 2 மணிக்கு கரம் தொடரும் இடம்பெறவுள்ளன. (ம-108-422)

# முரளிக்கு விருது

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் 'ஹோல் ஒப் பேம்' விருதுக்கு இலங்கை அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டுக்காக சேவையாற்றியவர்களுக்கு இந்த விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான விருது முரளிக்கு வழங்கப்படவுள்ளது என்று பன்னாட்டு கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இந்த கௌரவிப்பின் உத்தியோக பூர்வ நிகழ்வு வரும் ஜூன் மாதம் இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள மினி உலகக்கிண்ணத் தொடரின் போது நடைபெறும். இந்த விருதுக்கு தெரிவுசெய்யப்படும் முதல் இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்திய அணிக்கு மீண்டும் வருவேன்

## யூசொப் நம்பிக்கை

இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிக்கும் நம்பிக்கையை அதிரடி வீரர் யூசொப் பதான் வெளிப்படுத்தினார்.

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா அணிக்காக யூசொப் பதான் விளையாடி வருகிறார். கடந்த சில ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியுள்ளார். அரைச்சதமும் இதில் அடங்குகிறது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் மீண்டும் இந்திய அணியில் இடம்பிடிக்கும் நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார்.

"இந்திய அணிக்காக விளையாடும் வாய்ப்பை பெறுவதில் எனக்கு முன்பாக எவர் இருக்கிறார்கள் என்பது ஒரு பிரச்சினையே இல்லை. எனக்கென்று சிறப்புத் திறமை இருக்கிறது என்றே கருதுகிறேன். இதனால் என்னுடன் வேறு எவரும் போட்டியிட (வாய்ப்பை பெறுவதில்) முடியாது. தொடர்ந்து சிறப்பாக விளையாடி னால், நிச்சயம் ஒரு நாள் இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்கும். நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரை இந்திய அணிக்குத் திரும்ப உகந்த பாலமாகப் பயன்படுத்துவேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



# பார்சிலோனா வெளியேற்றம்

## கண்ணீர் மல்கினர் மெஸ்ஸி, நெய்மர்

ஐரோப்பிய கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் காலிறுதியுடன் வெளியேற்றப்பட்டது பார்சிலோனா.





சம்பியன்ஸ்லீக்தொடரின் விதிமுறையின்படி காலிறுதி மற்றும் அரையிறுதிக்குத் தகுதிபெறும் அணிகள் தன்னுடன் விளையாடும் அணியை எதிர்த்து உள்ளூர், வெளியூர் என தலா ஒவ்வொரு முறை மோதவேண்டும். இரண்டு ஆட்டங்களின் நிறைவில் எந்த அணி கூடுதல் கோல்களைப் பெறுகிறதோ அந்த அணிக்கே வெற்றி. காலிறுதியின் முதலாவது சுற்றில் 3:0 என்ற கோல் கணக்கில் யுவன்டாஸ் வென்றிருந்தது. இதனால் நேற்றுமுன்திளம் நள்ளிரவு (இலங்கை நேரப்படி) நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் யுவன்டாஸை கோல்பெற விடாமல் தடுக்கும் அதேநேரம் குறைந்த பட்டம் 4 கோல்களைப் பெற்றாலேயே அரையிறுதிக்குத் தகுதிபெறலாம் என்ற சிக்கல் பார்சிலோனாவுக்கு இருந்தது. இந்தப் பரபரப்பான கட்டத்தில் ஆரம்பமானது ஆட்டம்.

கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்கள் பதிவானவில்லை. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் அரையிறுதிக்குச் சென்றது யுவன்டாஸ்.

இந்தத் தோல்வியை அடுத்து பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர்களான நெய்மர், மெஸ்ஸி இருவரும் கண்ணீர் மல்கினர். யுவன்டாஸ் வீரர்கள் கனவான் தன்மையுடன் அவர்களைச் சமாதானம் செய்தமை பலராலும் காராட்டப்பட்டு வருகிறது.

முன்னதாக, பார்சிலோனா அணியின் பரம எதிரி அணியான ரியல் மட்ரிட் அரையிறுதிக்குத் தகுதிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பல்க்நெர் நீக்கம் ஆஸி. அறிவிப்பு

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. சகலதுறை வீரரான பல்க்நெர் ஆஸ்திரேலிய அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தொடர் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்திய ஆடுகளங்கள் பொதுவாக வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவை என்பதால் வேகப்பந்து வீசக்கூடிய சகலதுறை வீரர்களை ஒவ்வொரு அணியும் தக்கவைக்க முனைப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கையில், மிகச் சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவரான பல்க்நெரை அணியில் இருந்து நீக்கியது கண்மூடித்தனமான நடவடிக்கை என்று விமர்சிக்கப்படுகிறது. காயம் காரணமாக ஓய்விலிருந்த ஸ்ராக், கிறிஸ் லின் ஆகியோர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

ஆஸ்திரேலிய அணி விவரம் சிமித் (தலைவர்), வோர்ணர், பின்ஞ், மக்ஸ்வெல், வேட், லின், ஹென்றிக்ஸ், கம்மின்ஸ், ஹஸ்டிங்ஸ், ஹசில்வூட், ஹெட், பட்டின்சன், ஸ்ராக், ஸ்ரொய்னிஸ், சாம்பா. (ம)



# மினி உலகக் கிண்ணம்; தெ.ஆபிரிக்கா அறிவிப்பு

இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத்தக்கான (மினி உலகக்கிண்ணம்) தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்னுக்கு இடம் கிடைக்கவில்லை.



பிளன்டரின் காயம் தொடர்பில் உறுதித்தன்மையற்ற தகவல் நிலவுவதால் அவரும் அணியில் இருந்து நீக்கப்பட்டார். வேகப்பந்து வீச்சாளர் மோர்னி மோர்கல், சுழற்பந்து வீச்சாளர் மஹராஜ் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். வில்லியர்ஸ் தலைவராகத் தொடர்கிறார்.

தென்னாபிரிக்க அணி விவரம் - வில்லியர்ஸ் (தலைவர்), அம்லா, குயின்டன் டி ஹொக், பிளாசிஸ், டுமினி, மில்லர், பெக்கார்டின், மொறிஸ், பார்நெல், பெலுக்வயோ, ரபாடா, தாகிர், பிஸ்டோரியஸ், கேஷ். (ம)

## கருவைச் சுமந்தபடி ஆஸித் தொடரை வென்றார் செரீனா

செரீனா வில்லியம்ஸ், நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக நடந்து முடிந்துள்ள ஆஸ்திரேலியத் தொடரைக் கைப்பற்றிய போது கிட்டத்தட்ட 8 வாரங்கள் கர்ப்பமாக இருந்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



தற்போது செரீனா 20 வாரங்கள் கர்ப்பமாக உள்ளார் என்று அவரது செய்தித் தொடர்பாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி செரீனா தற்போது 20 வாரங்கள் கர்ப்பமாக உள்ளார் என்று தெரியவருகிறது. ஆஸ்திரேலியத் தொடர் ஜனவரி மாதம் இறுதிப் பகுதியில் முடிவடைந்தது. அதன் பின்னர் தற்போது 12 வாரங்கள் சென்றுவிட்டன. எனின் செரீனா ஆஸ்திரேலியத் தொடரை வென்றபோது அவர் இரண்டு மாதங்கள் கர்ப்பமாக இருந்துள்ளார்.

"இந்த வருடத்தின் எஞ்சிய தொடர்களில் இருந்து செரீனா விலகியுள்ளார். ஆனால் அவர் ஓய்வு பெற்றுவிடவில்லை. அடுத்த வருடம் களத்தக்குத் திரும்புவார்" என்று அவரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (ம)



## மொனாக்கோ தொடரில் அண்டி முர்ரே முன்னேற்றம்

மொனாக்கோ ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் இங்கிலாந்து வீரர் அண்டி முர்ரே.

முர்ரேயை எதிர்த்து 28 ஆம் நிலை வீரர் முல்லர் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 7:5, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார் முர்ரே. (ம)

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

**தென் கிழக்கு பல்கலைக்கழக வெளிவாரி நுழைவுப் பரீட்சைக்கு**
சனி, ஞாயிறு 1.00 - 5.00

**பல்கலைக்கழக விசேட கற்கை தெரிவுகளுக்கு**
சனி, ஞாயிறு 2.00 - 5.00

**சட்டமாணி நுழைவு**
சனி 12.00 - 4.00

**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
சனி 10.00 - 2.00

**SLAS**

**பிரிவு I**
சனி, ஞாயிறு
9.00 - 3.30 மணி வரை

**பிரிவு II**
ஞாயிறு மட்டும்
9.00 - 4.00 மணி வரை

**பிரிவு III**
திங்கள் - வியாழன் வரை பி.ப. 5.00 - 7.00 மணி வரை

**முகாமைத்துவ உதவியாளர்**
**பிரிவு I**
ஞாயிறு 11.30 - 3.00

**பிரிவு II**
ஞாயிறு 1.00 - 4.30

**பிரிவு III**
செவ். புதன்
பி.ப. 4.30 - 6.00

076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கிஅருகில்)
C/29434



# கிங்ஸ் லெவன் பஞ்சாப்பை பந்தாடினார் ஜோஸ் பட்லர்

## அம்லாவின் சதம் வீண்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் நிர்ணயித்த 199 ஓட்டங்கள் என்ற இலக்கை பட்லரின் அதிரடி கைகொடுக்க இலகுவாக எட்டியது மும்பை.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணிக்கு ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் மார்ஸ். அணி 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 26 ஓட்டங்களுடன் மக்கெலிநகனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் மார்ஸ். சகாவை போல்ட் செய்தார் பாண்டியா. அம்லா, மக்ஸ்வெல் இணைந்து சிறந்த ஆட்டத்தை வழங்கினர். முன்வரிசை வீரர்களால் வீணடிக்கப்பட்ட பந்துகள் இந்த இணையின் அதிரடியால் சமன்செய்யப்பட்டது. 18 பந்துகளில் 40 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் மக்ஸ்வெல். மறுமுனையில் சதம் கடந்தார் அம்லா. நடப்பு ஐ.பி.எல். தொடரில் இது இரண்டாவது சதமாகும். முடிவில் 198 ஓட்டங்களைக் குவித்தது பஞ்சாப்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பைக்கு ஆரம்ப வீரர்கள் பதற்றம் இல்லாத அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். பார்திவ் பட்டேல், பட்லர் அதிரடியில் 3.5 பந்துப்பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களைத் தொட்டது மும்பை. அணி 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 37 ஓட்டங்களுடன் பட்டேல் ஆட்டமிழந்தார். பஞ்சாப்பின் பந்துவீச்சாளர்களை பிரித்து மேய்ந்தார் பட்லர். 24 பந்துகளில் அரைச்சதம் கடந்து 37 பந்துகளில் 77 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். ரணாவும் அரைச்சதம் கடந்தார். முடிவில் 27 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளால் வென்றது மும்பை.

(ம)

## போராடி வென்றார் நடால்

மொனாக்கோ ரென்னிஸ் தொடரில் நேற்றுக் காலை நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் நடால் போராடி வெற்றி பெற்றார்.

ஸ்பெய்ன் வீரர் நடாலை எதிர்த்து இங்கிலாந்தின் எட்மன்ட் மோதினார். நடால் இலகுவாக வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மது மிகவும் கடினமான ஒன்றாகவே அமைந்தது.

முதல் செற்றை 6:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். எனினும் அவர் இரண்டாவது செற்றை 5:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார். ஆட்டத்தின் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றை கைப்பற்றுபவரே வெற்றியாளர் என்ற நிலையில் அந்த செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் 2:1 என்ற செற் கணக்கில் வென்றார் நடால். இந்த ஆட்டம் 2 மணிநேரம் 20 நிமிடங்கள் நீடித்தது. (ம)



**குவைத் நாட்டில் அதிஉயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு**

குவைத் நாட்டில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் கீழ்க்காணும் வேலைவாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

**Age Limit below 35**

| Position | Nos | Salary(kwd) |
|---|---|---|
| Counter Sales man | 30 | 120 |
| Bell boy | 30 | 100 |
| Waiter/Waitress | 50 | 100 |
| Room Attendant | 20 | 100 |
| House keeping supervisor | 10 | 150-175 |
| Public Area cleaner | 25 | 100 |
| First time Driver | 20 | 100 |

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம் எதிர்வரும் 24 ஆம் திகதி எமது நிறுவனத்தில் வெளிநாட்டவர்களால் நேர்முகப் பரீட்சை நடைபெறும். தகுதியானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

Relianceint consultants (Pvt) (Ltd)
No- 142, New moor street.
Colombo-12 (LL-No-2772)
011 524 4146, 077 721 5291




# தீவுகள் - பாகிஸ்தான் டெஸ்ட் இன்று

மேற்கிந்தியத் தீவுகள் - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. பாகிஸ்தான் அணி, மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் மற்றும் ரி-20 தொடரை முறையே 2:1, 3:1 என்ற அடிப்படையில் பாகிஸ்தான் கைப்பற்றியது. இந்தநிலையில் டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

தனது சொந்த மண்ணில் ஆதிக்கம் செலுத்தி ரி-20, ஒருநாள் தொடர்களை மேற்கிந்தியத் தீவுகளால் கைப்பற்ற இயலவில்லை. இதனால் அந்த அணி குறைந்தபட்சம் டெஸ்ட் தொடரையாவது கைப்பற்ற முனைப்புக் காட்டவேண்டும் என்ற கௌரவச் சிக்கல் உள்ளது.



பாகிஸ்தானைப் பொறுத்தவரை இந்தத் தொடர் வரலாற்றுச் சிறப்பு மிக்க தொடராக அமைந்துள்ளது. அந்த அணியின் தலைவர் மிஸ்பா, நட்சத்திர வீரர் யுனிஸ்கான் இருவரும் இந்தத் தொடருடன் ஓய்வு பெறுகின்றனர். இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட்டின் முக்கிய புள்ளிகளாக விளங்கிய அவர்களுக்கு வெற்றியுடன் விடைகொடுக்க வேண்டிய தேவையும் கட்டாயமும் பாகிஸ்தான் அணிக்கு உள்ளது. டெஸ்ட் ஆட்டங்களில் யுனிஸ்கான் இதுவரை 9 ஆயிரத்து 977 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அவர் இன்னும் 23 ஓட்டங்களைப் பெற்றால் 10 ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டிய முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பைப் பெறுவார். எனவே யுனிஸ்கானின் வரலாற்று முக்கியத்துவம் மிகுந்த சாதனை அடைவாலும் இந்தத் தொடர் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.